Registered as a NewsPape

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

பக்கங்கள் 16

விலை ரூபா 12.00


நாதம் 13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஆனி 07 | 21-06-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 123


கிளி நகரில்
குறித்த தவணையில்
சிறந்த அச்சு
வேலைகளுக்கு
நாடவேண்டிய நிறுவனம்

முடியரசி பதிப்பகம்
முதன்மை சாலை,
கிளிநொச்சி


பிறமுக அறிமுகம்
பக்கம் .03


சமாதானத்தின் கதி
பக்கம் .03


மனிதன் ஒரு பூகோளப் பிராணி
பக்கம் .05


21ம் நூற்றாண்டின் கழிவாளம்
பக்கம் .10

## பொருளாதார வீழ்ச்சி . திறைசேரி காலி - கடன் பளு அதிகம் . ஆனால் ...

# அடுத்த மூன்றாண்டுக்கான பாதுகாப்புச் செலவினம் ஆயுதக் கொள்வனவு குறித்து அரசு ஆராய்கிறது!

**அரச ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களைக்கூட வழங்க முடியாதளவிற்கு நாட்டில் நிதி நெருக்கடி என்றும் இல்லாத அளவிற்கு மிக மோசமாகவுள்ளதாக அரசு கூறிவரும் அதேவேளை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு முப்படைகளுக்கும் தேவையான ஆயுத தளபாட கொள்வனவுகள் மற்றும் பாதுகாப்பு செலவினங்கள் குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விலைவாசி உயர்ந்து செல்வதுடன் வாழ்க்கைச் செலவினங்களும் கட்டுமீறிச் செல்கின்றன.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் அடுத்து வரும் மாதங்களில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் போன்றவற்றை வழங்குவதற்குக்கூட பணம் இல்லாதநிலை உருவாகி யுள்ளதாக சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும், பிரதி நிதியமைச்சர் பந்துல குணவாத்தனவும் அச்சமும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை சிறிலங்காவின் திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்தை இராணுவ மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்பைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக மா்நாடுகளை நடாத்தி வருகின்றார். இதில் 2003,2004,2005ஆம் ஆண்டுகளுக்கான இராணுவ மற்றும் பாதுகாப்புத் தேவைகள் குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்வனவுகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறார்.

அரசின் இத்தகைய நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மோசமாக்குவதுடன் நடுத்தர வகுப்பினரையும் அதற்கு கீழ் பட்டோரையும் மிக மோசமான வறுமை நிலைக்கு இட்டுச்செல்லும் எனவும் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# சம்பளம் வழங்க பணம் இல்லை, பெரும் நிதி நெருக்கடியில் அரசு

### பிரதி நிதிஅமைச்சர் பந்துல குணவர்த்தன

அடுத்தவாரம் அரச ஊழியர்களிற்கு சம்பளம் வழங்க முடியாத அளவிற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதென்று பிரதி நிதிஅமைச்சரும் கிராமிய அபிவிருத்தி அமைச்சருமான பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

நிதி நெருக்கடியை சமாளிக்க வெளிநாடு களிலிருந்து கடன் பெற வேண்டியிருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் கடந்தகால அரசின் தவறான நிர்வாகம் இந்த நிதி நெருக்கடிக்கு வழி சமைத்தது என்று தெரிவித்துள்ளார்.


கடும் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் முந்தைய அரசாங்கம் சீனாவிடமிருந்து 283 மில்லியன் ரூபா அளவிற்கு ஆயுதங்களை கடனாக கொள்வனவு செய்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் இந்த கடனை எட்டு வருடத்தில் திருப்பி செலுத்த வேண்டியிருப்பதாக குறிப்பிட்டார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிலிருந்து பெருமளவு நிதி பெறப்பட்டு திறைசேரி மூலம் செலவிடப்பட்டிருப்பதால் ஓய்வு பெறுகின்ற ஊழியர்களுக்கு சேமலாப நிதி, நம்பிக்கை நிதி என்பவற்றை வழங்குவதில அரசாங்கம் கடும் நெருக்கடிகளை சந்தித்து வருவதாக கூறப்படுகின்றது.

கடந்த ஆட்சிக்காலத்தில் கடந்த வருடம் ஊழியர் சேமலாப நிதியிலிருந்து தொண்ணூற்று எட்டு வீதமான நிதி பெறப்பட்டு திறைசேரி மூலம் செலவிடப்பட்டிருக்கின்றது.

இதேபோன்று ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து எழுபது வீதமான நிதி அரசாங்கத்தினால் பெறப்பட்டிருக்கின்றது. இவற்றை தற்போதைய நிலையில் மீளளிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதாகவும்அரசவட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

கடந்த அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளினால் தற்போது அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பன வழங்குவதிலும் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.




## ஆபத்தான நிலையில் குழந்தை அனுமதி

(நமது நிருபர்)

சளிக்கான மருந்து என சத்திர சிகிச்சை ஸ்பிறிற்றை இரண்டரை மாத வயதுடைய குழந்தைக்கு வழங்கியதால் அக் குழந்தை ஆபத்தான நிலையில் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் கிளிநொச்சிப் பிரதேச அரசினர் மருந்தகம் ஒன்றிலேயே நிகழ்ந்தது.

கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த. சுரேஸ் என்பவரின் குழந்தையே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

## நேர்நோக்கு

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ் 90 நாட்களுக்குள், நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களில் வழிபாட்டிடங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் என்பனவற்றில் நிலை கொண்டுள்ள படையினர் வெளியேறி அவற்றை உரிய செயற்பாடுகளுக்கு ஒப்படைக்க வேண்டும் என்பது முக்கியமான ஓர் அம்சமாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் பொருமளவான வழிபாட் டிடங்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் என்பனவற்றில் இவ்வாறு இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால் மக்கள் இவற்றின் பயன்பாட்டை இழந்ததுடன், இவற்றைச் சூழவுள்ள பெருமளவான குடியிருப்புகளிலிருந்து மக்கள் வெளியேற்றப் பட்டனர், அல்லது அச்சத்தின் மத்தியில் வாழவேண்டிய நிர்ப் பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

இவ்வாறான சூழலில் இயல்புநிலை ஒன்றை உருவாக்குவதற்கு இந்தப் படைமுகாங்கள் அகற்றப்படுவது அவசியம் என்பதைபுலிகள் வலியுறுத்தியதையடுத்து அதனை ஏற்றுக்கொண்டே இந்தப் படை முகாம்களை அகற்ற அரசாங்கத் தரப்பு இணங்கி ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டது.

ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில் தானாகவே விரைவு காட்டியிருக்கவேண்டிய அரசாங்கத்தரப்பு அதனை இழுத்தடித்து வருவதுடன் மேலும் இந்த நடவடிக்கையை தாமதப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

ஒருபுறம் முகாம்களை படையினர் புனரமைப்பு செய்து பலப்படுத்தி வருவதாகத் தகவல்கள் வருகின்றன, இன்னொருபுறம் இவற்றிலிருந்து அகலும் படையினர் இதற்கு அண்மையிலுள்ள தனியார் வீடுகள், பயன்படுத்தாத கட்டடங்களில் முகாம் அமைக்க திட்டமிட்டு வருவதாகவும் தெரியவருகிறது. இதனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இவ்விடயத்தைச் சேர்த்துக் கொண்டமைக்கான பயன் கிட்டுமா? என்ற கேள்வி எழுகிறது.

அதேவேளை அரசாங்கத்தரப்பு ஓரிரு ஆலயங்கள், பாடசாலைகள் தவிர மற்றெல்லா இடங்களில் இருந்தும் படையினர் வெளியேறி விட்டதாக இடையிடையே தகவல்களை வெளியிடுவதுமுண்டு இது அந்நேரத்தில் அரசாங்கத்தின் மீது போடப்படும் அழுத்தங்களைத் தணிக்க உதவலாம். ஆனால் அரசாங்கத்தின் மீது. மக்களுக்கு உள்ள நம்பிக்கையை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை அரசாங்கம் உணர வில்லைபோலும்.

அத்துடன் படையினர் வெளியேறாத பாடசாலைகள், வழிபாட்டிடங்கள், பொதுக்கட்டடங்களின் விபரங்களை தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்க தரப்பினர் அடிக்கடி கேட்டு வருகின்றனர். இதுவும் அழுத்தத்திலிருந்து விடுபட அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையே.

ஏனெனில் படையினர் நிலைகொண்டுள்ள இடங்கள் பற்றி அரசாங்கத்துக்கோ பாதுகாப் அமைச்சுக்கோ தெரியாது என் எவ்வாறு நம்பமுடியும்? இந்நி யில் இவ் விபரங்களைத் திரட் தருமாறு கோருவதில் எது அர்த்தமும் இல்லை.

எனவே சமாதான முயற்சி அரசாங்கத் தரப்பிற்கு உண் லேயே நம்பிக்கை இருக்குமா புரிந்துணர்வு ஒப்பந்த மனப்பூர்வமாக நிறைவேற் சிறந்தது. அதுவே மக்கள் மத் அரசாங்கத்தின்மீது நம்பிக் ஏற்படுத்தும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

# சந்தேகம் தரும் ஒப்பந்தங்கள்

சிறிலங்கா அரசாங்கம் அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகளுடன் அண்மைக் காலங்களில் இரகசியமாகவும் வேகமாகவும் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் யாவும் இருதரப்பு நலன் பேணும் ஒப்பந்தங்கள் என்றே கூறிக் கொள்ளப்பட்டாலும் உண்மையில் அவை பாதுகாப்புடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவையாகவும் சிறிலங்காவின் முப்படைகளது பலத்தையும், ஆயுத இராணுவ உபகரணவளத்தையும் மேம்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டவையாக உள்ளன என்ற அரசியல் இராணுவ அவதானிகள் கருதுகின்றனர்.

அதுமட்டுமல்லாது இந்த ஒப்பந்தங்கள் ஏதோ ஒருவகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களை இலக்கு வைத்ததாகவும் தொலைநோக்கில் தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கும், அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்களின் பொருண்மிய வளங்களுக்கு அச்சுறுத்தலாகவும் இருக்கப்போகின்றது என்றும், இதுவும் மிகவும் திட்டமிட்ட வெளிநாட்டு ஆலோசனை மற்றும் உதவிகளுடன் கூடியதான பேரினவாதச் சதி என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதில் சிறிலங்காவின் பொருளாதாரவளத்தை பேணுவதற்கு அல்லது மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான எத்தகைய திட்டமும் கிடையாது இன்னும் தெளிவாகச் சொல்வதானால் சிறிலங்காவின் பொருண்மிய வளங்கள் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அரச அங்கீகாரத்துடன் மேலும் அதிகளவில் மிக நாசூக்கமாக சுரண்டப்படுவதற்கான வாய்ப்பு வசதிகளையே இவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தனக்கு தலைபோனாலும் எதிரிக்கு சகுனப்பிழையாக இருந்தால் போதும் என்று நினைக்கின்ற ஒரு அடிமுட்டாள் தனமான அணுகுமுறையையே சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருவதாகவே தென்னிலங்கையின் பொருளியலாளர்களும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

ஒரு நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பை இறுக்கமாகவும் உறுதியாகவும் வைத்திருக்க நடவடிக்கைகளை மேற் கொள்வதன் பொதுநோக்கமும், அதனை மேலும் வளப்படுத்தி ஆட்பலத்தையும் ஆயுத பலத்தையும் பெருக்க, அதலபாதாளத்தை எட்டியுள்ள பொருளாதார நிலையைப் புறந்தள்ளி, நிதிநெருக்கடியை மறந்து, செயற்படுவது என்பதன் தனிநோக்கமும் வேறு வேறானவையாகும். பின்னது கடுமையான பாரதூரமான உள்நோக்கத்தைக் கொண்டது என்பதில் ஐயமில்லை.

நாடும் மக்களும் மிகவும் மோசமான எதிர்காலத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு கடந்த அரசின் தீர்க்க தரிசனமற்ற நடவடிக்கைதான் காரணம் என எச்சரித்து அதற்கான விளக்கத்தையும் அளிக்கும் அரசு, கடந்த அரசு விட்ட அதே தவறை தொடர்கின்றதென்றால் அது மேலும் அதிகளவிலான சந்தேகத்தையை ஏற்படுத்துகின்றது எனலாம்.


முன்னைய அரசு சமாதானத்திற்கான யுத்தம் என்று போர்ப் பிரகடனம் செய்தபடியே பாதுகாப்பு செலவினத்தை அதிகரித்து, படைபலத்தைப் பெருக்கி ஆயுதவளத்தை விஸ்தரித்தது. ஆனால் இன்றைய அரசோ சமாதானத்தை வலியுறுத்தி அதற்காக முனைந்து செயற்படுவதாகக் கூறிக் கொண்டு, பாதுகாப்புச் செலவினத்தை குறைக்காது படைபலத்தை ஆளணிமூலம், ஆயுதவளமூலமும் விஸ்தரிக்க துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்வது மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த அரசின் நிலைப்பாட்டின் உறுதியில் நம்பிக்கையிழக்கச் செய்வதாக உள்ளது என்றே கூறவேண்டும்.

இந்த நடவடிக்கை தமிழ்மக்களை மீண்டும் ஏமாளிகளாக்கும் ஒரு இராணுவ அரசியல் வியூகமாகவும் ஆய்வாளர்கள் நோக்கத் தொடங்கி விட்டனர். அதன் வெளிப்பாடான கருத்துருவாக்கம் பகிரங்கமாகவே விவாதிக்கப்படவும் தொடங்கிவிட்டது. இது சமாதானம் பற்றிய நம்பிக்கையினை பாதிக்கப்பட்ட தீர்வை விரும்பி நிற்கும் மக்களிடையே பதற்றத்தையும் அவநம்பிக்கையையும் தோற்றுவிக்கும் ஒரு ஆபத்தான நிலையின் அறிகுறியாகும்.

ராஜதந்திர ரீதியில் இராணுவத்தை கட்டுப்படுத்தி அமைதிக்கான புறநிலையை தோற்றுவிக்கும் முயற்சியில் அரசாங்கம் உறுதியாகச் செயற்படவில்லை, அல்லது ராணுவ, போர் தொடர்பான நிலைப்பாடு, அரசின் ராஜதந்திர ஒப்பந்த விதிமுறைகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பை நல்க மறுக்கிறது என்ற இரு கருத்துக்களே இன்றைய இயல்பு நிலை தொடர முட்டுக்கட்டையாக இருக்கும் காரணிகள் என்ற கருத்து வெளிப்பாடல்களையும் எவரும் நிராகரிக்க முடியாது என்றே கூறவேண்டும்.

இந்தச் சிக்கல் தெளிவை ஏற்படுத்தி குழப்ப முடிச்சுக்களை அவிழ்க்க வேண்டிய பொறுப்பு அரசுக்கே உரியதாகும். இதனை விடுத்து கட்டற்ற முறையில் வளர்க்கப்பட்டு விட்ட இராணுவத்தின் கருத்து வெளிப்பாடுகள் தொடர்ந்தும் புரிந்துணர்வு ஒப்பந்த விதிகளை புறந்தள்ளிச் செயற்பட அரசு அங்கீகரிக்குமேயானால் அல்லது மௌன அனுமதி வழங்குமேயானால் அரசின் சமாதான செயற்பாடுகள் குறித்து அமைதியை விரும்பும் மக்கள் அனைவருமே அவநம்பிக்கையீனம் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதுடன், சமாதான சூழலை புரிந்துணர்வின்றி சிதைத்த பழியையும் அரசே ஏற்க நேரிடும்.






# பொருளாதாரச் சுரண்டலுக்குள் சிக்கியுள்ள யாழ்ப்பாணக் குடாநாடு

– யாழினி –

தமிழரின் தேசிய உரிமைப் போராட்டத்தைச் சிதைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கங்கள் காலம் காலமாக அவர்களின் பொருளாதார வளங்களையும் உற்பத்திக் கேந்திரங்களையும் அழிப்பதில் அதிக ஆர்வம் காட்டி வந்துள்ளன. போர் அதிகம் முனைப்புப் பெறாத காலத்தில் தமிழரின் சொத்துக்கள் சூறையாடப் பட்டதோடு எரித்து அழிக்கப்படுவது வழக்கமாக இருந்தது.

போர் விரிவடைந்த பின்னர் அதற்கு அதிகம் வாய்ப்பில்லாமல் போக விமானக்குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்கள் மூலம் இந்தப் பொருளாதார அழிவுகள் மேற் கொள்ளப்பட்டு வந்தது. இதன் மூலம் தமிழ் மக்கள் பொருளாதாரரீதியில் வளர்ச்சி பெற்றுவிடாமல் சிறிலங்கா அரசாங் கங்கள் நடவடிக் கைகளை எடுத்து வந்தன. சுய பொருளாதார மேம்பாட்டை அடைந்து விடாமல் இருப்பதற்காக அவ்வப் போது பொருளா தாரத் தடைகளுக்கும் மத்தியில் சில நெகிழ்வுப் போக்குகளும் கடைப்பிடிக் கப்பட்டன.

யுத்த காலத்தில் இத்தகைய பொருளாதார அழிப்பு கொள்கையை இறுக்கமாக நடை முறைப்படுத்தியதால் தமிழரின் தாயகப் பிரதேசங்கள் மோசமானதொரு நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. தனியே விவசாயப் பொருளாதாரத்தை மட்டும் நம்பியிருக்க வேண்டியளவுக்கு தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது கைத்தொழில்வளர்ச்சியில் தமிழர்கள் பல தசாப்பதங்கள் பின்தங்கிய நிலையில் தான் இருந்து கொண்டிருக்கின்றனர்.

தாயகப் பிதேசத்தில இருந்த அத்தனை கைத்தொழில் மையங்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் என்பன திட்டமிட்ட இலக்கு வைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் ஏதோ ஒரு வகையில் தெற்கை நம்பி வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக் கின்றார்கள். சிறிலங்கா அரசாங்கங்கள் இதுவரை . காலமும் அமுல் நடத்தி வந்த தமிழர் மீதான பொரு ளாதார அழிப்புப் போர் கணிசமான வெற்றியைக் கண்டிருக்கின்றது.

இப்போது நிலைமை மாறியிருக்கின்றது. நேரடியாக தமிழரின் பொருளாதாரக் கேந்திரங்களை அழிக்க முடியாத அரசாங்கம், தமிழரின் எஞ்சிய வளங்கள் அனைத்தையும் சுரண்டிக் கொள்ளத்தக்க வகையில் அதற்காக வாசல்களை திறந்து விட்டிருக்கின்றது. அதாவது ஒரே வரியில் சொல்வதானால் முன்னர் பொருளாதார அழிப்புப் போர் நடந்தது. இப்போது பொருளாதாரச் சுரண்டல் போர் ஊக்குவிக்கப்பட்டிருக் கின்றது.

யாழ்ப்பாணத்துக்கான ஏ9 வீதி திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தை நோக்கி அனைத்துவிற்பனையாளர்களும் உற்பத்தியாளர்களும் தமது சந்தை வாய்ப்புக்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் எத்தனையோ கைத்தொழில் உற்பத்திகளும், தனித்துவமான விவசாய, உள்ளூர் உற்பத்திகளும் கோலோச்சிய காலம் ஒன்று இருந்தது. இன்று அந்தத் தனித்துவ நிலை மட்டுமன்றி கைத்தொழில் உற்பத்திகளைக் கூடச்செய்ய முடியாதளவுக்கு பொருளாதார அழிப்பு நடந்திருக்கிறது.

சமாதானச் சூழ்நிலை உருவாகத் தொடங்கியவுடனே குடாநாட்டுக்குள் படையெடுக்கத் தொடங்கிய வர்த்தக முதலாளித்துவ சக்திகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தி இங்குள்ள வளங்களை மேலும் சுரண்டிக்கொண்டு செல்லவே ஆர்வம் காட்டியிருந்தனர். ஒருவராவது இங்கு அழிந்தோ சிதைந்தோ போயிருக்கின்ற கைத்தொழில்களை புனரமைப்பதற்கோ மீளத்தொடங்குவதற்கோ தயாராக இல்லை.

யுத்தத்தினால் அழிவுற்ற கைத்தொழில் மையங்களை மீளத் தொடங்குவதற்கு தென்பகுதி முதலீட்டாளர்கள் எவரும் கைகொடுக்க முன்வராததற்குக் காரணமே தமது உற்பத்திகளை இங்கு சந்தைப்படுத்த முடியாது போய்விடுமென்ற அச்சமேயாகும். ஆனால், இங்கு கும்பல் கும்பலாக வந்து தமது சந்தை வாய்ப்புக்களை ஆராய வரும் வர்த்தகப் பெரும் புள்ளிகளை வரவேற்பதற்கென்றே ஒரு சிலர் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இங்கு வருகின்றவர்களும் தாம் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயவே வருவதாகவும் இங்குள்ள அழிவுற்ற தொழில் முயற்சிகளை மீளக் கட்டியெழுப்பப் போவதாகவும் கதைவிடுவதில் மட்டும் குறைவிடுவ தில்லை. ஆனால், இவர்களில் ஒருவராவது யாழ்ப்பாணத்தில் ஒரு தொழில் முயற்சியில் ஒரு சதத்தையாவது முதலீடு செய்யத்தயாராக இல்லை என்பதே உண்மை. இங்கிருந்து வருமான மூலங்களைக் கவர்ந்து கொண்டு கொழும்புக்குக் கொண்டுசெல்வது தான் இவர்களின் ஒரே இலக்காகும்.

அழிவுகள் பொருளாதாரத் தடைகள் மத்தியிலும் யாழ்ப்பாண மக்கள் தேடிக்கொண்ட சேமிப்புக்களைச் சுரண்டிக்கொண்டு செல்வதற்காக எத்தனையோ நிறுவனங்கள் வலைவிரித்துக் கொண்டிருக்கின்றன. இதில் இப்போது நிதிநிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள் என்பனவும் இணைந்திருக்கின்றன. அரச வீங்கிகள் கடந்த காலத்தில் மாதம் ஒன்றுக்கு 100 மில்லியன் ரூபாய்களை இங்கிருந்து திரட்டி தென்பகுதிக்குக் கொண்டு சென்று கொண்டிருந்தன.

யாழ்ப்பாண மக்களின் சேமிப்புக் களை இங்கேயே முதலிட்டு பணம் வெளிச்செல்லாமல் தடுக்க எவராலும் முடியாது போயிருந்தது. இந்த நிலையில் தனியார் துறை நிதி நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் போட்டிபோட்டுக் கொண்டு யாழ் மக்களின் சேமிப்புக் களைக் கவர்ந்து செல்லத் தொடங்கியிருக்கின்ற இந்த நிலையால் குடாநாட்டு மக்களின் சேமிப்புக்களை ஒருபெரும் முதலீடாக்கி தொழிற் துறைகளை இலகுவாக ஆரம்பிக்க முடியாத நிலை தோன்றியிருக் கின்றது.

குடாநாட்டுக்கு வரும் ஒவ்வொரு வர்த்தக தொழில் நிறுவனமும் ஏதோ ஒரு சுரண்டல் திட்டத்துடன் தான் இங்கு காலடி எடுத்து வைக்கிறது. இதற்கு அடித்தளமிட்டுக் கொடுத்தவர்களும் தமிழர்கள் தான் என்பது வேதனையான விடயமாகும். கலாச்சாரக் காண்பியம் என்ற பெயரில் ஒரு களியாட்ட நிகழ்வை நடத்தினார்கள். அதில் தான் சுரண்டல் ஆரம்பித்தது. சுமார் பதினைந்து வருடங்களுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் காண முடியாமல் இருந்த சுரண்டல் டிக்கட் இப்போது பட்டி தொட்டியெங்கும் விற்பனையாக இந்த நிகழ்ச்சி தான் களம் அமைத்துக் கொடுத்தது.

பின் தங்கிய கிராமங்களில் நாளாந்தம் கூலி வேலை செய்து விட்டு வந்து அரைக்கிலோ அரிசி, 50 கிராம் சீனி என்று வாங்கிக் கொள்ளும் தொழிலாளர்கள் கூட இந்தச் சுரண்டல் டிக்கட்டை வாங்கக் கூடியளவுக்கு இதன் விற்பனை விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றது. ஒரு நேர சாப்பாட்டுக்கு வழியில்லாத குடும்பங்கள் கூட அதிஷ்ட த்தின் பெயரால் தாம் சுரண்ட ப்படுகின்றோம் என்பதை அறியாமல் தினமும் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள்.

இது போல எல்லா வகையிலும் குடாநாட்டு மக்களை ஏமாற்றி அவர்களின் சேமிப்புக்களையும் உழைப்புக்களையும் சுரண்டிக் கொண்டு போக ஏராளமானவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். வறுமை, வேலையின்மை என்பது குடாநாட்டில் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற .இந்தச் சூழலில் எத்தனை நிறுவனங்கள் இங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முன் வந்தன?

எத்தனையோ நிறுவனங்கள் இங்கே புதிதாகக் கால் பதித்துக் கொண்டிருக்கின்ற போதும், இங்குள்ள மக்களின் உழைப்புக்களில் பிழைப்பு நடத்துகின்ற போதும் விரல் விட்டு எண்ணி விடக் கூடியளவானவர்களுக்கே வேலை வாய்ப்பு வழங்கியிருக்கின்றன. போரினால் சீரழிந்துள்ள யாழ்ப்பாணத்தைப் புனரமைக்க உதவப் போகிறோம் என்று விளம்பரங்களைப் பிரசுரித்துக் கொண்டு இங்கு கால் பதிக்கின்ற வர்த்தக நிறுவனங்களின் ஏமாற்று வேலைகளைப் பகிரங்கப்படுத்துவதற்குநீண்ட கட்டுரைகளை எழுத வேண்டியிருக்கும்.

யாழ்ப்பாணத்துக்கு தரைவழிப் பாதை திறந்த பின்னர் விமான, கடல் வழிப்போக்குவரத்து மார்க்கங்களில் பயணம் செய்வோரின் தொகை குறைவடைந்தது. இதனால் இந்தச் சேவைகளில் ஈடுபட்ட நிறுவனங்கள் சேவைகளை இடைநிறுத்தும் முடிவுக்கு வர நேர்ந்துள்ளது. இந்த நிலையில் இம்மாத முதல் வாரத்தில் இருந்து புதிய தனியார் விமான சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

எக்ஸ்போ எலியேசன் நிறுவனத்தின் இந்த விமானத்தில் பயணம் செய்வதற்கு ஒரு வழிக் கட்டணமாக ரூபா 3650 அறவிடப்படுகின்றது. வான் படையினரால் நடத்தப்பட்ட ஹெலிடுவர்ஸ் விமான சேவையில் ஒரு வழிக் கட்டணமான ரூபா3500 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. தனியார் விமான சேவையில் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. இந்தளவுக்கும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் தைப்பொங்கலுக்கு முதல் நாள் யாழ்ப்பாணத்திற்கு வந்த ஜெயலத் ஜெயவர்த்தனா கச்சேரியில் நடந்த கூட்டத்தில், விமான சேவையில் ஒரு வழிக் கட்டணமாக ரூபா2500 அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.


ஆனால் எல்லாமே வெறும் பிரச்சாரமாகத் தான் போய் விட்டது. போகப் போக விமானக் கட்டணம் கூட அதிகரித்து இருக்கிறது. யாழ்ப்பாண மக்களிடம் கண்டு கொண்ட இடம்தானே இந்த அதிகரிப்புக்கு காரணமாகியது. பெருமளவில் பொருட்கள் யாழ்ப்பாண சந்தைக்கு வந்து குவிக்கப்படுகின்றதால் இங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்த மாறுதலும் உருவாகப் போவதில்லை என்பதை மக்களும் அவ்வளவு உணர்வதாகத் தெரியவில்லை வெறுமனே சந்தை வாய்ப்புக்காக. யாழ்ப்பாணத்தை நாடுகின்ற வர்த்தகர்களின் குப்பைக் கூடமாகத்தான் குடாநாடு காட்சியளிக்கின்றது.

இடிபாடுகள் முழுமையாக அகற்றப்படாத அழிவுகள் பீதியை நினைவூட்டிக் கொண்டிருக்கின்ற யாழ்ப்பாண நகரத்தில் மிஞ்சிப் போயிருக்கின்ற வளங்களையும் சுரண்டிச் செல்லக் காத்துக் கிடக்கும் கும்பலுக்கு இங்குள்ளவர்களே களம் அமைத்துக் கொடுப்பது தான் வேதனையானதாகும். பெரிய முதலீடுகளைச் செய்யாமல் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்ற ஒரு கூட்டம் இந்தச் சுரண்டலுக்கு தாராளமாக ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றது. இவர்கள் கூட தமது சேமிப்புக்களை தென்பகுதியில் தான் முதலிட்டுக் கொண்டிருக்கின்றன.

அரசியல் ரீதியிலான வெற்றியைத் தமிழ் மக்கள் பெற்று விடக் கூடா தென்ற நோக்கில் திட்டமிட்டு நடத்தப்படும் சுரண்டல் நடவடிக்கைகளால் கணிசமான உள்ளூர் உற்பத்திகளின் தலையில் மண் போடப்பட்டு விட்டது. இந்த நிலை தொடர்ந்து கொண்டே போகுமானால் எதிர்காலாத்தில் உழைப்பு எல்லாவற்றையும் தென்பகுதிக்கு கொட்டிக் கொடுக்க வேண்டிய மோசமான நிலைக்கு யாழ்ப்பாணம் உள்ளாக நேரிடலாம்.

# சமாதானத்தின் கதி

– நிலாந்தன் –



**நோ**பல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் ஏர்ணஸ்ற்ஹெடிங்வே இவர் எழுதிய உலகப்புகழ் பெற்ற நாவல் "ஆயுதங்களுக்குப் பிரியா விடை" இந்நாவலின் ஓரிடத்தில் கதாநாயகன் புனிதமிழந்து போகும் சொற்களைக் குறித்துச் சலித்துக் கொள்கிறான்... "பேச்சுவார்த்தை" "சமாதானம்" "அமைதி" "யுத்தநிறுத்தம்" போன்ற சொற்கள் யாவும் அவை பயன்படுத்தப்படும் விதத்தால் அர்த்தமிழந்து, புனிதமிழந்து போய்விட்டதாகவும் பதிலாக அர்த்தம் கெடாமலும் புனிதங் கெடாமலும் இருப்பவை ஊர்களின்,தெருக்களின், றெஜிமன்ற்களின் பெயர்கள் தான் என்றும் அவன் கூறுகிறான்....

இலங்கைத்தீவிலும் மிகவும் புனிதமிழந்துபோன ஒரு சொல் "பௌத்தம்" என்பதாகத்தான் இருக்கும்.

இதுதவிர, துஷ்பிரயோகம் செய்யப்பட்டு புனிதமிழந்து போன வார்த்தைகளாக "சமாதானம்" "தீர்வு" "அமைதி"... இப்படியொரு நீண்ட பட்டியல் கிடைக்கும்.

இப்பட்டியலில் கடைசியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் வார்த்தை "புரிந்துணர்வு".

கொழும்பில் படித்த சிங்களவர் மத்தியல் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு பசுவாகச் சித்தரிக்கப் படுகிறதாம்.

அந்தப் பசுவின் தலையுடன் கூடிய முன்பாதி அரசாங்கத்திற்குரியது என்றும் முலையுடன் கூடிய பின்பாதி புலிகளுக்குரியது என்றும் கூறப்படுகிறதாம்.

இதன்படி அரசாங்கம் பசுவிற்.கு உணவூட்டிக் கொண்டே இருக்கும். புலிகள் பாலைக் கறந்து கொண்டே இருப்பார்கள்.அதாவது அரசாங்கம் கொடுத்துக் கொண்டே இருக்கும். புலிகள் வாங்கிக் கொண்டே இருப்பார்கள்.

இந்தச் சித்திரத்தின்படி புரிந்துணர்வு உடன்படிக்கை எனப்படுவது சிங்களவருக்கு நட்டம். தமிழருக்கு லாபம். இதுதான் படித்த சிங்களவரின் அபிப்பிராயம்.

மேலும், படித்த மற்றும் மத்தியதர வர்க்கச் சிங்களவரின் அபிப்பிராயத்தை உருவாக்க வல்ல "ஜலண்ட்" போன்ற பத்திரிகைகளும் ஏனைய தொடர்பு சாதனங்களும் அப்படி யொரு சித்திரத்தைத்தான் உருவாக்க முயன்றுகொண்டு இருக்கின்றன.

வலதுகுறைந்த இடதுசாரியான தயான் ஜெயதிலக கூறுகிறார்... புலிகள் பெரும்பாலும் வரும் ஓகஸ்ற்றில் சண்டையைத் தொடங்குவார்கள் என்று, அந்தச் சண்டை எந்தெந்த முனைகளில் தொடங்கப்படலாம் என்றுமவர் ஆரூடம் கூறுகிறார்.

இவ்விதம் முதலில், படித்த மற்றும் மத்தியதர வர்க்கச் சிங்களவரின் அபிப்பிராயமாகத் தோன்றுவது எதுவும் பிறகு ஊடகங்கள், சமூக நிறுவனங்கள், மதநிறுவனங்கள் போன்றவற்றுக் கூடாக முழுச் சிங்கள சமூகத்தி னதும் அபிப்பிராயமாக உருவாகி றது. இதுதான் இலங்கைத்தீவின் வழமை.

இப்படி ஒருபுறம் சிங்களவரால் அதிகம் சந்தேகிக்கப்படுவது புரிந்துணர்வு உடன்படிக்கை என்றநிலை தொடர, மறுபுறம் தமிழர்கள் புரிந்துணர்வு உடன் படிக்கையின் அமுல் செய்யப்ப டாத பகுதிகளிற்காகப் போராடத் தொடங்யிருக்கிறார்கள்.

எதற்கோ போராடப் புறப்பட்டு .இப்பொழுது புரிந்துணர்வு உடன்படிக்கையை பூரணமாக அமுல்படுத்தக் கோரி போராட வேண்டி வந்திருப்பது என்பது எந்த வகையிலும் ஒருநல்ல சகுனம் அல்ல.

தவிர, தீவுப்பகுதி விவகாரம், பொதுஇடங்களிலிருந்து படை விலகல் விவகாரம், மீனவர் விவகாரம் இவற்றோடு கிழக்கிற்கான புலிகளின் கடற்பாதை போன்றவற்றில் புதிதாகச் சில வரைபுகளைச் செய்ய வேண்டி வந்திருக்கிறது. இது புரிந்துணர்வு உடன்படிக்கையின் போதாமையை உணர்த்துகின்றது.

ஒருபுறம் படித்த சிங்களவர் புரிந்துணர்வு உடன்பாடு புலிகளுக்கு லாபம் என்கிறார்கள். மறுபுறம் தமிழர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கை போதாது என்கிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கதியே இதுவென்றால் சமாதானத்தின் கதி என்னவாயிருக்கும்?.

இத்தனைக்கும் கடந்த இருதேர்தல்களின் போதும் சிங்களவர் சந்திரிகாவைத் தொற்கடித்தபோது அது சமாதானத்துக்கான தெளிவான ஒரு ஆணை என்றுதானே பொருள் கூறப்பட்டது?.

பிறகெப்படி இப்படியெல்லாம் பிசகப் பாக்கிறது?.

இங்கேதான் நாங்கள் சில முக்கியமான விசயங்களை கூர்மையாக வேறுபடுத்தி பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது.

தேர்தல்களில் சந்திரிகா பெற்ற தோல்வி என்பது சிங்களவர்கள் யுத்தத்திற்கு எதிராகக் கொடுத்த தீர்ப்புத்தான். ஆனாலிதை சிங்களவர்கள் மெய்யான சமாதானத்திற்குத் தயாராகி விட்டதாகத் தப்பர்த்தங்கள் கொள்ளத் தேவையில்லை.

உண்மைநிலை என்னவென்றால்- சிங்களவர்கள் யுத்தத்தில் களைத்தும் சலித்தும் போய் விட்டார்கள் என்பதே. ஆனால் இதன் அர்த்தம் அவர்கள் தமிழர்களுக்கு உரியதை உரிய நேரத்தில் உரிய விதத்தில் கொடுக்கத் தயாராகி விட்டார்கள் என்பதல்ல.

இதை இன்னும் தெளிவாக சொல்லலாம். சிங்களவர்க்கு உடனடியாக யுத்தநிறுத்தம் தேவை. ஆனால் அதை அடுத்தடுத்த கட்டங்களுக்குக் கனிய வைத்து நிலையான ஒரு சமாதானத்தைக்கட்டியெழுப்ப அவர்களிடம் துணிச்சலான தீர்க்கதரிசனம் மிக்க ஒரு வேலைத்திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

யுத்தநிறுத்தத்திற்கும் நிரந்தரமான தீர்வுக்கும் இடையிலான இந்த விபரீதமான, சுயமுரண்பாடுகள் நிறைந்த ஆபத்தான இடைவெளி இதற்கு முன்பும் சமாதானம் பேசிய எல்லாக் கூலங்களிலும் இருந்து வந்திருக்கிறது. அது ஜே.ஆரின் காலத்திலும் இருந்தது. பிரேமதாசாவின் காலத்திலும் இருந்தது. சந்திரிகாவின் காலத்திலும் இருந்தது.

இந்த இடைவெளியை நிரப்பத்தான் எப்பொழுதும் மூன்றாந் தரப்புத் தேவைப் படுகிறது.

இந்த இடைவெளிக்குள் தான் ஜலண்ட் போன்ற பத்திரிகைகள் புகுந்து விளையாடுகின்றன. இந்த இடைவெளிக்குள்தான் ஜே.வி.பி போன்ற பொறுப்பற்ற சக்திகள் மக்களை உருவேற்றுகின்றன. இந்த இடைவெளிக்குள் தான் அந்நியர்கள் எப்பொழுதும் உள்நுழைந்து விடுகிறார்கள்.

இந்த இடைவெளியை நிரப்பத் துணிச்சலற்ற அல்லது விருப்பமற்ற அரசியல் தலைமைகளே எப்பொழுதும் அந்நியரைச் சரணடைகின்றன. அல்லது சமாதானத்தை ஒரு பொறியாகப் பாவிக்கின்றன.

இந்த இடத்தில் தமிழர்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. தமிழர்களுக்கு உரியதைக் கொடுப்பதை விடவும் அந்நியரைச் சரணடைவதன் மூலம் தமிழருக் கெதிரான தமது பேரம் பேசும் சக்தியை அதிகரித் துக் கொள்ள முயல்வது என்பது சிங்களத் தலைவர்கள் எப்பொழுதும் செய்து வரும் ஒரு தற்காப்பு உத்தியாகும்.

இது19ஆம் நூற்றாண்டின் ஜேர்மனிய ராணுவ மேதை குளோஸ்விற்ஸ் கூறியதுபோல சமாதானம் எனப்படுவது யுத்தத்தை வேறொரு விதத்தில் தொடர்வது தான் என்றாகிவிடுவதும் உண்டு.

ஆனால் தோல்வியுற்ற எல்லாச் சமாதான முயற்சிகளுக் கூடாகவும் சிங்களவர்கள் கூட்டிக்கழித் துப் பார்த்து ஒரு முடிவுக்கு வரலாம். மேற்சொன்ன இடைவெளியை நிரப்பவல்ல அதாவது யுத்த நிறுத்தத்தை சமாதானமாக கனியவைக்க வல்ல துணிச்சலான தியாக சிந்தையுள்ள ஒரு தலைவர் சிங்களவருக்குத்தேவை.

இன்று இழுபட்டுச்செல்லும் பலஸ்தீனப் பிரச்சனையிலும் முதலடிகளை எடுத்து வைத்து அதற்காகவே சுட்டுக்கொல்லப்பட்ட ராபினை இங்கே நினைவு கூரலாம்.

இப்பொழுது நாட்டுக்குத் தேவை சமாதானத்துக்காகத் தியாகம் செய்யவல்ல தீர்க்கதரிசனம் மிக்க மகத்தான மனிதர்கள் தான்.

ஏற்கனவே தமிழர்களிடம் ஒரு தற்கொலைப்படை உண்டு. யுத்தத்தின் வெற்றிக்காக. தம்மைத் தியாகிக்க அவர்கள் தயார். பதிலுக்கு சமாதானத்தின் வெற்றிக்காகத் தியாகம் செய்ய வல்ல ஒரு தலைவர் சிங்களவருக்குத் தேவை. அப்பொழுது தான் ஒரு வலுச் சமநிலை உண்டாகும். யுத்த நிறுத்தம் கனிந்து சமாதானம் என்றாகும்.

## பிரமுக அறிமுகம்

**இராணுவத் தளபதி**

**லெப். ஜெனரல் லயனல் பியானந்த பலகல்லே**



**சி**றிலங்காவின் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் பலகல்லே மேலும் ஒருவருட கால சேவை நீடிப்பினை இரண்டாவது தடவையாகப் பெற்றுள்ளார்.

இவ்வேளையில் அவர் 25.06.2002 அன்று முதன் முதலாக இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றபோது கூறிய வார்த்தைகளை உங்களுக்கு நினைவூட்டுவது அவசியமாகும்.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதன் மூலம் மட்டுமே இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடியும் அந்தப் பொறுப்பை இராணுவத் தளபதி என்ற முறையில் நான் பொறுப்பேற்கிறேன். வீட்டுக்கு ஒருவர் இராணுவத்தில் இணைந்தால் விடுதலைப்புலிகளை நாட்டைவிட்டு ஓழித்துக் கட்டி விடலாம் இதுவே அப்போது அவர் கூறிய வார்த்தைகளாகும்.

முன்னாள் இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியான இவர் வவுனியா மாவட்ட இராணுவத் தளபதியாகவும், யாழ்ப்பாணப் பாதுகாப்புப்படைத் தளபதியாகவும், ஆர்ட்லறிப்படைப்பிரிவின் தலைமைத் தளபதியாகவும் பணியாற்றியவர்.

மணலாற்றில் நிலை கொண்டிருந்த படையணிகளுக்கும் ஒரு காலத்தில் இவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததுடன்.ஜெயசிக்குறு என்ற சிங்களப் பெயரிலான வெற்றி நிச்சயம் படை நடவடிக்கை கட்டளை அதிகாரியாகவும் இவர் இருந்துள்ளார்.

இராணுவத் தளபதியாக வரமுன்னர் இராணுவத் தலைமை அதிகாரி **(Chief of Staff)** அதிகாரியாகவும் பணியாற்றிய லயனல் பலகல்லேயே இராணுவப் புலனாய்வுப்பிரிவின் ஸ்தாபகருமாவார். இவர் இந்தப் பிரிவின் தலைமைக் கட்டளை அதிகாரியாகவும் முதலாவது பணிப்பாளராகவும் இருந்துள்ளார்.

இந்திய தேசியப் பாதுகாப்புக் கல்லூரியில் விசேட இராணுவப் பயிற்சி பெற்ற லயனல் பியானந்த பலகல்ல 1996 ஆம் ஆண்டில் யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்து நின்ற 51வது டிவிசன் படைப்பிரிவின் பொதுக்கட்டளை அதிகாரியாகவும் இருந்துள்ளார். பல்வேறுபட்ட இராணுவப் பொறுப்புகளை வகித்தவரான பலகல்ல பல சர்வதேச பயிற்சி முகாம்களிலும் கலந்து கொண்டவருமாவார்.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவுக்கும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்தவத்தைக்கும் மிகவும் விசுவாசமானவரான இவர் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளருமாவார்.

தமிழ்மக்களை போராட்ட உணர்விலிருந்தும் திசை திருப்பி உளவியல் ரீதியில் பலவீனப்படுத்த பல்வேறு உத்திகளை அறிமுகம் செய்ததில் மேஜர் ஜெனரல் லரி விஜயரத்னாவின் அடியொற்றிச் செயற்பட்டவர்.

.தமிழ்த் தேசவிரோதக் குழுக்களை தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் மிகவும் நுட்பமாக திட்டமிட்டு பயன்படுத்தியவர்களில் இவர் முக்கியமானவர் தமிழீழப்பகுதிகளில் ஆழ ஊடுருவி வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளை குறிவைத்து தாக்குதல்களை மேற்கொண்ட **LRRP** என்றழைக்கப்படும் அணியினரின் செயற்பாடுகளின் பின்னணியில் இவரின் செற்பாடு முக்கியமானதாகும்.

சமாதான நடவடிக்கைகளில் விருப்பமற்ற பலகல்லே அரசியல்தீர்வை புலிகள் ஏற்காவிட்டால் இராணுவரீதியில் அவர்களைத் தோற்கடிப்பேன் என்று சூளுரைப்பது வழக்கமாகும்.

தனது அடியைத் தொடர தனது மகனையும் இராணுவத்தில் இணைத்திருக்கும் பலகல்லேயின் மகனான லக்மல் பலகல்லே தந்தையைப் போன்று யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவ ஆட்லறிப் படைப்பிரிவில் ஒரு லெப்ரினன்ட் தர அதிகாரியாக உள்ளார்

அரசியல்வாதிகளுக்கு பந்தம் பிடிப்பவர் கேணல் பெர்ணான்டோ என்ற மற்றொரு அதிகாரியால் குற்றம் சாட்டப்பட்ட இவரை அந்த அதிகாரி "முதுகெலும்பற்ற ஒரு கோழை" எனவும் வர்ணித்துள்ளார்.



# இன்னொரு போர்முகம்

— தூயவன் —

மறுநாள் வழமை போல் அவ்வனம் தன் உதயத்தை இயற்கைஎழிலுடன் சந்திக்கின்றது.தூரத்தில் விட்டுவிட்டு தன் இணைக்கு செய்தி அனுப்ப கூவும் குயிலின் ஓசையும் ஏனைய புள்ளினங்களின் ஓசையும் இவர்கள் இருக்கும் இடத்தை போலவளைந்தோடும் அருவியின் சலசலப்பு அதன் ஈரலிப்பை தன்னுள் சுமந்து வந்து இவர்கள் தேகங்களுக்கு இதத்தைக் கொடுக்கும் மெல்லிய தென்றலும் அக்குளிருக்கு வலுச் சேர்க்கும் காலைநேரபனியுமென இயற்கை எழில் கொஞ்சுவது மிகவும் விருப்பிற்குரியதாக இருக்கின்றது.

உயர்ந்து வளர்ந்த இந்நாவல் மரத்தடியில்ஒரு பிளாஸ்டிக் பாயைவிரித்து அதில்சுபேசன் தனது உடுப்புப்பையை முன்னால் வைத்தபடி அமர்ந்து இருக்கின்றான். அப்பையின் மேல் ஒருபைலும் வெள்ளைத்தாள்களும் காணப்படுகின்றது. பச்சை நிற செக் போட்ட சறத்துடன் இரவு நேர குளிருக்கென முழுக்கையாக விடப்பட்ட சேட்டும் காலைநீர் மூழ்கி பின் துவட்டிய கேசமும் அவன்அழகை மெருகூட்டுகின்றது. அவனருகில் அமர்ந்து இருக்கும் அருண் ஒருதீரான் சிஸ்டர்யை இயக்கிய படி ஏதோஒரு அலைவரிசையில் இசையையோ செய்திகளையோ கேட்க முனைகின்றான்.

அவர்களுக்கு 15 மீற்றர் தூரமளவில் பின்னால் சலசலத் தோடும் அருவி பின்னனி இசையினை வழங்குகின்றது.

அகன்று பரந்த அந்நாவல் மரம் பிஞ்சு பிடித்திருக்கின்றது. அதில்பல முதிர்ந்து கனியாவதற்கு முன் சிந்திக்கீழே கிடக் கின்றது. ஆம் சிந்திய இப்பிஞ்சுகளும் பூக்களும் பழுத்துவீழ்ந்த இலைகளுடனும் முன்னர் வீழ்ந்து காய்ந்த சருகுகளுடன்சேர்ந்து உக்கி அந்தமண்ணுக்கு உரமாகும் அதனை அம்மரமும் ஏனைய அயல்மரம் செடி கொடிகளும் செழித்து வளர பயன்படுத்தும் இயற்கை விதி எங்கும் தொடர்கின்றது. தங்கள் இறுதிநாட்கள் மணித்தியாலங்களாக எண்ணிக் கொண்டி ருக்கும் இவர்கள் உறவுகளுக்கு உணர்வுகளை வெளிபடுத்தும் நோக்கில் எழுத்துக் களுக்கு உயிர் கொடுக்கின்றார்கள். தனது வேக்கின் சிற்பை திறந்து அல்பம் ஒன்றை வெளியில் எடுத்து சுபேசன இதனை பாருங்கள்...நான் அம்மாவிற்கு கடிதம் எழுதப் போறன். கூறியபடியே அருணிடம் கொடுக்கின்றான்.இவன் திரான் சிஸ்ரரை அருகில் வைத்து அதனை வேண்டி ஒவ்வொன்றாக பார்க்கின்றான். முன்பக்கத்தை தேசிய தலைவரின் படம் அலங்கரிக்கின்றது. அவரே அங்கு எல்லாமுமாய் நிறைந்திருக்கின்றார். அடுத்து அவனது குடும்பப்படம் அம்மா, அப்பா, சகோதரர்கள் என ஆறுபேர் கொண்ட அழகானகுடும்பம் இவனுக்கு மூச்சு முட்டுகின்றது.எல்லா உணர்வுகளையும் வேண்டிய மாத்திரத்தில் கட்டுப்படுத்தவும் ஐம்புலன்களை ஒருமுகப் படுத் தவும் தேவை பயிற்றுவிற்ற அவனுக்கு தனது எண்ண ஓட்டங்களை மறைப்பது பிரமாதமாக இருக்கவில்லை. இவன் ஏனைய படங்களை வேகமாக தட்டி தட்டி விரைவாக பார்த்தவித அவற்றுள் ஏதோஒன்றை தேடுகின்றான் என்பதை விளக்குகின்றது. முன்னர் வீரச்சாவ டைந்த கரும்புலிகள், வீரச்சாவடையப் போகின்றவர்கள் தேசத்தின்புயல் படம் நடிக்கின்ற போது எடுக்கப் பட்ட புகைப்படம் என எல்லாவற்றையும் மளமள எனப்பார்த்தவன் ஏதோ ஏமாற்றத்துடன் அவனைஏறிட்டு பார்க்கின் றான். சுபேசன்தான் எழுதும் கடிதத்தில் மூழ்கியிருக்கின்றான். ஏன் இவன் தன் இதயம்கவர்ந்தவளின் படத்தை வைக்கவில்லை. கேட்கலாமே? என எண்ணியவன் கேட்காமலேயே விட்டுவிடுகின்றான். மீண்டும் அப்புகைப் படங்களை இசை ஒன்றை ஒலிபரப்புகின்றது ஆறுதலாக பார்க்கின்றான்.திரான் சிஸ்டர் மங்களகரமான நாதஸ்வர இசை ஒன்றை ஒலிபரப்புகின்றது. அம்மாவிற்கு எழுதியிற்றன் எனக்கூறி கடிதத்தை உறையிலிட முனைந்தவன் சிறிதுதாமதித்து தனது வேக்கில் சென்ரைஎடுத்து அதில் சில துளிகளை தெளிக்கின்றான். பின் இவனைப்பார்த்து சிரித்த வண்ணம் அம்மா இதை உடைக்கும் போது நல்ல வாசம் வீசவேண்டும் என்றவன் இனி நான்அவளுக்கு எழுதபோறன்... என்றவாறே மீண்டும்மடல் வரைய தொடங்குகின்றான்.ஏனோ இதுவரை அவனும் அவளின் பெயரை இவனுக்கு கூறவில்லை.இவனும் அதனைக் கேட்கவில்லை. மாஸ்ற்றர் போகைக்க இந்த மோதிரத்தை தருவேன் நீங்கள் நான் சொன்ன மாதிரி செய்து விடுங்கோ இவனை நிமிர்ந்து பார்க்காமலேயே கூறுகின்றான் வழமைபோலவே இவனும் மௌனமே கதிஎன்று கிடக்கின்றான்.

சுபேசன்தொடர்ந்து கடிதங்களை இனி எனசற்று நிதானிதவன் தங்கச்சிக்கு எழுதவேண்டும் இவளும் இயக்கத்தில் தான்இருக்கின்றா அங்கயக்கன்னி பெயர்என்கின்றான். இவனுக்கு தன் செவிகளே இப்பொழுது பாரமாக இருக்கின்றது. இவ்வளவு நாளும் இவன் சொல்லவில்வையே...... இதை அவள் அறிந்தாள். என எண்ணுகையில் மனமும்அவனுக்கு பாரமாகத் தெரிகின்றது

அவன் தொடர்ந்து சொல்கின்றான். என்றரேடியோவை அவளுக்கு கொடுக்கச் சொல்லி எழுதியிருக்கின்றன் நான்ஒரு முறை சந்திக்கிறபோது கேட்டவள்? அண்ணாநீ தேசத்தின் புயல் படத்தில் நடித்திருக்கின்றாய் கரும் புலிக்கு பெயர் போட்டனியா? நான் இல்லையென்றுபொய் சொல்லிப் போட்டன். என்ர வீரமரண செய்தி அவளை எட்டும்போது என்ன எண்ணுவாள் என்றவன் பதிலுக்குகாத்திராமல் பேனாபிடித்திருக்கும் விரல்களின் வேகத்தை கூட்டுகிறான். அப்பொழுது ஒருவன் வந்து உங்களை சொர்மண்ணை வரட்டாம் எனக் கூற இவன் தன் கண்களினாலேயே நான் போகின்றேன். நீங்கள் எழுதுங்கள் என்று சொல்லி விட்டு எழுந்து நடக்கின்றான்இவன் தனது தாய் மொழியின் எழுத்து முத்துக்களை கோர்த்து உணர்வு மாலைகள் தயாரிப்பதில் முழ்கின்றான். அன்றிரவு அக்குடிசையிலுள்ள இருபாயில் அரசனும் சுபேசனும் நிலவனும் படுத்திருக்கின்றனர். மூலையில்யிருக்கும் குப்பி விளக்கொன்று தன்னால் இயன்ற ஒளியினை தானமாக வழங்க பெரும் முயற்சி எடுக்கின்றது. அது பரப்பும் மென் ஒளி ஒருவர் முகத்தை பார்ப்பதற்கு போதுமானது. சுபேசன் கதைக்கின்றான் மாஸ்ரர் நாங்கள் இந்த சண்டைக்கு ரெயினிங் எடுக்கும் போது அண்ணா வந்து பார்த்தவர். ரியலாகவே ரவுன்ஸ் ஆர். பி.ஜி. லோ எல்லாம் அடிச்சு காட்டினாங்கள். அவருக்கு திருப்தியாகவே இருந்திருக்க வேண்டும்... ஆனால்என்று நிறுத்தியவன் சிறு இடைவெளியுடன் தொடர்கின்றான். சின்ன சின்ன தவறுகளால பல தாக்குதல்கள் எதிர்பார்த்த மாதிரி வெற்றியளிக்காமல் போனதென்றும் உதாரணமாக பலாலியில் பூநகரிச் சண்டை மூட்டம் நடத்தப்பட்ட தாக்குத லையும் சுட்டிக்காட்டினார். அப்படி எதாவது நடந்தது என்றால் ாங்கள் இவ்வளவு நாளும் பட்ட கஸ்ரங்கள் எல்லாம் வீனாய் போய்விடும். அது தான் நான் கடவுளை வேண்டுறனான் ஒரு பிச்சனையும் இல்லாமல் இந்த சண்டை நடந்திட வேண்டும் அண்ண எங்களை நிறைய எதிர்பார்ப்போட அனுப் பினவர். அருணும் வழைமை போலவே கேட்டுப் கொண்டு இருக்கின்றான்.

அவன் தான் 92இல் கரும்புலியில் சோர்ந்தது பற்றியும் பலாலியில் நடற்த தாக்குதலுக்கு தனக்கு சந்தர்ப்பம் தரப்படவிலலை என்றும் பின் இலக்குகள் தேடி வேவுப்புலிகளுடன் திரிந்தது பற்றியும் கதைத்துக் கொண்டிருந்தவன் அப்படியே நித்திரையாகி விடுகின்றான். இவன் தலையை திருப்பி பார்க்கின்றான். நிலவனும் நித்திரையாகி விட்டான். ஆம் நாளை ஒருநாள் தான் பெரும்பாலும் உயிருடன் இருப்பார்கள். பின் தங்களை சிதறடித்து விடுவார்கள். ஆனால் இப்பொழுது எவ்வித சலனமும் இல்லாமல் பசியால் அழுது பின் வயிறு முட்ட தாய்ப்பால் குடித்த குழந்தைகள் போல் கண் வளர்கின்றார்களே. இது போன்ற அனுபவங்களை அவன் பலமுறை சந்தித்திருந்த போதும் ஒவ்வொரு முறையும் புதியவையாகவே உணர்கின்றான்.

04.03.97 மாலை 2.45 தாக்குதலுக்கு வழியனுப்பி வைக்க ஆயத்தமாக இருக்கும் சொர்ணம் அண்ணையுடன் கரும்புலி சுபேசன் "காம்பிளக்" இராணுவ சீருடையில் ஆயுதபாணியாக வந்து கை கொடுக்கின்றான். "அண்ண போயிற்று வாறன்..." அவன் கூற அவனது கரத்தை இறுகபற்றியவர் தனது கரம் நடுங்குவதை உணர்கின்றான் கண்களில் அணையை கண்ணீர் உடைகின்றது. விடுதலைப் புலிகளின் மூத்த' தளபதி ஒருவரின் கண்களில் நீர் வழிவது என்பது உண்மையில் ஆச்சரியமான விடயமே. தனது வலக்கை மூலம் அவனது தோளை ஆதரவாக தட்டிக் கொடுத்து போய் வா..." என விடை கொடுத்து அனுப்புகின்றான். தொடர் ந்து நிலவன், ஜெயரூபன் என ஒவ்வொருவராக கரம் பற்றி விடை பெறுகின்றார்கள். அவர்கள் கை குலுக்கும் போது ஏற்படும் உணர்வு பரிமாற்றம் சொற்களின் விபரிப்பிற்கு அப்பாற் பட்டது. விடுதலைப் போராட்டத்தின் வியாபகத்தை தன்னுள் கொண்டுள்ளது. இப்பொழுது கைகொடுத்த சிற்றம்பலம் பின் தனது இரு கைகளாலும் அவரது இடுப்பில் ஆதரவாகப் பற்றி "அண்ண எனக்கு இந்த சந்தர்ப்பம் தந்தற்கு நன்றி." அவனது குரலில் தெளிவு தெரிகின்றது. தனது வலக்கரத்தை உயர்த்தியவன் சொர்ணம் அண்ணையின் கண்களில் வடியும் கண்ணீரைத் துடைத்தவண்ணம் "அழா தீங்கோ நான் போய் வருகின்றேன்". கூறி விடை பெறுகின்றான்.

இந்திய இராணுவத்திற்கும் இலங்கை இராணுவத்திற்கும் சிம்ம சொப்பமாக விளங்கிய விளங்கும் முதுபெரும் தளபதியால் தன் கண்ணீருக்கு தடைபோட முடியவில்லையே வழியனுப்பி வைக்கும் அனைவரும் அழுகின்றனரே, தலைநகரின் பெரும்பாலான களங்களை வழிநடத்திய தளபதி சுதாகர் எப்படி சிறுபிள்ளைபோல் அழமுடியும்? எதிரிகளை கொன்றுகுவிக்கும் போது தாம் தோள் தொட்டு வளர்த்த போராளிகள் வீரச்சாவடையும் போது தம் உணர்வுகளை சிறிதும் வெளிப்படுத்தாமல் நின்றவர்கள். இப்போது மட்டும் ஏன் அழுகின்றார்கள்? . வீர்கள் அழுதல் தகுமோ? ஒரு வீரனுக்கு அழகு அவன் களப் பலியான செய்தி கேட்டவுடன் அவனை வளர்த்த தளபதிகள் கண்களில் நீர் படர்வதே ஆனால் அவர்கள் இன்னும் இறக்கவ்ல்லையே..... இயங்கிக்கொண்டுதானே இருக்கின்றார்கள்..... இன்றும் நாளையும்..... பிறகு ஏன் அழுகின்றார்கள்?.

(தொடரும்)



# "ஏ"னைன்[A9] பாதைக்கு என்ன நடந்தது

— தமிழ்க்கவி —

முதன் முதலாக 1902 இல் தான் இலங்கைக்கு கார் வந்தது. அதன் பிறகு தான் கற்பாதை போடப்பட்டது. வன்னியை ஊடறுத்துச் செல்லும் இப் பாதை பண்டாரவன்னியன் காலத்துக் குப் பிறப்பட்டது.

ஆரம்பத்தில் புகையிரதம் என்ற பெயரிலான தொடர் வண்டி தான் இது புகை விடுவதால் தான் புகைவண்டி, அல்லது புகையிரதம் எனப்பட்டது. புகை எப்படி வரும் நீராவியந்திரத்தில் இயங்குவது காரணமாகத்தான் - பென்னம்பெரிய உருளையான கொள்கலனுள் நீர் நிரப்பி அதன் கீழ் பாரிய தட்டில் தீமூட்டி கொதிக்க வைப்பர். இக்கொதிப்பில் ஏற்படும் நீராவி தான் இத் தொடர்வண்டிய்யை தள்ளிச் செல்லும் யந்திரத்தை இயக்கும். எனவே,

கரியும், விறகும், நீரும் இந்த வண்டிப்பாதையில் தேவைப்பட்டது. அதனால் ரயில் பாதை குளங்களை மையப்படுத்தி வளைந்தும் நெளிந்தும் செல்கிறது.

இதற்கான கரி, விறகு என்பவற்றை வழங்குமுகமாக கற்பாதையும், கனகராயன்குளத்துடன் தன்னை மடக்கித் திருப்பிக் கொண்டது. ஆனாலும் மன்னர் காலத்தைய மண் வீதிகள் மக்கிப்போய் கிடந்தாலும் வன்னிக் காட்டின் உள்ளே வந்த ராணுவத்துக்கும் சரி புலிகளுக்கும் சரி முக்கியத்துவம் வாய்ந்த வீதிகளாக இருந்தன. இதில் ஒரு முக்கிய விசயம் பெரியமடு என்னும் கிராமங்கள், வன்னியில் மூன்று இடங்களில் உண்டு. மூன்றும் மிக முக்கியமான கேந்திர நிலையங்களாகும்.

இத் தொடர் ஏனைன் பற்றியதாகையால் அவற்றை இங்கு தவிர்ப்போம்.

ரிவிரெச 1,2,3, என வடமுனையின் ஏனைன் பாதை முற்றாக முறிந்தது. என்றாலும் ராணுவம் அத்தோடு திருப்தியடையாமல் கிளிநொச்சியைக் கைப்பற்றியது. அலைந்து திரியும் மக்களுக்கு நடமாடும் வழி குறுகியது.

யாழ்ப்பாணத்துக்கான தரைவழி முற்றாக மூடப்பட்டது. கிளாலி கடற்பயணமும் மூடுண்டது. பலநாள் தவமிருந்து பல ஆயிரம் ரூபாக்களையும், சில நாட்களையும் செலவிட்டே யாழ்ப்பாண மக்கள் வெளியுலகு செல்ல முடிந்தது.

இந்த நிலையில் ஓயாத அலைகள் ஒன்று முல்லைத்தீவையும் இரண்டு மூன்று தினங்களுள் மீட்டது. கடுமையான உணவுப் பஞ்சம், மருந்துத் தடை என்பவற்றால் மக்கள் பெரும் இன்னல் பட்டனர். பாதைத் தடையால் இறந்துபோன நோயாளர் பலர்.

1997.05.13 செவ்வாய்க்கிழமை ஜெயசிக்குறுச்சமர் ஆரம்பமானது. இச் சமர்க்களம் இந்த ஏனைன் பாதையை மையமாக வைத்தே நடந்தது. எப்படியோ படிப்படியாக புளியங்குளம் வர மூன்று நான்கு மாதம் எடுத்தது. முள்ளியவளை, செம்மலை, புதுக்குடியிருப்பு, விசுவமடு மக்கள் - மாங்குளமூடாக மல்லாவி சென்று பள்ளமடு உயிலங்குளம் பண்டிவிரிச்சான் என்று வன்னிக்கு வெளியே செல்ல அல்லாடினார்கள். வெளியிலிருந்து உள்ளே வருபவர்களும் அப்படித்தான்.

இதன் பின் முன்னர் குறிப்பிட்ட நெடுங்கேணி நைனாமடு பெரியமடு ஊடாக ஒட்டிசுட்டான் மாங்குளம் சாலையில் ராணுவம் புகுந்ததும், வட்டக்கச்சியூடாக இரணைமடுக் குளக்கட்டில் ஏறிப் பயணம் செய்து வாகனத்துடன் குளக்கட்டில் உருண்டு பாதிக்கப்பட்டவர்கள் அதிகம். இரணைமடுச்சந்தியில் வாகனம் திருப்பி முறிகண்டி நோக்கித் திரும்ப முதுகு கூசும். அவ்வளவு நெருக்கத்தில் ராணுவம் திரிந்தான்.

இவனை ஓயாத அலைகள் இரண்டு கிளிநொச்சியிலிருந்து விரட்டியபிறகு தான் நிம்மதி என்றில்லை. கொக்காவில் சந்தியில் கிபிர் தாக்குதலில் பயணம் செய்த மக்கள் கொல்லப்பட்டதுடன், வீசப்பட்ட குண்டு ஒன்று நடுவீதியில் கிணறு கிண்டும் முயற்சியையும் செய்திருந்தது.

வன்னிப்பகுதியில எந்த வாகனமும் வேகமாக ஓடமுடியாது. வீதியுமது, வாகனமுமது. பத்துக் கிலோ மீட்டர் போக இரண்டிடத்தில் ரயர் மாற்றவேண்டும். அப்படிப்பட்ட வாகனமொன்று நிரம்ப பயணிகளை ஏற்றி வீதியில் வருகிறது. பெருவெளியில் ஏறிகணைகள் வந்து விழத் தொடங்கின வாகனத்தின் வேகத்தைச் சாரதி கூட்டினான் என்று சொல்ல முடியாது. வீதியில் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு சிறு பள்ளங்களுள் ஓடி விழுகிறார்கள். வாகனத்துள் இருந்த ஒரு அம்மா. "இது தான் இறக்கம் - இறக்கம் " என்று கத்த அல்லாவைத் தவிர மற்ற அனைத்து தெய்வங்களையும், பயணிகள் கூப்பிட்டு, வாகனத்தில் ஏற்றியதுமன்றி தங்களையே அவர்களிடம் ஒப்புக்கொடுத்தனர்.

சாரதியின் முகம் இறுகிப்போயிருந்தது மட்டுமல்ல. அவர் பள்ளத்தைக் கண்டா பறக்கிற கியரத்தான் போடுறார்.

"செல்விழாட்டியும் சீமான் கவுட்டுப் போடுவான் போல கிடக்கே" என்று பதற... பத்திரமாக ஏறிகணைகளைக் கடந்த சாரதி ஒரு மரத்தின் கீழ் நிறுத்தினான். இப்பவும் அம்மா இறங்கி நின்று "நான் அங்கயெல்லே இறக்கம் எண்டு சொன்னனான்" என்று பேசினார். "சரியெணை உனக்காக நான் இவள சனத்தையும் கொல்லுறதே.." என்றார். சாரதி தமிழீழத்தின் சாரதி இங்கே எங்கள் சாலைகள் எப்போதும் சாரதிக்கே யுரித்தானது. உங்களுக்கு தெரியுமோ பாதை என்பது பாதசாரிகளுக்கே சொந்தம். நடந்து செல்பவரை அனுசரித்தே வாகனங்கள் செல்ல வேண்டும்.

நடந்து செல்பவரைத்தவிர மற்றவர்கள் அப்பாதையை பயன்படுத்த வரி செலுத்த வேண்டும். இது சர்வதேச சட்டம்.

ஆனால் தமிழீழத்து மக்களுக்கு இந்தப் பாதைத்தடை நீண்ட நாட்களாக உண்டு.

ஓயாத அலைகள் இரண்டில் கிளிநொச்சி மீட்கப்பட்டாலும் மாங்குளம் பகுதிக்கு ராணுவம் வந்துவிட்டது.

ஓயாத அலைகள் மூன்று இந்தப் பாதையை மீட்டது. உலகப்புகழ் பெற்ற இந்த அலைகள் நாற்புறமும் சுழன்று வீசியதில் கனவிலும் கருதாத வெற்றி கைகூடியது. அதேசமரில் ஆனையிறவும் மீண்டது.

இப்போது ஓமந்தையிலிருந்து ராணுவம் பாதை திறக்கவும் முகமாலையிலிருந்து வடபகுதிப் பாதை திறக்கவும் ஒப்புக்கொண்டு பாதை திறந்துள்ளது.

இதே பாதையை பதினெட்டு மாதங்களுக்கு மேலாக சண்டையிட்டுத் திறக்க முயன்று முடியாமல் போயிற்று. திரும்பவும் (500) ஐநூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஆனையிறவு தமிழர் கையில் விழுந்தது. ஆயிரம் ஆண்டுகளின் 'பின்னர் தமிழர்களுக்கு ஒரு நேரிய தமைமை கிடைத்தது.

"எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார் திண்ணியராகப் பெறின்" என்பது பொய்யா மொழி.

இன்னும் பேச்சுவார்த்தை தொடங்கவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை தான் இது. இன்னும் எத்தனை காலம் எங்கள் பாதையில் சோதனைச் சாவடிகளை வைத்திருக்கப் போகிறோம். ஏ 9 பாதை எப்போது பாதசாரிக்குச் சொந்தமாகும். இன்னும் சில இனவாதிகளுக்கு இந்த சமாதானப்படிகளில் ஏறப்பிடிக்க வில்லை.

ஓராம்படி ஏறயிலே.. பெற்றவளேதாயே இன்னும் எத்தனை படிகள் கடக்கவேண்டும்.. ஏனைன் பாதை எப்படியும் விடியும்.. விடியும்.

(நிறைவு பெற்றது)

# மனிதன் ஒரு பூகோளப்பிராணி

மு.திருநாவுக்கரசு



சிலவேளை வேடரைத் தவிர பூமியிலுள்ள ஒவ்வொருமனிதனும் இன்று பூகோளவடிவம் பெற்று விட்டான். ஒரு மனிதனிடம் எத்தகைய இன, மத, மொழி, சாதி, நிற உணர்வுகள் இருப்பினும் அவனது அரசியல் பொருளாதார வாழ்நிலை என்பது பெரிதும் பூகோள வடிவம் பெற்றுவிட்டது. எத்தகைய வேறுபாடுகளுக்கு மத்தியிலும், எத்தகைய பிரச்சினைகளுக்கு மத்தியிலும், எத்தகைய இன்ப துன்பங்களுக்கு மத்தியிலும் மனித வாழ்வு ஒரு பூகோள அலகாகி விட்டது. மனித வாழ்வு பூகோள வடிவம் பெற்றுவிட்டதன் முதற் பலனையும் அதிக நன்மைகளையும் அனுபவிப்பவர்கள் மேற்குலகத்தவர்கள் தான். இப்படி அதிக நன்மை, பாதிப்பு, பாரபட்சங்கள் என்கின்ற போக்குகள் இதில் உண்மையேயாயினும் வாழ்வு பூகோளவடிவம் பெற்றுவிட்டது என்பது முதன்நிலை யதார்த்தம்.

> *மனிதன் தன் வரலாற்றின் முதல் மூலக்கூறிலிருந்து இடயராது சமூகத்தன்மை பெற்று வருகின்றான். அவனது எண்ணங்களும், உணர்வுகளும், சிந்தனைகளும் வாழ்க்கை முறையும் கூடவே இடையறாத தன்மை பெற்று வருகின்றன. அவனது வாழ்வின் அர்த்தம் மேலும் மேலும் வளரும் சமூகத்தன்மையால் இடயறாது மாறியும் விரிந்தும் செல்கின்றது.*

மனிதனை அடையாளம் காண எடுக்கும் முயற்சியில் ஆய்வாளர்கள் அவனைப் பலவாறாக வரைவிலக்கணப்படுத்துகின்றனர். முதலில் அவனை ஒரு ''சமூகப்பிராணி'' என்றும், பின்பு " அரசியல் பிராணி என்றும் அதன் பின்பு "கருவி ஏந்தும் பிராணி" என்றும் கூறினார். ஆனால் இன்றோ மனிதன் பரந்த முழுப்பூமியினதும் அதைச் சார்ந்த இயற்கையினதும் பரந்த தளத்தில் ஒரு பூகோள பிராணி ஆகிவிட்டான். இது ஒரு தற்செயல் நிகழ்வல்ல; எந்த வொரு தனிநபரினதும் விருப்பு வெறுப்புக்களினால் உருவானது மல்ல. இது பல மில்லியன் ஆண்டு களாக வரலாற்று வளர்ச்சிகளின் மொத்த வெளிப்பாடும், வரலாற்றின் தவிர்க்க முடியாத ஒரு மிக முக்கிய கட்டமுமாகும்.

மனிதன் தன் வரலாற்றின் முதல் மூலக்கூறிலிருந்து இடயராது சமூகத்தன்மை பெற்று வருகின்றான். அவனது எண்ணங்களும், உணர்வுகளும் சிந்தனை வாழ்க்கை முறையும் கூடவே இடையறாது சமூகத் தன்மை பெற்று வருகின்றன. அவனது வாழ்வின் அர்த்தம் மேலும் மேலும் வளரும் சமூகத்தன்மையால் இடயறாது மாறியும் விரிந்தும் செல்கின்றது.

கிராமியம் உடைந்து அல்லது உடைக்கப்பட்டு தேசிய எல்லைகளாயின. எப்படியோ கிராமியத்தைத் தாண்டி தேசியம் கருத்தரித்தது. தேசிய எல்லைகள் ஓடிந்தோ அல்லது ஒடிக்கப்பட்டோ பல்தேசிய எல்லைகளை தோற்றுவித்தன. இத்தகைய தேசிய அல்லது பல் தேசிய எல்லைகளின் ஒடிவுகள் தம்மகத்தே கலந்து அல்லது கலக்கப்பட்டு அல்லது உறிஞ்சப்பட்டு ஆங்காங்கே பல்நாட்டு உறவுகள் (சர்வதேச உறவுகள்) எனும் வட்டங்களை தோற்றுவித்தன. இவ்வாறு தேசியத்தின் கருவிலேயே தேசியத்தின் கரைவும் ஒன்று கலந்து இருப்பதால் துருவம் தாண்டுவதென்பது தேசியத்துக்கு ஒரு கற்புச்சார்ந்த பிரச்சினையல்ல. இதனால் கண்டங்கள் கடந்தும் துருவம் கடந்தும் பன்னாட்டு வட்டங்கள் உருவாகின. ஒரு பன்னாட்டு வட்டத்துக்குள் பல அரசுகள், பல பன்னாட்டு வட்டங்களுள் ஓர் அரசென பன்னாட்டு உறவில் பல்வேறு சேர்க்கைகள் கலந்தன.

பண்ட உற்பத்தி ஆதிக்கம், பண்டபரிவர்த்தன ஆதிக்கம், நிதி ஆதிக்கம், அமைப்பு ரீதியிலான அரசியல் ஆதிக்கம், இராணுவ மேலாண்மையும் இராணுவ பலாத்காரமும், உளவுப்படை ஆதிக்கம், அறிவியல், விஞ்ஞான-தொழில்நுட்ப ஆதிக்கம், கருத்து ஆதிக்கம், எண்ண உருவாக்க ஆதிக்கம் மற்றும் பல தரத்தோர் தேவைகள் போன்ற பல்வேறு விசைகளினாலும் பன்னாட்டு உறவானது பூகோள உறவாய் தொடர்வியாபகம் பெறுகின்றது. இது மனிதனை அவனது அனைத்து சிறுவட்ட வாழ்வு நிலைகளுக்கும் அப்பால் ஒரு பூகோள பிராணியாக்கி விட்டது.

கருவியேந்தும் பிராணியாகிய மனிதனை கருவிகளின் தொடர் வளர்ச்சி மேலும் மேலும் சமூகத் தன்மையுள்ளவனாக்குகின்றது. ஆகவே பூகோளபிராணியாகி விட்ட நிலையிலும் மனிதன் மேலும் மேலும் சமூகத்தன்மை பெறுகிறான். இதனால் அவனது செயல்கள் மேலும் மேலும் பூகோளத்தன்மை பெறுகின்றன. நல்லதாகவோ அன்றிக் கெட்டதாகவோ, எஜமானாகவோ அன்றி அடிமைகளாகவோ, சிறியவனாகவோ அன்றில் பெரியவனாகவோ பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஒருவனோடொருவனாய் பூகோளவலையிற் பின்னிப் பிணைக்கப்படுகிறான். இன்று அமெரிக்காவிற்கு தும்மல் வந்தால் உலகிற்கு தலையிடி வரக்கூடிய நிலையிற் தான் இப் பின்னல் உள்ளது. பலங்கொண்டு சுழன்றோடும் மேற்குலகின் வரலாற்றுச் சக்கரத்தோடு ஆசிய - ஆபிரிக்க நாடுகளெல்லாம் கட்டப்பட்டு இழுவுண்டனரகின்றன.

எங்கள் வளங்கள், எங்கள் மூளைகள், எங்கள் எண்ணங்கள், எங்கள் உணர்வுகள் எல்லாம் மேற்குடன் இணைத்துக் கட்டப்பட்டு மேற்கின் இழுவை வேகத்தில் இழுவுண்டு அரைகின்றன. "யானை புணர்ந்தாலும் புல்லுக்குத்தான் சேதம், அவை சண்டை செய்தாலும் புல்லுக்குத்தான் சேதம்'' என்ற நிலையில் தான் இப்பூகோள யதார்த்தத்தில் இழுவுண்ணும் நாடுகளின் கதி. எங்களை இழுத்து மகிழும் சக்திகளிடம் எங்கள் மூளைகள் சோரம் போயாச்சு. பார்வைக்கு எங்கள் மூளைகள் எங்கள் மண்டைக்குள் தான் உள்ளன. ஆனால் அவற்றின் சேவைகளோ எதிரிக்குப் போகின்றன. எங்கள் கனவுகளோ எங்களுக்குச் சொந்தமில்லை. ஏனெனில் எம்மை இழுப்பவனுக்காகவே நாங்கள் கனவு காண்கிறோம். நாங்கள் சிந்திக்கின்றோம் என்பதற்காக, நாங்கள் கனவு காண்கின்றோம் என்பதற்காக அவை எம்முடையவையல்ல. எங்கிருந்தோ முடுக்கிவிடப்படும் இராட்சத அரசியற் பொருளாதார சக்திகளுக்காக எங்கள் மூளைகள் திருப்பப்பட்டுவிட்டன. இப்போது நாங்களே எங்களுக்கு இரவலாய் உள்ளோம். வரலாற்று வளர்ச்சியில் மனிதன் பூகோளப் பிராணியாதல் என்பது தவிர்க்கப்படமுடியாத ஒன்று. ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவெனில் மனிதகுலத்தின் ஒரு சாராரிற்குச் சாதகமாகவும் இன்னாரு சாராரிற்குப் பாதகமாகவும் இப் பூகோளப் பிராணியாதல் நிகழ்கின்றது. என்பது தான். அமெரிக்கா தனது நலனுக்காக உலகம் பூராகவும் தங்கிநிற்கின்றது. அதாவது மூலவளங்களுக்காகவும் சந்தை வாய்ப்புக்காகவும் உழைப்புச் சக்திகளுக்காகவும் அமெரிக்கா உலகம் பூராகவும் தங்கிநிற்கின்றது. பரந்த உலகின் வளங்களின்றியும் உலக சந்தையின்றியும் அமெரிக்கா என்பது இன்றைய அர்த்தத்தில் இருக்க முடியாது. அதேவேளை வளர்முகநாடுகள் என்று சொல்லப்படுபவையும் பண்டங்களுக்காகவும் நிதிக்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் அமெரிக்கா, மற்றும் உலக நாடுகளிற் தங்கியிருக்க வேண்டியுள்ளன. மொத்தத்தில் பூகோளரீதியான பார்வையின்றி, அணுகுமுறையின்றி, வளங்களின்றி வேடனைத்தவிர எந்தொரு மனிதனும் வாழ முடியாதவனாகிவிட்டான். கண்மூடித்தனமான தனித்துவமும் பழமையும் இனிமேல் இந்தப் பூமியில் இருக்க முடியாது. அப்படி இருக்கவேண்டுமென்று விரும்பினால் தனித்துவத்தின் பெயரால் வேடனையும் பழமையின் பெயரால் கோவ்ணத்துணியினாற் கண்ணைக் கட்டிக்கொண்டுமே இருக்க வேண்டும். வாழவேண்டும்.

பல்லுமினுக்கும் பற்பசையும் கக்கூசு துடைக்கும் பேப்பரும் கூட ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்களைத் தாண்டி கைக்குக் கிடைக்கின்றன. பல்லுக்குத்தும் குச்சிகூட இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்தே கிடைக்கின்றது. இதில் ஒரு தேவை மட்டுமல்ல, தொழில் நுட்பம் மட்டுமல்ல மனப்பாங்கும் கூடவே இணைந்துள்ளது. சுத்தமான காற்றைச் சுவாசிப்பது பற்றிக் கதைக்கவேண்டுமென்றால் அமெரிக்காவைப் பற்றிக் கதைக்காமல், உலகின் தொழிற்சாலைகளைப்பற்றிக் கதைக்காமல் அணுகுண்டுகளைப் பற்றிக் கதைக்காமல், உலக அரசியலைப் பற்றிக் கதைக்காமல் எந்தவொருவனாலும் இன்று கதைக்கவோ அன்றி நினைத்துப் பார்க்கவோ முடியாது. அதாவது வானத் தில் பறக்கும் காற்றும் கிணற்றில் இருக்கும் நீரும் இன்று பூகோளவடிவம் பெற்றுவிட்டன. காசு அச்சிடப்படும் பேப்பரும், கக்கூசு துடைக்கும் பேப்பரும், காதலும் கல்யாணமும், கலாச்சாரமும் கூடவே பூகோள வடிவம் பெற்றுவிட்டன. ஆதலால் பூகோள யதார்த்தத்தைப் பற்றிச் சிந்திக்காமல் மூச்சு விடுதலைப் பற்றியோ பிள்ளைப் பிரசவத்தைப் பற்றியோ இனிமேற் சிந்திக்கமுடியாது. இன்று பூமியிலுள்ள அனைத்து மனிதனும் விரும்பியோ விரும்பாமலோ தெரிந்தோ தெரியாமலோ பூகோளப் பிராணியாகிவிட்டான். ஆனால் இதிலுள்ள எமது பிரச்சினை என்னவெனில் ஆசிய - ஆபிரிக்கராகிய நாம் பூகோளப்பிராணி என்ற நிலையை அடைந்தது எமது இயல்பான வளர்ச்சியினாலல்ல. மேற்குலகின் பூகோள வளர்ச்சியோடு இணைக்கப்பட்டதனால், அதாவது மேற்குலகின் பூகோள ரீதியான வளர்ச்சிக்கான பரம்பலாயும் தளமாயும் நாம் ஆனோம். ஆதலால் மேற்குலகின் பூகோள வளர்ச்சியில் நாம் ஓர் அங்கமும் பகுதியுமானோம். மேற்குலகின் பூகோளம்சார் வளர்ச்சியினதும் நலனினதும் பொருட்டு நாமும் பூகோளவடிவப்படுத்தப்பட்டோம். இதில் எம்பொருட்டன்றி அவர் பொருட்டு நாம் பூகோளப் பிராணியானோம்.

இன்றைய யதார்த்தம் என்னவெனில் பூகோளப் பிராணி என்ற நிலையிலிருந்து எந்தவொரு மனிதனும் இனிமேற் பின்வாங்க முடியாது. ஆனால் மேற்கின் வளர்ச்சி வேகத்தை நாமும் எட்டுவதன் மூலம் மேற்கின் வாலாயும் சேவகர்களாயும் மன்றி பூகோளத்தின் பங்காளிகளாய் மாறமுடியும். மேற்கில் தேசிய சமூக கட்டமைப்பு தோன்றியது. வெள்ளையர்களுக்கு அது தேசிய சமூக வாழ்வைப் பெருமளவு நிறைவேற்றியதுடன் அது பன்னாட்டுச் சமூக வாழ்விற் கால்வைத்து நீண்ட பல யுத்தங்களையும் பிரச்சினைகளையும் தாண்டி ஒரு பரந்த பிராந்திய கட்டமைப்பை தோற்றுவிக்க முயல்கின்றது. அதில் ஒரு முதன்நிலை மைல் கல்லே யூரோ நாணயம். அது ஒரு பரந்த பிராந்தியக் கட்டமைப்புள் நின்றுகொண்டு பூகோள ரீதியான வாழ்வை அதன் ஆகக்கூடிய அளவில் அனுபவிக்க முயல்கிறது. ஆனால் ஆசிய - ஆபிரிக்கரோ இன்னும் தேசிய கட்டமைப்பை உருவாக்குவதில் அரைக் கட்டத்தைக்கூட தாண்ட முடியாதவர்களாய் உள்ளனர்.

எனவே மனிதன் பூகோளப் பிராணியாகிவிட்ட இந்தச் சகாப்தத்திலல் எம்மை ஏன் இப்படி மேற்குலகு கட்டி இழுக்கின்றது என்று இழுப்பவனைப் பார்த்து கேட்பது மட்டுமன்றி நாம் ஏன் வேகமாய் ஓடத் தகுதியற்றவர்களாய் நின்றுகொண்டு மேற்குலகாற் கட்டி இழுக்கப்படக்கூடிய நிலையிலேயே உள்ளோம் என்ற கேள்வியையும் சேர்த்தே கேட்கவேண்டும். எங்கள் வளர்ச்சியின்மைகளுக்கும், பின்தங்கல்களுக்கும், இழுவுண்ணல்களுக்கும் நாங்கள் எவ்வளவு பொறுப்பு என்பதைக் கண்டறிந்து எங்களிடமுள்ள தடைகளையும் தாண்டினாற் தான் உலகரங்கில் நாங்கள் நிமிந்து ஓடமுடியும், சுதந்திரமுள்ளவர்களாய், சுயகௌரவம் மிக்கவர்களாய் நிமிரமுடியும். சமதையான பூகோளப் பிராணியாக முடியும். பூகோளப் பிராணி என்பதற்கு வெளியே இனிமேல் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், காதல், கல்யாணம், கக்கூசு என்று எதுவுமே இருக்க முடியாது. ●

> எங்கள் வளங்கள், எங்கள் மூளைகள், எங்கள் எண்ணங்கள் எங்கள் உணர்வுகள் எல்லாம் மேற்குடன் இணைத்துக் கட்டப்பட்டு மேற்கின் இழுவை வேகத்தில் இழுவுண்டு அரைகின்றன.




மிக விரைவில்....

ஓயாத அலைகள் - 01 சித்திரக்கதைத் தொடர் ஈழநாதம் வார வெளியீடான வெள்ளி நாதத்தில் வெளிவரவுள்ளது



அரசியல்

# சமாதான முயற்சிக் கூடாக சிறிலங்கா பெறமுயற்சிக்கும் பொருண்மிய மீட்சி

சிறிலங்காவினுடைய அரசியல் வரலாற்றிலும் பல தவறுகளும் சம்பவங்களும் மீளவும் மீளவும் காலத்துக்குக் காலம் நடந்தேறி வந்துள்ளன.

இந்தத் தவறுகளும் சம்பவங்களும் சிறிலங்காவில் இன்றுவரை காணப்படும் முறுகல் நிலைக்கும் மோசமான பொருண்மிய அழிவுக்கும் காரணமாக இருந்து வந்துள்ளன.

இம்முறை ஆட்சிபீடம் ஏறிய சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசும் இந்தத் தவறினை இழைத்து விடுமோ என்ற சந்தேகத்தைத் தோற்று விக்கும் வகையில் அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஆரம்பத்தில் தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய முன்னணி அரசு தன்னுடைய முக்கியஅரசியல் குறிக்கோள்களாக சமாதான முயற்சிகளையும் பொருண்மிய மீட்சியையுமே முன்வைத்தது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசிடமிருந்து ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் ஆட்சி கைமாறுகின்ற போது பொதுசன ஐக்கிய முன்னணியின் மிக மோசமான ஆட்சியினால் சிறிலங்காவின் பொருளாதாரம் கையறு நிலையிலேயே இருந்தது.

அத்தோடு சிறிலங்காவின் இராணுவப் பலம் என்பது மிகவும் பலவீனப்பட்டு அதன் கட்டமைப்புக்களும் சிதைந்து போயிருந்தன.

அந்த நிலையில் சிறிலங்காவின் பொருளாதாரத்தையும் அரசியல் இஸ்திரத்தன்மையையும் நிர்ணயிக்கின்ற பெரும் சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகளே இருந்தார்கள். இன்று வரை இருக்கிறார்கள்.

இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் போரரங்கில் தொடர்ச்சியாகப் பெற்ற தொடர் வெற்றிகளும் சிறிலங்காவின் பொருண்மிய சக்தியை குறிவைத்து நடத்திய மிக நுட்பமான இராணுவ வெற்றிகளுமே காராணமாக இருந்தது.

அன்றைய சிறிலங்காவின் பொருண்மிய நிலை என்பது சிறிலங்காவின் தேசியக் கடன் மட்டும் ஒரு இலட்சத்து நாற்பதினாயிரம் கோடி ரூபாவா கவும் இருக்கும் நிலையிலேயே இருந்தது.

அத்தோடு சிறிலங்கா மிக மோசமான பொருளாதார வங்குரோத்து நிலையை ஜே.வி.பி கிளாச்சியின் .போது சந்தித்ததை விட அபாயகரமான கட்டத்தை சந்திக்கும் காலமாக 2001 ஆம் ஆண்டு இருக்கும் அளவிற்கு நிலமை மாறியிருந்தது.

இந்த நிலையில் சிறிலங்காவின் கைத்தொழில் அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான ஜீ.எல். பீரிஸ் "பொருளாதாரத்தை சரியான பாதையில் ஓட்ட ஒரு அசாதாரண முயற்சி தேவை" என்று சிறிலங்காவின் பொருண்மிய மீட்சிக்கான ஆலோசனை வழங்கினார்.

**ஐக்கிய தேசிய முன்னணி அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையினை தனது பொருண்மிய மீட்சிக்கும் படை வலுப்படுத்தலுக்குமான ஒரு சதுரங்கக் காய் நகர்த்தலாக பயன்படுத்த முயற்சிக்கின்றதோ என்ற சந்தேகம் வலுக்கின்றது.**

அதேநேரத்தில் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததற்கு "சரியான அடித்தளமின்மையே" பிரதான காரணமென்றார்.

இவ்வாறு சமாதான முயற்சி பற்றியும் பொருண்மிய மீட்சி பற்றியும் மிக அவதானமாக சிந்தித்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு இவற்றுக்கான தனது முயற்சிகளை மேற்கொண்டது.

இது சமாதான முயற்சியாக நோர்வேயின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொண்டு அதற் கான ஆதார அடித்தளத்தை இட்டது.

அதன் மூலம் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் எழுந்த புதிய சூழலைப் பயன்படுத்தி தனது பொருண்மிய மீட்சிக்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசு சமாதான முயற்சிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி நிறைவேற்ற வேண்டிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் காட்டவில்லை.

இந்த வகையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு புரிந்துணர்வு உடன்படிக்கை யினை தனது பொருண்மிய மீட்சிக்கும் படை வலுப்படுத் தலுக்குமான ஒரு சதுரங்கக் காய் நகர்த்தலாக பயன்படுத்த முயற்சிக்கின்றதோ என்ற சந்தேகம் வலுக்கின்றது.

ஏனெனில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஒருபுறமிருக்க புதிதாக இந்தியாவுடன் எண்ணைக்குத ஒப்பந்தம், அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம், சீனாவுடன் ஆயுத ஒப்பந்தம், இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் எனப் பல ஒப்பந்தங்களை மேற்கொள்கின்றது.

சிறி.இந்திரகுமார்

இவ் ஒப்பந்தங்கள் பொருண்மிய மீட்சியை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாது பலநோக்குக்கொண்ட நீண்ட கால அடிப்படையிலான ஒப்பந்தங்களாகவே இருக்கின்றன.

அமெரிக்காவிற்கு திருமலைத்துறைமுகத்தை பயன்படுத்த அனுமதிக்கும் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டமைக்கு கைமாறாக இராணுவ உதவி மற்றும் பயிற்சி சார்ந்த ஒப்பந்தத்தை கைமாறாகவும் சீனாவிற்கு வடக்குக்கிழக்குப் பகுதிகளில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்குவதன்மூலம் கடற்படையை வலுப்படுத்துவதற்கான ஆயுத உடன்பாட்டையும் மேற்கொண்டுள்ளது.

**ஐக்கிய தேசிய முன்னணி அரசும் வரலாற்றில் நிகழ்ந்த தவறுகளை முன்னுதாரணங்களாகக் கொள்ளவேண்டுமேயொழிய வழி காட்டியாகக் கொள்ளக் கூடாது.**

இந்த ஒப்பந்தங்கள் மூலம் ஒன்று தமிழர் தாயகப் பிரதேசத்தின் வளங்களை அன்னிய சக்திகளுக்கு விற்க முயற்சிக்கின்றது. இரண்டாவது தமிழர் தாயகப் பிரதேசத்திற்குள் நேரடியாக மாற்று சக்திகளின் தலையீட்டை நுளைத்து ஒரு பதற்றமான நிலையைத் தோற்றுவிக்க முயற்சி செய்கின்றது.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பாக இராணுவத்தை சிறிலங்கா அரசு உருவாக்க முயற்சிக்கின்றதா என அரசியல் ஆய்வாளர்கள் எழுப்பியிருக்கும் கேள்வியோடு ஒப்பிடுகையில் சிறிலங்கா அரசை நோக்கி இன்னும் பல சந்தேகக் கேள்விகளையே தோற்றுவிக்கிறது.

சமாதானத்தின் மீது அதிக நம்பிக்கையை காட்டிக் கொள்வதுபோல பாவனை காட்டும் சிறிலங்கா அரசு இராணுவத் தரப்பையே அதிகம் நம்புகிறதா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இவற்றை உறுதிசெய்யுமாப் போன்றே தற்போது சிறிலங்கா அரசும் ஆரம்பத்தில் இணங்கிக் கொண்டதற்கு மாறாக இரண்டு விடயங்களில் தளம்புகின்றது.

(1) புலிகள் மீதான தடைநீக்கம்.
(2) இடைக்கால அரசு பற்றிய பேச்சு.

தாய்லாந்தில் நடைபெறப் போகும் பேச்சுக்களுக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டுமென புலிகள் தரப்பால் வலியுறுத்தப் பட்டு விட்டநிலையில் புலிகள் மீதான தடைநீக்கம் என்பது தாய்லாந்துப் பேச்சுக்களுக்கு திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னரே நீக்கப்படும் என்பதும். ஆரம்பத்தில் சிறிலங்கா அரசு இணங்கியதற்கு மாறாக பேச்சுக்களின் போது இடைக் கால அரசு பற்றிய பேச்சோடு நிரந்தரப் பேச்சுக்கள் தொடர்பா கவும் பேசவேண்டும் என்ற ஜீ.எல் பீரிஸின் கூற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மீது பலத்த சந்தேகங்களைத் தோற்றுவிக்கின்றது.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு தனக்குத் தேவைப்பட்ட கால அவகாசமாக இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலத்தை சிறிலங்கா அரசு பயன்படுத்துமாயின் சிறிலங்காவில் அமைதி தொடர்பான நம்பிக்கை எப்பொழுதுமே கானல் நீராகவே மாறும்.

இப்போது நிலவும் கால தாமதம் அல்லது தட்டிக்கழிக்கும் போக்கே அண்மையில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நடைபெற்ற மக்கள் வெகுஜன போராட்டமாகும். அத்தோடு தற்போது யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்திருக்கும் இராணுவ முகாமகளை முற்றுகையிடுவதற்கான மக்கள் வெகுஜனப் போராட்டமுமாகும்.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசும் வரலாற்றில் நிகழ்ந்த தவறுகளை முன்னுதாரணங்களாகக் கொள்ளவேண்டுமேயொழிய வழிகாட்டியாகக் கொள்ளக் கூடாது.

## மதவடி மயிலர்

செய்தி:- யாழ் தீவகத்தில் புலிகளுக்கு மக்கள் சிறப்பான வரவேற்பு
மயிலர்:-பேயைக்கண்டு அஞ்சிவாழ்ந்தவைக்கு தங்கட பிள்ளைகளைக் கண்டால் பின்ன எப்படியிருக்கும்.

செய்தி: சிறிலங்கா சனாதிபதியின் முன்னாள் ஊடக ஆலோசகர் சனத் குணதிலக பிணையில் விடுதலை!
மயிலா:- பொய்யைச் சொல்ல ஆலோசனை சொன்னவைக்கு இப்ப தாங்கள் பிணையில் வர ஆலோசனை தேவையாய் இருக்கு.

செய்தி:- சுதந்திரத்தின் பின்னர் என்றும் சந்தித்திராத பெரும் நிதி நெருக்கடிக்குள் சிறிலங்கா அரசு?

மயிலர்:- ஆத்தில போட்டாலும் அளந்து போட வேணும் என்று அந்த காலத்திலேயே எங்கட ஆக்கள் சொல்லி வைச்சிருக்கினம்.

செய்தி:- யாழ்குடாநாட்டில் படைமுகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன?
மயிலர்:- சரியா பலவீனப்பட்டு போனவர் இப்ப பலம் பெற்று விடலாம் எண்டு அந்தரிக்கினம் பாருங்கோ

செய்தி:- தொடர் பயிற்சிகள் வழங்கப்பட்டு படையினர் தயார் நிலையில் உள்ளனர் மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா?
மயிலர்:-முன்னமும்தொடர் பயிற்சி பெற்றுதான் இந்த இடம் எல்லாம் விட்டு ஓடிப்போனவை!

செய்தி:- சீனா சிறிலங்காவிற்கு ஆயுத உதவி. கடற்படையை வலுப்படுத்த உடன்பாடு.
மயிலர் :- கைத்தடிமாரின் காலமும் போய் கைகுலுக்கும் காலமும் போய் இப்ப கைப்பிடிக்கும் காலம் போல.

செய்தி:- புலிகள் மீதான தடையை நீக்க கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச.

மயிலா:- தங்கட தேர்தல் தோல்விக் கணக்குப் பார்த்து முடிஞ்சுது. இப்ப கருத்துக் கணிப்பு பற்றி பேசினம். எப்பவும் இவைக்கு தேர்தல் ஞாபகம் தான்.





# இளையநாதம்

சிறுவர் கதை

## பேத்ரிக் ஏன் அழுதான்?

அம்மா சிறு பேத்ரிக்கை வீட்டில் விட்டு விட்டு ரொட்டிக் கடைக்குப் போனாள்.

பேத்ரிக் திறந்திருந்த ஜன்னலருகே சென்றான். ஜன்னலில் பூ வைக்கும் ஜாடி இருந்தது. பெரிய பலவண்ண பட்டாம் பூச்சி ஒன்று ஜாடியின் ஓரத்தில் வந்து உட்கார்ந்தது. பேத்ரிக்கிற்கு பட்டாம் பூச்சியைப் பிடிக்க வேண்டும் போலிருந்தது.

அவன் ஜன்னல் மீது முழங்கைகளை ஊன்றி கையை நீட்டி ஜாடியைத் தட்டி விட்டான். ஜாடி கீழே விழுந்து உடைந்தது.

பேத்ரிக் மிகவும் பயப்பட்டான். இப்ப என்ன நடக்கும்? அம்மா என்ன சொல்லுவாள்?

சிறுவன் உடைந்த துண்டுகளைப் பொறுக்கி தோட்டத்திற்கு எடுத்துச் சென்று சிறு குழி தோண்டிப் புதைத்தான். பின் ஜன்னலருகே உட்கார்ந்து



அம்மாவிற்காகக் காத்திருந்தான்.

அம்மா வந்து கதவைத் திறந்ததுமே பேத்ரிக் அவளிடம் ஓடி வந்து சொன்னான். அம்மா நான் பூ ஜாடியை உடைக்க வில்லை. உடைந்த துண்டுகளை தோட்டத்திற்கு எடுத்துச் சென்று சிறு மண்வெட்டியால் மண்ணில் புதைத்தது நானில்லை.

அம்மாவின் கண்களில் பேத்ரிக் கவலையைக் கண்டான்.

அப்ப பூ ஜாடியை உடைத்தது யார்? என்று அம்மா கேட்டாள்.

பட்டாம் பூச்சி.... என்று மெதுவாகப் பதில் சொன்னான் பேத்ரிக்.

அம்மா சிரித்துவிட்டாள்.

பட்டாம் பூச்சி பூ ஜாடியை எப்படி உடைச்சதுன்னு புரியுது.. ஆனா உடைந்த துண்டுகளை அது எப்படி தோட்டத்துக்கு கொண்டு போய் புதைச்சது? என்றாள் அம்மா.

பேத்ரிக் அம்மாவைப் பார்த்து அழுதே விட்டான்.

## உலகம்-போற்ற

அன்பு கொண்டு வாழ்ந்திட்டால்
அகிலம் உன்னைப் போற்றுமே!
பண்பு கொண்டு வாழ்ந்திட்டால்
பாரே உன்னை வாழ்த்துமே.

கடமை செய்து வாழ்ந்திட்டால்
காசினி உன்னைப் போற்றுமே!
மடமை நீக்கி வாழ்ந்திட்டால்
மானிலம் உன்னை வாழ்த்துமே.

ஒழுக்கத்தோடு வாழ்ந்திட்டால்
ஊரே உன்னைப் போற்றுமே!
உழைப்பை கையில் கொண்டிட்டால்
உலகே உன்னை வாழ்த்துமே.



இரா: வே. நாயகம்

## திமிங்கில மூச்சு



திமிங்கிலம் நீருக்குள்ளேயே வாழ்ந்தாலும் அது மூச்சுவிட அவ்வப்போது வெளியேவருகின்றது. சில நேரங்களில் தலையைத் தண்ணீருக்கு மேலே கொண்டு வராமல் நீருக்குள்ளேயே நாற்பத்திஐந்து நிமிடம் வரை திமிங்கிலத்தால் இருக்க முடியும். நீர்ப் பரப்புக்கு வந்துவுடன் முதலில் திமிங்கிலம் பலத்த சத்தத்துடன் மூச்சை வெளியே இழுத்துவிடும் இந்த சத்தம் அரைக் கிலோ மீற்றர் தொலை தூரம் வரை கூட நன்றாகக் கேட்கும் இப்படி பலதடவை மூச்சை வெளியே விட்டபிறகு காற்றை உள்ளே இழுத்துக் கொள்கின்றது பின்பு கடலுக்குள் சென்றுவிடும்.

உள்ளிருக்கும் காற்றை அடக்கி கொள்வதற்கு வசதியாக திமிங்கிலத்திற்கு பெரிய நுரையீரல் உள்ளது. ஒவ்வொரு தடவையும் மூச்சுவிட திமிங்கிலம் வெளிவரும் போது சுவாசிப்பதற்கு வசதியாக மூக்கு துவாரங்கள் அதன் தலைக்கு மேலே அமைந்துள்ளன. மூச்சை விழுத்துக் கொண்டு தண்ணீருக்குள் மூழ்கும் போது நுரையீரலுக்கு தண்ணீர் புகுந்து விடாதவாறு சிறிய வால்வுகள் மூக்குத் துவாரங்களை அடைத்து விடுகின்றன. இதேபோல் வாய்வழியே நுரையீரலுக்குள் தண்ணீர் புகுந்துவிடாதபடி தடுப்பதற்கு காற்றுப்பாதைகள் தாமாகவே மூடிக் கொண்டுவிடுகின்றன.

## விடுகதை ?



1) உன் கண்ணில் நீரென்றால் என் கண்ணிலும் அது தான் அது என்ன?

2) ஆட்டம் நின்றால் ஓட்டம் போச்சு அது என்ன?

3) உச்சியில் கிரீடம் வைத்தவனுக்கு உடம்பெல்லாம் கண்கள் அவன் யார்?

4) அண்ணன் தம்பி ஐவர் ஒரே வீட்டில் ஒற்றுமையாய் அவர்கள் யார்?

5) கொம்புக்காரன் யாரிடத்தும் வம்புக்காரன் அல்லன் அவன் யார்?

6) அசர வைப்பவன் அதிரவும் வைப்பான் அவன் யார்?

7) பாதிநாள் பெருப்பான் பாதிநாள் மெலிவான் அவன் யார்?

8) மழைக்கும் வெயிலுக்கும் இவன் மீதே மக்கள் விருப்பம் அவன் யார்?


9) ஒன்றாக இருக்கும் இருவர் வெண்நீரில் குளித்த பிறகு பிரிந்து விடுவார் அவன் யார்?

10) ஒரு முறை பல் விழுந்தால் அவனுக்க மறுமுறை முளைக்காது அவன் யார்?

விடைகள்

01) முகம் பார்க்கும் கண்ணாடி
02) இதயத்துடிப்பு
03) அன்னாசிப்பழம்
04) கைவிரல் - உள்ளங்கை
05) மான்
06) காற்று
07) நிலா
08) குடை
09) முட்டையின் மஞ்சள்கரு
10) சீப்பு

## கண்டுபிடியுங்கள்



மேல் உள்ள படத்தில் ஒரேமாதிரியான இரண்டு படகுகள் யாவை?

புகழன் பாடசாலைக்குச் செல்ல பேருந்து வந்துவிட்டது. இந்த மூன்று பாதைகளில் எந்தப் பாதையால் சென்றால் பேருந்தை அடையமுடியும்




## செய்து பாருங்கள்

### தண்ணீர் பாலாகும்

நமது ஊரில் பாலில் தண்ணீர் கலந்து வியாபாரம் செய்யும் பால்காரர்களைப் பார்த்திருப்பீர்களா! தண்ணீரைப் பாலாகமாற்றும் மந்திரம் ஒன்றை உங்களுக்கு சொல்லுகின்றேன்!

சுண்ணாம்பைச் சிறிதளவு தண்ணீரில் கரைய விடு! இந்தச் சுண்ணாம்புக் கரைசலை நன்றாகத் தெளியவிடு.

தெளிந்த பிறகு அதை ஒரு கண்ணாடி டம்ளரில் வடிகட்டி எடுத்துக்கொள்.

கண்ணாடி டம்ளரில் இருக்கும் சுண்ணாம்புக் கரைசலைப் பார்த்தால் வெறும் தண்ணீர் போலவே இருக்கும்.

ஒரு சிறிய கண்ணாடிக் குழாய் அல்லது குளிர் போன்ற பானங்களை உறிஞ்சிக் குடிக்க உதவும் குழாய் ஒன்றை எடுத்துக்கொள்.

இரண்டும் கிடைக்கவில்லை யென்றால் ஒரு கனமான பேப்பரை ஊதுகுழல் போல சுருட்டிக் கொண்டால் கூடப் போதும்.

அந்தக் குழாயை வாயில் வைத்து சுண்ணாம்புத் தண்ணீரில் கரைசலை உள்வாயினால் ஊது.

ஊது, ஊது தெளிந்த சுண்ணாம்பு நீர் பால் போல வெண்மை நிறமடையத் தொடங்கும்! பார்ப்பதற்கு அது பால் போன்று இருக்கும். உங்கள் நண்பர்கள் அந்தக் காட்சியைப் பார்த்து பிரமிக்கிறார்கள்! தண்ணீர் எப்படிப் பாலாக மாறியது என்று ஆச்சரியப்படுவார்கள்.

இந்த அதிசய மாறுதல் ஏன் ஏற்படுகிறது தெரியுமா?

தண்ணீரில் சுண்ணாம்பு சத்து கரையப் பட்டுள்ள தல்லவா? அத்துடன் உங்கள் வாயிலிருந்து வெளிவரும் கரிமில வாயு கலந்து கல்சியம் கார்பனேட் என்ற புதுச் சத்தாக மாறுகிறது. இந்தப் புதுச்சத்து தண்ணீ[illegible] கரையாது, அதனால் தான் தண்ணீர் வெண்மை நிறமடைகிறது. அதா[illegible] கல்சியம் கார்பனேட் தனித்து நிறம் பெறுகிறது.

இதே அடிப்படையில் செய்யும் கட்டிகளைக் கொண்டு கரும்பலகைகளில் எழுதுகிறார்கள் என்ற உண்மை உனக்குத் தெரி[illegible]



## சிறுகதை

# சூரியன் மறைய நிறங்கள் ஒன்றாகின

சி.மாதுளா

எதையோ திருட்டுத்தனமாகப் பார்ப்பது போல், சூரியன் பனை மரங்களிடையே நின்று எட்டிப்பார்க்கிறான்...

"அட, சூரியக்கதிரின் தொடுதூரம் மாறுபட, மாறுபட சூரியக்கதிரின் தெறிப்பில் எத்தனை... எத்தனை... விந்தைகள்... சூரியன் கதிரவனாகிப் பரப்பும் மஞ்சள் ஒளியில்... இந்த நீல ஏரி மோகங்கொண்டு தன் கரையை அரிக்கிறதோ... அட செம்மீன்... செம்மீன் ஏன் தெறிச்சுத் தெறிச்சுப் பாயுதுகள்... கோபமா...? மோகமா...? என்னவாய் இருந்தாலும் தண்ணீரோட கோவிச்சுப் போடாதீங்கோ... நீங்கள் மேலே எகிறி எகிறித் தெறிக்கிறதும் நல்லதல்ல,"

சட சட... சட... "எதடா இதுகள் வேகமாப் பறக்குதுகள்"... ஓ... சைபீரியன் வாத்துக்கள்... நீங்களும் எங்கட நாட்டுக்கா வாறியள்.. வாங்கோ... வாங்கோ... வரவேற்கிறம், ஆனால் ஒன்று, உங்கட காலம் முடிஞ்சோடன திரும்பிப் போடோணும். எங்கட நாட்டிலயும் உண்ணி கொக்குகள் இருக்கு".

"ம்... இவற்றையெல்லாம் பார்த்து, இரசிச்சு, அனுபவிச்சுக் கொண்டிருக்கிற இந்தக்கிளாலி உப்பு ஏரிக்குத்தான் எத்தனை... எத்தனை... உணர்ச்சிகள்... ஏரிகள் கடலோட வரலாற்றில சேர்ந்திருக்கே தவிர, பிரியவில்லைத்தான்... பிரிவின் துயரம் தெரிய வர வாய்ப்புகள் இல்லைத்தான்.

குமரன் தன் கைகளை அகலப் பரப்பி அந்த மணல் திட்டில் மல்லாக்காய்ப் படுக்கிறான்... அவன் மஞ்சள் மேனியை, மஞ்சள் கதிர்கள், மஞ்சள் ஆக்க பொன்னிறத்தில் ஒலிர்கிறான். ஒல்லியான உடலில், அகன்ற மார்பு, அதில் தெரிகின்ற வீரத்தழும்பு... அவன் ஒரு வீரன் எனச் சொல்லாமற் சொல்லுகிறது. ஏதோ... ஏதோ... அவன் மனதுக்குள் கிடந்து புறள்கிறது. அவனும் புறல்கிறான். கைகளை முகத்துக்குக் குறுக்கே வைத்தவாறே குப்புறக் கிடக்கிறான். அவன் உடலுக்கும், மனதுக்கும் ஏதோ சண்டை நடக்கிறதாக்கும்... எழும்பி இருக்கிறான். மார்பு மயிருக்குள் சிக்கிய மணலைத் தட்டுகிறான் மீசையிலும் மண் பட்டிருக்க வேணுமாக்கும், அதையும் மெலிதாய் தட்டுகிறான். கன்னத்தில் மயிர்க் கற்றைகள் சரிந்து சரிந்து விழுகின்றன... இடது கையால் மேலே மேலே எடுத்து விடுகிறான். மயிர் அவனது சொல்லைக் கேட்கவில்லையா? தெரியவில்லை... மயிர் மீண்டும் மீண்டும் அவன் நெற்றியில் விழுகிறது. நீளமான கால்களை அவன் நாடியுடன் இணைக்கிறான். கால்களை இறுகப் பற்றிக் கொள்கிறான். 'டாவின்சி' இவனை ஓவியமாக்கியிருந்தால், இந்த ஓவியம் தான் அவருக்குப் புகழைக் கொடுத்திருக்கும். அவனிடமிருந்து ஓர் வெறித்த பார்வை, இல்லை.. இல்லை... சோகம் தெரிகிறது. அவன் உப்பு ஏரியுடன் எதைக் கதைக்கிறான்?

"என்னுடன் மட்டும் நீ பேசு"

"என்னை மட்டுமே நீ தழுவிக் கொள்"

"என்னை மட்டுமே நீபாடிச் செல்"

"என் எண்ணங்களுக்கெல்லாம் நீயே ஊற்று"

"என் கேள்விகளுக்கெல்லாம் நீயே விடை"

"நீயே என் அம்மா... நீயே என் அப்பா... நீயே என் தங்கை... நீயே என் காதலி... நீயே... நீயே..."

"உப்பு ஏரி, உப்புக் காற்று, உப்பு வெளி... ஏய்... உன்னை ஒப்புக்குக் கூட யாருக்கும் கொடுக்கக் கூடாது... எனக்கே... எனக்கே... சொந்தம்.

குமரனின் உணர்வுகள் அவனையும் மீறிக்காற்றுடன் கலக்கிறது...

"ஆனையிறவின் மேனி தடவி போனது போனது பூங்காற்று..."

...றுத் தூரத்தே சருகுள் சரசரக்... றன...சரசரக்கும் ஒலி அன்றும் ...றும் ஒரே செய்தியையே ...னுக்குக் கொடுத்திருக்க வேண்டும். ... எனத் திரும்புகிறான்.

... உவன் சனியன் வறான் என்ர ...வையும், இயல்பையும் தலைகீழா... போகிறான்... ச்சே.. அமுதன், ...சனியனோ?" குமரன் தன் ...ள் நொந்து கொள்கிறான்.

... ஏரியும்... இயற்கையும் இப்ப தானே இனிமையைத் தருகுது. முன்னர் என்றால் சாவையல்லோ தருவதாக இருக்குங்கள்... காற்றால் கூட எனக்கும் அவனுக்கும் இடைவெளியை ஏற்படுத்தி விட முடியாது..."

"மச்சான் உன்னோட சேர்த்து எனக்கும் சென்றிபோடு"

"உனக்கென்ன வேலை பிரிச்சுத் தருகினமோ அதில என்னையும் சேரு"

"என்ர அம்மாவுக்கு கடிதம் எழுதினா, இடையில பறிச்சு எவ்வளவு அழகா உணர்ச்சிகளோட எழுதித் தருவான். அந்த நேரங்களில அமுதன் இல்லாட்டி ஒவ்வொரு நிமிசமும் ஒவ்வொரு வருசம்... இந்தக் கதிரவன்... கடல்... காற்று... இவைகளைப்போல தனக்குப் பின்னால் உள்ள உணர்ச்சிகளை மறைத்து எனக்கு இதம் தந்து கொண்டிருப்பவன் அவன் தானே"

"மனம் ஒரு குரங்கு" குமரன் தன் மனதுக்குள் மெதுவாய்ப் புன்னகைத்துக் கொள்கிறான்... புன்னகையை மனசுக்கு மட்டும் சொந்தமாக்க உதடுகளுக்குத் தெரியவில்லை.

" என்ன குமரன்? 'தனிமை' இயற்கையுடன் கதைக்கிற சத்தியைத் தந்திட்டுது போல...கடலம்மா என்னவாம்...? உப்புக்காற்று என்னவாம்...? உணர்ச்சியற்ற தொனியில் கேள்விகளைத் தொடுத்த அமுதன் பதிலை எதிர்பாரமலேயே கைகளைத் தலையணையாகப் பின்னந் தலையில் வைத்துக் காற்று வாங்கப்படுத்தான்.

"கிட்ட வருமுன்னமே பெரிசா சத்தம் போட்டு பம்பலடிதுக் கொண்டு வாறவன்... இண்டைக்கு மட்டுமேன் அமைதியாய்... ஆரோட கொளுவிற்று வந்து நிக்கிறானோ தெரியவில்லை.... ஏதாவது பிழைபிடிச்சா சண்டைக்கு வருவான், பிறகு அமுதனை வழமைக்குத் திருப்பிடலாம்..." என்று தன் மனதுக்குள். எண்ணிக் கொண்டவனாக குமரன்... அருகில் கிடந்த ஊரித்துண்டை எடுத்து அமுதனின் முகத்தில் விழக் கூடியதாய் எறிகிறான்... குறிதவறிய ஊரித்துண்டு அவன் மார்பில் விழுந்து, மார்பு மயிருக்குள் சிக்குகிறது.

"டேய் அமுதன் ஒரு கமரா இருந்தால் உன்னை இப்படியே படமெடுத்து..."

"படமெடுத்து எங்க குடுக்கப் போறாய்..."

"சனம் புது வீடுகள், கடைகள் கட்டத்தொடங்கியிருக்கினமாம், அதில தொங்க விடலாம்" கையில் அள்ளிய மணலால் குமரனைக் குளிப்பாட்டுகிறான் அமுதன்!

"இல்லை மச்சான்... இல்லை மச்சான்... டேய் எறியாத... எறியாத.. நான் சொல்லுறதக் கேள்"

"ஊரித்துண்டை எனக்கு எறிய முன்னமே இதை நீ நினைச்சிருக்க வேணும்" தன் கையில் ஒட்டிய மணலை குமரனின் முதுகில் துடைத்துக் கொள்கிறான் அமுதன்.

"டேய் அமுதன்.. இந்த உலகம் அழகையும் ரசிக்கும், அழகற்றதையும் இரசிக்குமடா.. இனியாவது நீ விளங்கிக்கொள்ளு"

"ஆகா.. என்ர மஞ்சள் மேனி.. நெருஞ்சி முள்ளுக் கீறல்கள்.. பறுவாயில்லை மச்சம் போல தான் கிடக்கு. எல்லாத்தையும் விட என்ர மீசைதான் எனக்கு பிளஸ் பொயின்ட் இந்தச் சூரியனால கூட என்னைக் கறுப்பாக்க முடியல்லை பார்த்தியா..?

"அமுதன், உன்னைப் பற்றி நீ பெருமையாய் நினைக்கிறதே உனக்குக் கிடைச்ச வெற்றி தான்.. அது சரி என்ர மணிக்கூட்டிலே சின்ன முள்ளு ஐஞ்சைக் காட்டுது.. இவ்வளவு நேரமும் எங்க போனநீ..?

"முள்ளுக்கு என்னதான் வேலை, உணர்ச்சிகள் அற்று அதையே சுற்றிக் கொண்டிருக்கும்.. இண்டைக்குப் பௌர்ணமி விரதம். உனக்குத் தெரியாதோ?"

"ஓகோ... அதுக்கென்ன உன்னைக் காகத்துக்குப் பதிலா யாரும்..?"

அமுதன் திரும்பிக் கடலேரியைப் பார்க்கிறான், கண்களில் நீர்த்துளி பனித்திருப்பது கண்களின் ஒளியில் தெரிகிறது.

"அமுதன் உண்மையில் நான் மறந்து போயிற்றன். உன்ர மனசைப் புண்படுத்திற்றன் மச்சான்.. கோவிச்சிடாத.."

ஒரு குழந்தையாய் குமரன் அமுதனை இறுகப் பற்றிக் கொள்கிறான்.

"குமரன் நீ என்னை இன்னமும் புரிஞ்சு கொள்ளவில்லையா? நான் ஒரு நாள் சாப்பிடாமக் கிடக்கிறதை அறிஞ்சா அம்மாவின்ர மனம் எவ்வளவு பாடுபடும்.. என் அம்மாவை மறந்தாத் தானே நான் நினைக்கிறதுக்கு? விரதங்கள் எல்லாம் ஒரு சம்பிரதாயமடா.. அதை விடு.. இஞ்சேற்றா உனக்கொரு 'குட்நியூஸ்' சொல்லப் போறன்.

"என்னடா"


"உன்ர அம்மா உன்னப் பார்க்க வந்திருக்கிறாவாம். உன்னப் பாக்கிறத விட உன்ர மீசையைப் பார்க்கத்தான் துடியாத் துடிக்கிறா போல"

"டேய் அமுதன் சும்மா விளையாடாத.. அம்மா வந்திருக்கிறதெண்டு உனக்கு ஆர் சொன்னது"

"பொறுப்பாளர்"

"நீ பொய் சொல்லுகிறாய்"

"குமரன், சீரியசான விடயத்தில உன்னோட எப்பையாவது பகிடி விடுகிறனானே? கெதியாய்ப் போய்ச் சந்தி.. பாவம் கனகாலத்துக்குப் பிறகு வந்திருக்கிறா" குமரனின் முகம் மாறுதலுக்குள்ளாக நெற்றியில் கையை வைத்துப் பலமாக அழுத்துகிறான். "குமரன் என்ன முகம் வாடிப் போயிற்று.. என்ர அம்மா வந்திருக்கோணும்.. இப்ப உன்னைத் தனியாக விட்டுட்டே ஓடியிருப்பன்.. போ.. போய்ச்சந்தி. , நீ தானே அண்டைக்குச் சொன்னாய், உலகத்துல எல்லாம் எல்லாருக்கும் கிடைக்கிறதில்லை.. தாய் இருந்தா எல்லாம் கிடைச்ச மாதிரி எண்டு,



"அமுதன் விசர்க்கதை கதைக்காத கனடாவுக்குப் போனால் என்ன? பெத்த பாசம் விட்டு போயிடுமே? உன்னில இருக்கிற பாசத்துக்கு உன்னைப் பார்க்காம அவ இருக்கமாட்டாடா. எப்படியும் திரும்பி உன்னட்ட வருவா"?

"டேய் குமரன் நிப்பாட்டு.. அம்மா திரும்பி வர மாட்டாடா.. அவ உயிரோட இல்ல"

ஓ.... அன்று தானே நாங்கள் இறுகக்

பார் அடிக்கிற காத்தில் என்னை விடு என்னை விடு என்று இலைகள் எல்லாம் மரத்தை விட்டு பிரியப் போவதாய் சொல்லுதுகள் போலக்கிடக்கு பிரிஞ்சாத்தான் தெரியும்... ஆதாரத்தை இழந்து..."

"அப்படியில்ல அமுதன்...இலைகள் பிரிய மனமின்றி காற்றோட போராடுகினம் அது தான் உண்மை"

"குமரன் உன்னை... உன்ர உணர்ச்சிகளை... நான் புரிஞ்சு கொள்ளுறன்... நீ என் மேல் வச்சிருக்கிற பாசத்தை விளங்கிக் கொள்ளுறன்... ஆனால் உன்ர அம்மாவின்ர உணர்ச்சிகளையும், பாசத்தை யும் நீயும் விளங்கிக் கொள்ள வேணும்... பாவம் உன்னை

அமுதன் தத்துவம் பேசுறத நிப்பாட்டு.. எனக்குத் தலை சுத்துது. என்னைக் கொஞ்சம் யோசிக்க விடு.."

◆◆◆◆◆◆◆

"குமரன்.. இந்தக் கிளாலி ஏரிக்குக் கூட தாயுடன் சேரும் வாய்ப்புக் கிடைச்சிருக்கு.. நான் ஒரு போதும் என்ர அம்மாவோட சேரமாட்டனடா"

வேவுக்குப் புறப்படும் போது அமுதனின் உதடுகளிலிருந்து உதிர்ந்த அந்த வார்த்தைகள் தானே எங்கள் நாட்களின் அத்திவாரம்...

பின் நாட்களில அமுதன் தன் மனச்சுமைகளை மெல்ல மெல்ல என்னிடம் இறக்கத் தொடங்கினான்.. 'குமரன் அண்ணன்' என என்னை அழைப்பவன் பின் மச்சானாக்கி

> ■■ குமரன் நீ என்னை இன்னமும் புரிஞ்சு கொள்ளவில்லையா? நான் ஒரு நாள் சாப்பிடாமக் கிடக்கிறதை அறிஞ்சா அம்மாவின்ர மனம் எவ்வளவு பாடுபடும்.. என் அம்மாவை மறந்தாத் தானே நான் நினைக்கிறதுக்கு? விரதங்கள் எல்லாம் ஒரு சம்பிரதாயமடா.. அதை விடு.. ■■

"மச்சான் குமரன் என்ர அம்மா என்னை நினைச்சு ஏங்கிக் கொண்டிருப்பா.."

"எனக்காக சாப்பிடாம இருக்கிறாவோ தெரியேல்ல.."

"காற்றுப் படலைத் தகரம் சத்தம் கேட்டாலும் நான் வாறாத எட்டி எட்டிப் பார்ப்பாவா"

"எப்பையும் சமைக்கேக்க எனக்கும் சேர்த்துத் தான் அரிசி போடுகிறாவாம்"

"மூத்த அண்ணன் கனடாவுக்கு அம்மாவைக் கூப்பிடேக்க நான் என்ர பிள்ளையோட தான் நிற்பன் என்று நிக்கிறாவாம்"

"வீட்டை போற பொடியளிட்ட.. பிள்ளை என்ன செய்கிறான்..? தலைக்கு எண்ணை தேய்க்கிறானா? குளிக்கிறானா..? உடுத்துறானா..? நல்லாச் சாப்பிடுகிறானா? என்று அம்மா ஏங்கிக் கொண்டிருக்கிறாவாம்"

தும்மி விட்டு "அம்மா நினைக்கிறா போல"

இப்படி தானே அமுதன் ஓய்வு கிடைக்கும் நேரங்களில் தன் அம்மாவைப் பற்றியே பெருமை பேசிக்கொண்டிருந்தான். அன்று ஏனோ தெரியேல்ல..

"மச்சான் குமரன்.. நீ நம்ப மாட்டாய்.. நான் ஒரு உண்மையைச் சொல்லப் போறன் நீ நம்பமாட்டாய்.. நான் ஒரு உண்மையைச் சொல்லப் போறன்"

"என்னடா அமுதன் அம்மா என்ன கனடாவுக்கு போயிற்றாவோ? தூரப் போனதால் தான் உனக்கு கொஞ்ச நாளா தும்மல் வரலையோ"?

இல்லை மச்சான் குமரன்.. இல்ல மச்சான்.. என்ர அம்மா எனக்கு இல்லை மச்சான்"

கட்டப்பட்டோம். என்றும் பிரியாத நண்பர்களானோம் குமரன் இந்த நீரேரி தான் என்ர அம்மாவைத் திண்டது இந் நீரேரிக்கால வன்னிக்கு வரக்குள்ள தான் சிங்களக் கடற்படை அம்மாவை வெட்டி... இந்த நீரேரிக் குள்ள தான்ரா அம்மாவின்ர குருதி கலந்திருக்கு

வேவுக்காக இந்த நீரேரியை நீந்திக் கடக்கேக்க நான் சொல்லுவன் கடைசி வரை க்கும் இந்த நீரேரி எங்களுககுச் சாவைத் தாரதெணடு நீ ஏன் என்பாய்... நான் சொல்லுவன் இது என்ர தாயடா என்று அன்று ஆனையிறவு ஆமிக்காறன் கிளாலிக் கரையில் ஓடிக் கொண்டிருக்கேக்க நான் உணர்ச்சி வசப்பட்டு ஓடி ஓடிச் சுட்டுக் கொண்டிருக்கேக்க நீ சொன்னாய்

டேய் உணர்ச்சி வசப்படாம நிதானமாய்ச் சுடு எண்டு எப்படிக் குமரன் என்ர உணர்ச்சி களைக் கட்டுப்படுத்த முடியும்?

இந்த ஏரியில நூற்றுக்கணக்கில் ஆமி செத்து மிதந்தும் என்ர மனம் இன்றும் திருப்திப்படல மச்சான் இந்த ஏரியைப் பார்க்கப் பார்க்க என்ர அம்மாவைப் பற்றிய கற்பனை தான் வளர்ந்து கொண்டே போகுமடா. அந்தக் கற்பனையில தான் அம்மா இருக்கிறதா நினைச்சு உனக்கு அம்மாவைப் பற்றிச் சொல்லுறனான் என்ர சோகங்கள் என்னோடபோக வேணும்"

"என்ர கண்ணீர் என்னோட போக வேணும்"

"என்ர உதடுகள் மட்டும்தான் புன்னகையை மறக்க வேணும் அமுதனின் பெரு மூச்சும்,விக்கி விக்கி அழும் ஒலியும் குமரனின் சிந்தனையை அறுக்கிறது.

"அவனுக்கு பிரிவில் துயரம் எனக்கு சேர்வதில் துயரம்"

குமரன் நீண்ட பெருமூச்சுடன் அமுதனின் கைகளைப் பற்றிக்கொள்கின்றான்.

அமுதனின் கண்களில் கண்ணீர் காய்ந்த தடயங்கள் உப்பாய்ப் பூத்திருக்க அதைக் கழுவியவாறே மணலில் விழுகின்ற கண்ணீர்த் துளிகள் எங்கோ காணாமல் பொகின்றது.

"அமுதன் கவலைப்படாத"

"நான் கவலைப் படல மச்சான் அங்க எங்கே எங்கேயெல்லாம் தேடி இங்க கண்டு பிடிச்சாவோதெரி யல்ல... நீ போகாட்ட..."

"அமுதன் என்ர இந்தக் குழி விழுந்த கண்களையும், மீசை யையும் தவிர வேற என்னத்தைத் தான் அம்மா புதுசாப் பார்க்கப் போறா...நீ உன்ர அம்மாவில எவ்வளவு பாசமாய் இருந்த நீ எண்டு என்ர அம்மாவிற்கு நீ எழுதித் தந்த கடிதத்திலிருந்தே நான் புரிஞ்சு கொண்டனான். நீ எனக்காக எதையும் மறக்கவும் தேவையில்லை மறைக்கவும் தேவையில்லை இழக்கவும் தேவையில்லை... குமரன் கண்டிப்பான தொனியில் சொல்லி விட்டு அமுதனின் கண்களை உற்று நோக்கினான். முகத்தால் திருப் பப்பட்ட அமுதனின் பார்வை நீரேரி மேல் விழுகிறது.

"குமரன் நீ போட்டு வா... அது வரைக்கும் இந்த நீரேரி என் னோட கதைத்துக் கொண்டிருக்கும் நான் மட்டும் தான் இருக்கிறனெண்டு தெரிஞ்சா இன்னும் கூடுதலாகக் கதைக்கும்."

"உன்ர உதடுகளில இருந்து தான் இந்த வார்த்தைகள் வெளி வருகுது என்கிறதை நான் புரிஞ்சு கொள்கிறன் அமுதன் ஆனால் என்ர உள்ளத்தில இருக்கிற உணர்வுகள் தான்ரா உன்னோட பேசுது...

நான் உயிரோட இருக்கிறதுக்குக் காரணம் இரண்டு பேரடா ஒன்று நீ அந்தச் சண்டையில நான் காயப்பட்டுக் கிடக்கேக்க நீ மட்டும் உன்ர தோளில தூக்கிவராடடா?

நீ தந்த உயிர்ப்பிச்சை தான்ரா என்ர வாழ்க்கை... கடந்த ஐஞ்சு வருசமும்... "வேவு என்றால் நீயும் நானும்" "சண்டை என்றால் நீயும் நானும்.."

"ஒரு சாப்பாடடுப் பாசலில் நீயும் நானும்...

"உனக்கு நான் நம்பிகை..."

"எனக்கு நீ நம்பிக்கை"

"துன்பமும் மகிழ்ச்சியும் எங்களைத் தனியா எப்பவும் சந்திச்சதில்லை. எனக்கு எல்லாமே நீ தான் அமுதன் இப்ப மட்டும் தனியாக...என்ர அம்மாவை நான் என்னெண்டு வீசிய காற்று அள்ளிய மணலை அவர்களது முகங்களில் தூவி விட்டுச் செல்கிறது.

"எனக்காக உன்ர அம்மாவை இழக்கத் துணிஞ்சிற்றியா குமரன்"


"இல்லை அமுதன்... இல்ல அம்மாவை இழக்கக் கூடாது" "இப்ப நான் என்ரஅம்மாவை இல்ல... நாங்கள் எங்கட அம் மாவைச்சந்திக்கப் போறன்" வீசிய காற்று இருவரது தலைகளையும் வருடிச் செல்கிறது...

"சூரியன் காணாமல் போக நிறங்கள் ஒன்றாகியது. ●

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

# இரதோற்சவ சிறப்பு மலர்

## இரதாரூடக் காட்சி




ஏழாநாளிலே இரதாரோகண திருக்காட்சி வுண்டாம் இது சில ஆலயங்களில் ஒன்பதா நாளினும் செய்யப்படும்.

இதன் உண்மையை விவரணம் பண்ணுங்கால் ஆதிகாலத்திலே, தடங் கருணைப் பெருங்கட லெந்தையாகிய சிவபெருமான் மந்தர சேசரிமலைகள் அச்சாகவும் சூரிய சந்திரர்கள் சக்கரமாகவும் ஆறிருதுக்கள் சந்தியாகவும் பதினான்கு லோகமும் பதினான்கு தட்டுகளாகவும் ஆகாயம் ஆசனமாகவும் உதயாத்த மலைகள் கூவிரமாகவும் நதிகளதும் நதங்களும் கொடிகளாகவும் நஷத்திரங்கள் விதானமாகவும் மோசஷலோகம் மேல்விரிவாகவும் யாகங்கள் சட்டங்களாகவும் நாள் முதலியன இருக்குமரமாகவும் அட்டமலைகள் தூண்களாகவும் அட்ட யானைகள் தாங்குவனவாகவும் சத்த சமுத்திரங்கள் திரைச்சீலைகளாகவும் கன்ம ஞானேந்திரியங்கள் கலன்களாகவும் கலைகள் முனைகளாகவும் வேதாங்க உபாங்க மனு சாஸ்திரங்கள் மணிகளாகவும் வாயுக்கள் படிகளாகவும் நான்கு வேதங்கள் பூட்டப்படும் குதிரைகளாகவும் அமைக்கப்பட்ட இரதத்திலேயே எழுந்தருளி, கங்கை முதலிய தேவமாதர்கள் சாமர மிரட்டவும் ஊர்வசி முதலிய கணிகை மகளிர் நடனம் செய்யவும் மகா மெருமலையை வில்லாகவும் சரஸ் வதியை வில்லிற் கட்டிய மணியாகவும் வாசுகியை நாணாகவும் விஸ்ணுவைப் பாணமாகவும் அக்கினிதேவதையை அவ்வம்பின் கூர்வாயாகவும் வாயுதேவனை அம்பிறகாகவும் கொண்டருளி பிரமனாகிய சாரதி பிரணவமாகிய தூண்டு கோல் கொண்டு செலுத்த திரிபுர அவுணர்களைத் தந்திருப்புன்னகை அக்கினியினால் நீறாக்கி அருளினார் எனும் வரலாற்று உண்மையைக் காட்டுவதோ இவ்விரத சேவைக் காட்சி என அனுமிக்கப்பட்டு விஸ்வ ரூபியாயும் விவ்வ காரணராயும் விஸ்வ சேவிபராயும் விவ் வாத்தரியாமியாயும் இருப்பவர் சிவபெருமான் என்பதும் முப்புரம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மல காரியங்கள் எனவும் அத்திரிபுரங்களையும் நீறாக்க தாரகாஷன் கமலாஷன் வித்துன்மலி என்னும் மூவர்களையும் தேவர்களையும் அடிமையாக்கிக் கொண்டு விஞ்ஞான கலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களையும் 'அடிமையாய் கொண்டு திருவடி முத்தி கொடுக்கும் உண்மை எனவும் அறிய நின்றதனால் எல்லாமா்ய அவைகட்குக் காரணமாய் நிர்கும் பரமபதியாகிய சிவபெருமானே ஆன்மாக் கட்கு மும்மலபந்த வாதனை களைக் கெடுத்து திருவடிப் பேறாகிய பேரானந்தப் பெருவாழ்வளிப்பர் என்பதும் உணரப்படும்.

"மந்தரத்தோடு கேசரி நெடுவரை வாங்கித் தந்து தீண்டிற லச்செனப் படுத்தினர் தகைக்குஞ் செந்தனிக்கதி ரினைத்தை வெண்டிங் களைத் திருத்தி யுந்து பேரெழிலாழி கொண்டவைக்கடை யுறுதி"

"அப்பணி செஞ்சடை யாதி புராதனன் முப்புரஞ் சென்றள னென்பர்கண் மூடர் கண் முப்புரமாவது மும்பல காரிய மப்புர மெய்தமை யாரறிவாரே"

இங்ஙனமன்றி தேரிலே விளங்கும் ஏக உச்சிக்குடை பிரமரந்திரமாகவும் மேலுள்ள முதலாம் அடுக்கு துவாத சாந்தத்தனமாகவும் இரண்டாம் அடுக்கு மஸ்தக ஆதிதான மாகவும் மூன்றாம் அடுக்கு மத்தியத் தானமாகவும் நாலாம் அடுக்கு மஸ்த காந்தத்தானமாகவும் ஐந்தாம் அடுக்கு லலாட மத்திய மாகவும் ஆறாம் அடுக்கு புருவ மத்திய மாகவும் நடுவுள்ள ஏழாம் அடுக்கான முப்பத்திரண்டு குத்துக் கால்கள் முப்பத்திரண்டு தத்துவங்களாகவும் மும்முறைகளே கண்களாக வும் பிற்றுறைகள் சிகைகளாகவும் பீடமுதற் பகுதி வாயாகவும் இடப்பக்கத்துள்ள இரு குதிரை வடிவங்கள் இடப்பாக சூரிய சந்திர கலா வாசிகளாகவும் வலப்பக்கத்திலுள்ள இரு குதிரை



வடிவங்கள் -வலப்பாக சூரிய சந்திர கலாவசியாகவும் சாரதி வடிவம் மும்மலரூபம்- நசி என்பனவாகவும் எட்டாம் அடுக்கிடப்பகுதி அந்தக்கரணசொரூபம் கண்டத்தானம் என்பன வாகவும் அதின் கீழிடப்பகுதி ஐந்தாவத்தை- ஐங்கோசம் - இராகாதி பதின்முக்குணம் என்பவற்றின் ரூபமாகவும் இருதயத் தானமாகவும் அதின் கீழ்ப்பகுதி தசேந்திரியம் -நாபித்தானம் ஆகவும் அதின் கீழ் உள்ள அச்சு பஞ்சபூதம் குண்டலி சந்தித்தானம் ஆகவும் சக்கரங்கள் தச வாயுக்களாகவும் இருகால் களாகவுங்கொண்டு சரீர சொருபத்தை விளங்கி பின்னர் சக்கரங்களான தச வாயுக்களையும் நிறுத்த அசைதன் முதலிய வினை கள் ஒழியும் எனவும் அவ்வா றுள்ள சீவன் தன்மன தத்துவத்தை முறையே மேலாக விளங்கும் உந்திக்குண்டலியில் இருந்து நாபிக்கும் அங்கிருந்து முறையே இருதய கண்டத் தானங்களுக்கும் ஏற்றி லயப்படுத்தி அங்கிருந்து மேலாக விளங்கும் வாய் நாசி என்பவைகளுக்கும் ஏற்றி லயப்படுத்தி அங்கிருந்து இரு கண்கள் வழியாகவும் மேன்னோக்கி ஆறாம் அடுக்காகிய புருவ மத்தியத்திற்கும் அங்கிருந்து ஐந்தாம் அடுக்காகிய லலாடமத்தியத்துக்கும் அங்கிருந்து மற்றைய அடுக்குகளாகிய மஸ்தக அந்தத்தானம் மத்தியத்தானம் ஆதிதானம் துவாதசாந்தத் தானம் என்பவைகளுக்கும் அங்கிருந்து மேல் உச்சிக் குடையாகிய பிரமாந்தி ரத்துக்கும் ஏற்றி லயப்படுத்தி அங்கனம் சும்மா இரந்தபடி இருக்கும் நித்திய நிரதிசயானந்த ரூபியாயிருக்க வேண்டும் என்பனவும் உணரப்படும்.


இன்னும் தேர்வடிவம் சரீரமாகவும் அதிற்காணப்படும் நான்கு சிங்க வடிவங்கள் ஆன்மாவின் சர்வவித சீவகாருணியமில்லா லோப குரூரம் சர்வவித ஆனசப் பெருக்க சங்கற்ப விருத்தி சர்வவித அபிமான கோலாகல விபரீதம் சர்வவித அகங்கார கோபதாப விகாரம் என்னும் அன் நான்குவித கர்ம விருத்திகளாகவும் எட்டு யாழி உருவங்கள் ஆன்மாவினது அஞ்ஞானம் அபிமானம் ராகாதி குணம் துக்கம் விடய வாசனை நாலுவித கன்மம் உபாதி அவ ஸ்தை என்னும் எட்டுவித அனுபவங்களாகவும் கொடிகளெல்லாம் தத்துவ கூட்டங்களாகவும் கணிகளெல்லாம் பீசுமந்திர பிரணாவாதி சத்தங்களாகவும் குஞ்சங்களெல்லாமஞ் சீவர்கள் மனோசலனத்தால் எண்பத்துநான்கு பக யோனி பேதங்களாக மாறிமாறித் தோன்றியமையும் மரணாவத்தையாகவும் கொண்டு; சீவர்கள் சிங்கங்களை ஏந்த கர்ம விருத்திகளையும் யாழிகளைப் போன்ற அனுபவங்களையும் கொடிகளைப் போன்ற அனுவங்களை கெடிகளைப் போன்ற தத்துவக் குழாங்களையும் மணிகளைப் போன்ற வாக்ககாலிகளையும் குஞ்சங்களைப் போன்ற மனசலன தோற்றங்களையும் இல்லை என்னும்படி செய்து சித்திர தீபம் போல நின்று மோனசாட்சாகார கோல நிலையில் நிற்க வேண்டும் என்பதும் இந்த லக்கிரம திதிக்கோலத்தால் அறிவார் நுண் உணர்வோர்.

*பிரதிஷ்டாகிரியா கலாமணி*
*சிவாகம கலாநிதி*
*வேதாகம கிரியாவிநோதன் வேதசிவாகம*
*பிரதிஷ்டா சரஸ்வதி*
*வேதாகம மாமணி*
*சிவாகம வித்தியாகர ஞானபானு*
*வேதாகம சஸ்த்ர விசதர்ன ஞானசாகர*
*கிரிகாசிரேஸ்ர குருமணி*

*சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள், தீஷா நாமம் ஈசான சிவர்சாரியார், உத்திரகோவை.*

(சி/6929)

# தேர் ஏறிப் பவனிவரும்
# தேவி நயினை ஸ்ரீ நாகபூஷணி



அண்டசராசரங்களுக்கு எல்லாம் தாயானவளும் முப்பத்திரண்டு அறங்களையும் செயற்படுத்தி, அறம் வளர்த்த நாயகியாகவும் விளங்கும் உலக மாதா, நயினையில் ஸ்ரீநாக பூஷணி என்ற நாமத்துடன் , எழுந்தருளி உள்ளாள். காலம் கடந்த, சிந்தனைக்கு எட்டாத தெய்வீகத் தோற்றத்தில் "தான் தோன்றியாகி" எழுந்து விளங்கும் , இத் தாயின் தேர்த்திருவிழா 23.06.2002இல் நடை பெறஇருக்கின்றது. யாழ்.குடாநாட்டில் உள்ள தீவுகளின் இருதயஸ்தானம் என்று வழங் கப்படும் புகழ் பூர்த்த நயினாதீவுக்கு இல ங்கை மண்ணில் இருந்து எண்ணிறைந்த அடி யார்கள் வந்தவண்ணமாக இருக்கி ன்றார்கள். தற்போதைய அரசியல் மாற்ற த்தில் ஏற்பட் டுள்ள நிலைப்பாடடைச் சாதகமாகக் கொண்டு தமிழ் ஈழத்தாயக மக்களும் ,தென்னிலங்கை மக்களும் தினம் தினம் சிறு சிறு தடைக ளையும் தர்ண்டி இப்புண்ணிய பூமிக்கு நேரம் காலம் பாராமல் வந்த வண்ணமாக இருக்கின் றார்கள். அன்னை தேர் ஏறிவரும் நாளில் பெரும் தொகைஅடியார்கள் இம்முறை வருவா ர்கள் என்ற எதிர்பார்ப்பில் அரச அதிபர் மட்டத்திலும் ,வேலனை பிரதேசஅலுவலர் மட்டத்திலும் அடியார்களுக்கான போக்கு வரத்து, சுகாதார குடிநீர் வசதிகள் பற்றிய ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. இவற்றை நடைமுறைப்படுத்துவ தோடு நில்லா மல், மேலும் பல வசதிகளையும் ஆயத்தங் களையும் கோவில் அறங்காவலர் சபையி னரும் மேற்கொண்டுள்ளனர்.

தரைவழிப்பிரயாணத்தில் வரும் அடியார் கூட்டத்தினரை கடல் வழியாக கரைசேர்ப்பது என்பது இலகுவான காரியமல்ல. அளவுக்கு மிஞ்சி படகுகளில் மக்களை ஏற்றாமல் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் ஏற்றிவர வேண்டும் என்ற கண்டிப்பான பணிப்புரை களை இம்முறை படகு உரிமையாளர்கட்கு கூறிவைத்ததோடு, கோவில் நிர்வாகமும் புதிய இரண்டு படகுகளை கொள்வனவு செய்து சேவையில் விட்டுள்ளது. சுமார் 15 படகுகள் இம்முறை சேவையில் ஈடுபடும் என எதிர்பார்க்கின்றோம். தம்பையா தாக சாந்தி நிலையமும், குடிநீரும், வழமைபோல் அடியார்கட்கு அமுதசுரபி, அன்னதான சபையினர் கொடிஏற்றம் முதல் தெப்பத்திருவிழா வரையான 16 நாட்களும் அன்னதானம் வழங்குவார் கள். இந்தப் 16 நாட்களும் தவிர்ந்த (350) முன்னூற்றி ஐம்பது நாட்களும் ஆலய கல்யாண மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபையினர் தினமும் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார் கட்கு நித்திய அன்னதானத் தொண் டினைச் செய்து வருகின்றார்கள். கடல் கடந்து வரும் அடியார் பசிப்பிணி தீர்ப் பது தான் அறங்காவலர் நோக்கமாகும். இத் தொண்டில் பலர் தம்மை இணைத் துக்கொண்டு அறம்காவலர் சபைக்கு மேலும் மேலும் ஆக்கத் தையும், ஊக்கத்தையும் தந்து கொண்டிருக்கிறார்கள்..இது ஒரு புண்ணியமான செயல் என்பதை அப்பர் அடிகள் தம் வாக்கில் எப்படிக் கூறுகின்றார் என்று கவனிப்போம்.

"மன்றும் மலைமகள் கையால் வருடிள மாமறைகள்
சொன்ன துறை தொனும் துய் பொருளாவள தூக்கமல
அள்ளவயத்தள அன்புடைத் தொண்டற்கு அமுதருத்தி
இன்னல்கஉள வள இன்னம்பராம் தன் இளையடியே"

வரும் அடியார் குறைகளைத்து வரும் ஆலய நிர்வாகம் அடியார் களால் தரப்படும் அறச் சொத்தில் ஒரு பகுதியை, சமுதாய, சமய சேவையிலும் ஒதுக்கி செயல்படுத்த வேண்டும் என்ற பெரு நோக்கில் கடந்த சில ஆண்டுகளில் இருந்து பின்வரும் அமைப்புக்கட்கு நிதி உதவியைச் செய்தது. இந்த வகை யில் சுமார் ஏழு லெட்சம் ரூபாவை இன்று வரை வழங்கி உள்ளது. திருநெல்வேலி சைவவித்தியா அபிவி ருத்திச்சங்கம் அனாதைச் சிறுவர் இல்லம், கிளிநொச்சி யோகர் சுவாமி முதியோர் இல்லம், தீவக கல்வி வலய பண் ணிசை அமைப்பு, நயினாதீவு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், கல்வி கலாச்சார அமை ப்பு, யாழ் போதனா வைத்திய சாலை, மகப்பேறு அலகுகள் மூன்று புனரமைப்பு போன்றன முக்கியமா னவை.

1997ல் ஆரம்பமான ஆலயத் திருப்பணிகள் பலதரப்பட்ட சிரமங்களையும் தாண்டி இவ் வருட உயர் திருவிழாவுடன் பூர ணமாகி உள்ளது. புதுப்பொலி வுடன் திகழும் அன்னையின் திருக்கோவி லின் தோற்றம், கண்டவர் மனதில் தனியான ஒரு தூய எண்ணம் தோன்றுவதை எம்மால் காணமுடி கின்றது. புதுமெருகுடன் பொலிவுற் றுள்ள அன்னையின் ஆலயத்தின் தோற்றத் தையும், செயற்பாடுகளை யும் வளம் கொழிக்கும் வன்னிமண் வாழ் மக்களும், தமிழகத் தாயக மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பெருநோக்கில் சங்கத்தமிழில் வன்னி மண்ணில் இருந்து வெளிவரும் எம் ஈழநாதம்; அன்னையின் தேர்த்திருவிழாவை யொட்டி ஓர் சிறப்பு மலரை வெளியிட முன் வந்துள்ளமை கண்டு பெருமகிழ்வு கொள்கி ன்றோம். கூடிய விரைவில் எம் மண்ணில் நிரந்தரமான சாந்தியும், சமாதானமும் நிலவ வேண்டும். அல்லல்பட்டு ஆற்றாது, அழுத கண்ணீரோடு புலம்பெயர்ந்த எம் மக்கள் எம் மண்ணில் வந்து மகிழ்வோடுவாழ அன்னை தேரேறிவர வேண்டும் என வேண்டி எல்லா மக்க ளும் நேராக வந்து தரிசனம் செய்ய முடியாமல் இருந்த போதும் தேரேறி வரும் அன்னையின் கண்ணருள் அவர்கட்கும் கட்டாயம் கிடைக் கும். இத னையே நயினைப் புலவர் என்று அழைக்கப்படும். ஸ்ரீமான் நாகமணிப்புலவர் திடமாக எப்படிக் கூறுகின்றார் என்று பார்ப் போம்.

பெற்றதால் அன்னை பெறுமுயிர் அனைத்தும்
பேணலால் அன்னை பெற்றிடவோர்
உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை உலகொடுவானும்
தொழுதலால் அன்னை என்னென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்.

நன்றி

நயினாதீவு

*கா. ஆ. தியாகராசா*
*தலைவர் ஸ்ரீ நாகபூஷணி*
*அம்மன் கோவில்.*

## ஆசிச் செய்தி

*அகில அண்டங்களையும் ஆண்டு அலைகடல் மத்தியிலே வீற்று அல்லலுறும் அடியவர்களுக்கு அருள் புரியும் அன்னை நாகபூஷணி அம்பிகையின் பிரம்மோற்சவம். ஆரம்பமாகி தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. அன்னை அருள் கடாஷம் அனைத்து மக்களுக்கும் கிடைத்து மக்கள் சுகமான வாழ்வும் சுபிட்சமான நிலை அடைவார்கள். திருத்தேரேறி வரும் அம்பிகையின் கடைக்கண் பார்வையால் அனைத்து மாணவர்களும் கல்வியில் சிறந்தும், உத்தியோகஸ்தர்கள் உயர்பதவியடையவும், வியாபாரிகள் சிறந்த லாபமும், சுமங்கலி பெண்கள் நித்திய சுமங்கலியாகவும் , கன்னிகைகள் உசிசகால விவாகமும் கிடைத்து நீடூழி வாழ பிரார்த்திக்கின் றோம்.*


**பிரதிஸ்டா திலகம்,ஆசீர்வாதசரபம்**
**கைலாஸநாத வாமதேவக்குருக்கள்**
**நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.**
**பிரதம குரு .**

## அருள் புரியும் அன்னை

*அருட்பொலிவும் ஆன்மீகப் பொலிவும் பெற்று வரலாற்றுச் சிறப்புடன் திகழ்வது நயினாதீவு. இச் சிறுதீவில் அறுபத்தி நான்கு சத்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தைத்தான் பால் கொண்டு அகிலமெங்கும் அருள் ஒளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருப்பவள் அன்னை ஸ்ரீ நாகபூஷணி. அடியவர்களின் வாய்களிலும் மனங்களிலும் நின்று என்றும் அகலாத மாட்சிமை பொருந்திய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையைத் தரிசிக்க என தினமும் பல்லாயிரக்கனக்கான அடியார்கள் ஆலைய கடல் தாண்டி அம்பிகையின் அருட்கடலியப் பெறுவதற்காக தினமும் வருகை தருகிறார்கள். அம்பிகை தரிசிக்க என வருகை தருகின்ற அடியார்களின் நலன் கருதி ஆலய அறக்காவலர் சபையினர் நித்திய அன்னதானச்சேவை, தங்கும் இடவசதி, படகுச் சேவை, நீர் வசதி என பல பணிகளை செயற்படுத்தி நெறிப்படுத்தி வருகின்றனர். இவற்றுக்கெல்லாம மேலாக ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் அருள், ஆலைய மகோற்சவம் நடைபெற்று வரும் இவ் நாட்களில் உலகின் சகல பகுதியிலும்வாழ்கின்ற அம்பிகையின் அடியார்களுக்கு அம்பிகையின் சிறப்பினை வெளிப்படுத்தும் ஈழநாதம் பத்திரிகைக்கு வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ் அடைகிறோம்.*

**கனக – ஜீவசீலன்**
**பொருளாளர்**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்.**

# குறுங்கதைகள் மூன்று



## கசிவு

உடல் வேர்த்து ஒழுகிய நிலையில், சாலை வழியே தனது மிதி வண்டியை இயக்கிக்கொண்டிருந் தார் சுப்பையா

வரத்து வெய்யில் முகத்தில் அடித்துக்கொண்டிருந்தது. தோளில் கிடந்த தூவாயினால், வழிந்த வியர்வைத் துளிகளை அழுத்தித் துடைத்து விட்டு, கால்களுக்கு வேகத்தைக் கூட்டிய போது தான் அந்தக் குரல் கேட்டது.

"ஐயா! கச்சான் வாங்குங்கோ. மூண்டுசரை பத்து ரூபா."

சுப்பையா திரும்பிப் பார்த்தார்.

சாலையோரம் சடைத்து வளர்ந்து நின்ற ஒருவாகை மரத்தின் கீழ் நின்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன்.

மெலிதான சிறுதடிகளில் பரண் ஒன்றை அமைத்து, அதன்மேல் பல கச்சான் சரைகளையும், பொதிகளையும் வைத்து, விற்பனை செய்து கொண்டிருந்தான்.

சுப்பையாவுக்கு மனம் ஒருகணம் நெகிழ்ந்து விட்டது. 'பாவம்! ஆர் பெத்த பிள்ளையோ? வீட்டில் என்னென்ன கஷ்டமோ? தனக்குள் இரங்கியவர், அந்தச் சிறு பரணில் கிடந்த கச்சான் சரைகளில் அரைவாசியை வாங்கிக்கொண்டார்.

காலையில் வீட்டில் கிடந்த கச்சானை ஒரு உரப்பை நிறையப் போட்டுக் கட்டிக்கொண்டு, அடுத்த கிராமத்தில் உள்ள பொதுச்சந்தை யொன்றில் விற்றுவிட்டு, வீடுதிரும்பிக் கொண்டிருந்த சுப்பையாவுக்கு, கச்சான் விற்ற பணத்தில் சிறிதளவு இப்போது அச்சிறுவனின் கரங்களில் சேர்ந்ததையிட்டு மகிழ்வாக இருந்தது. காரணம்-

சுமார் ஆறுவருடங்களுக்கு முன்பு, அவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, தடுப்பு முகாமில் இருந்த போது, அச்சிறுவனையொத்த அவரது மூத்தமகன் ஒருபாடசாலை முன்பாக கச்சான்சரை விற்றுக்கொண் டிருக்கையில், விமானமொன்று நடத்திய தாக்குதலில், பலியான நிகழ்வு அவர் ஞாபகத்துக்கு வந்தது.

## முரண்

நேரம் காலை பத்துமணி. சந்திக்கடையில் சவ்வரிசி வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் விசாலாட்சி.

எதிரே-


'பன்' ஒன்றுக்குள் முருங்கைக்காய்கள், முறித்து வைக்கப்பட்ட புடலங்காய்கள் வெளியே தெரிய, வேறு பல பொருட்களோடும் அதைச் சுமக்க முடியாமல் இடுப்பிலே வைத்தபடி இளைக்க களைக்க வந்து கொண் டிருந்தாள் கனகம்மா.

"என்ன கனகம்மா துலை யாலையே?" விசாலாட்சி கேட்டாள்.

"சந்தையால வாறன் அக்கா."

"என்ன மரக்கறியளோடை! இண்டைக்கு சந்தையிலை நல்ல மலிவு போலக் கிடக்குது."

"என்ன மலிவு அங்கை. இண்டைக்கும் நெருப்பு விலைதான். ஏதோ அவர் அன்றாடு உழைக்கிற படியாலை விலையெண்டாலும்



வாங்கிச் சமாளிக்க முடியுது."

"உன்ரை மனிசன் இப்பவும் கூலி வேலைதானே?"

"ஓமக்கா..."

இடுப்பிலுள்ள மரக்கறிச்சுமையின் பாரம் தாங்க முடியாத நிலையில், கூறிக்கொண்டே விசாலாட்சியை விட்டு நகரத் தொடங்கினாள் கனகம்மா.

விசாலாட்சிக்கு ஏக்கமாக இருந்தது. 'கூலி வாழ்க்கை யென்றாலும் கனகம்மா கொடுத்து வைச்சவள்...'

விசாலாட்சி தனக்குள்ளே கூறிக் கொண்டாள்.

மூன்றுமாத காலமாக தன் கணவருக்கு வந்து சேரவேண்டிய ஓய்வூதியக் கொடுப்பனவை தினமும் எதிர்பார்த்த நிலையில்...

அடுப்புப் புகையாத வாழ்வாக... வெட்கத்தில் அதை அடுத்தவருக்கும் சொல்ல முடியாத நிலையாக... வாழ்ந்து கொண்டிருந்தாள் எல்லாவற்றையும் தன்னுள் அமுக்கியபடி....

## சாவு



மதியச்சாப்பாட்டுக்காக அலுவல கத்தில் இருந்து வீடு திரும்பிய கார்த்திகேசுவுக்கு வீட்டில் தன் மனைவியைக் காணாதது திகைப்பாக இருந்தது.

கிணற்றடிக்குச் சென்று, கைகால்களைக் கழுவிக்கொண்டு வந்தவர், குசினிக்கதவைத் திறந்து பார்த்தார். அடுப்பு மேடையில் உலை கொதித்துக் கொண்டிருந்தது.

'இந்த மனிசி எங்கை போட்டுது? ஏன் இன்னமும் சமைக்கேல்லை?

அவர் தனக்குள் வினவியவராய்... மரக்கறிகள் வைக்கும் பிரம்புக் கூடையைத் திறந்து பார்த்தார். அதற்குள் தக்காளிப்பழங்கள், பச்சை மிளகாய், வெண்காயம், தேங்காய்ப்பாதி, புளி உருண்டை என்பன நிறைந்து கிடந்தன.

அவருக்கு எரிச்சலாக இருந்தது. அத்தோடு, பசி வேறு.

விளக்கம் கேட்க தன் மனைவி அருகில் இல்லாத நிலையில், கால்களை வந்து உரசிய பூனைக்குட்டியை உதைத்துத் தள்ளினார் கோபத்தில்.

வெளியே ஏதோ ஆள்அரவம் கேட்டு, வளர்ப்பு நாய் இலேசாக உறுமவே, அவர் குசினியை விட்டு வெளியே வந்தார்.

"ஏனப்பா இன்னும் சமைக்கேல்லை? மணி பன்னிரண்டாச்சல்லோ..."

"உவள் சிவக்கொழுந்துவின்ரை கடைசிப்பொடியன் வீரச்சாவாம். போட்டுவாறன்."

அவள் கூறிவிட்டு, கிணற்றடியை நோக்கி நடந்தாள் முழுகுவதற்காக.

வீரச்சாவு என்றதும், அவருக்குள் விஸ்வரூபமாக எழுந்து நின்ற பசி, சினம் யாவும் ஒருகணம் மெல்லச் சிதைந்து மறைந்தது.

திரும்பி வீட்டுச்சுவரைப் பார்த்தார்.

ஆனையிறவுச் சமரில் வீரச்சாவடைந்த அவரது இரண்டாவது மகன் அர்த்தம் பொதிந்த புன்னகையோடு... அவரையே பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணாடிப் பிரேமுக்குள்ளிருந்து...

அலெக்ஸ் பரந்தாமன்.

## குருதிக் கறைபடிந்த நிலவின் குறிப்பேடு



வன்மமாய் வீசும் காற்றிலும்
சாவு சொல்லும் ஆட்காட்டி
இலகுவாய் பறந்து செல்கிறது
பெருவெளியின் ஒரு சிறு
புள்ளியில்

நேற்றும்,இன்றும்,நாளையும்
நாம்நினைக்கா விதமாய்
நடந்தது,நடக்கிறது,நடக்கும்
இப்படியேதான் எம் வசித்தல்
நிகழ்கிறது.

வன்மம் நிறைந்த காற்று
எல்லோரையும் அச்சுறுத்தும்
ஆட்காட்டியோ அவசர அவசரமாய்
சாவு சொல்லும்

எமது ஒவ்வொரு பெருவெளியிலும்
மர்மங்கள் விரைந்து கிடக்கிறது
வன்மம் முற்றிய காற்றும்
சாவு சொல்லும் ஆட்காட்டியும்
இல்லாமல்
இங்கு எந்தப்பெருவெளியும்
இல்லை

அழகு ஒளிர்ந்த எங்கள்
பெருவெளியில்
வன்மக் காற்று சிதைந்து கருக்கிய
மலர்களை
ஆட்காட்டியும் அறியும்,வான்
நிலவும்அறியும்.

நிலவின் குறிப்பேட்டில்
உண்மைகள் உறைந்துபோய்
கிடக்கிறது
இரவின் இரகசியங்களை
அதனிடம் இன்றி வேறு
எதனிடமும்
துள்ளியமாய் பெறமுடியாது.
(ஆனால் மறைத்து
வைத்துள்ளது)

நிலவு குளிர்மையானதுபோல்
இருந்தாலும்
வன்மக் காற்றுடனும்,
ஆட்காட்டியுடனும்
சேர்ந்து பிணம் தின்கிறது
இரகசியமாய்.
சூரியக்கதிர்
பெருவெளியெங்கனும் ஒளி பரப்ப
எமது வாழ்விலக்கம்
சுபீட்சமானதாய் நிகழ்ந்தேறும்.

நிலவு மீண்டும் வந்தால்
வன்மம் முற்றிய காற்றும்,
ஆட்காட்டியும்
கூடவே வரும்.
சூரியக்கதிர்களில்வெம்மை
திதிப்பது போலிருந்தாலும்
ஆட்காட்டிகளோ,வன்மக்காற்றோ
அதனுடன் இல்லை.

தனா – விஷ்ணு



## தானையது விடலாமோ சொல்

பாதை திறக்கப் பல்லிளித்து
பல காலம் முயன்று
ஏதும் நடவாதிங்கு இனி
அவர்காலமென
வாதை சுமந்து வடக்கேகி
உரைத்தவர் பேச்சை
காதைக் கொடுந்திங்கு கேள்

ஆதிக்க மேலவரின்
அடையாள சின்னமது
நீதிக்கு முன்னிற்கா தழிவுள்ள
காரணத்தால்
மோதல் தவிர்பெனவும்
முழுமைச் சமாதானமது
ஓதிக்கொண்டோடிவர
வைத்தவகை அறிவீர் இனி

எங்கெங்கு மெதிரொலியாய்
வருகின்றது சமாதானம்
அங்காலு மிங்காலு மாடரங்கு
வலுப்பெறுதல்
உங்கள் மனங்களிலு
முறைக்காதோ?
எங்கள் நிலமின்னும்
பகடைக்களம் தானோ பார்

கூத்தாடிக் கூத்தாடிக்
கொண்டேகிச் சென்றவர்கள்
வாக்காயுரைத்ததுவும் வகையுணர்த்தி
சொன்னதுவும்
நோக்கத்தில் தவறியதார்? நில்!
ஒருகாலிதை எண்ணி
மெய்யுள் நினைத்தெண்ணித்தேர்

விழி மூடாத் துயர் விலக்கி
விடைகாண விழிமூடிக்
குழிக்குள் உறங்கிடுவோர் தம்
கனவை
நனவாக்க ஆமி குடித்தெனினும்
ஆக்குவோம்
என நினைப்போர் வாழும்
வழியதனைத்
தானுணர்ந்தோ எனவேகொள்.

வானளவு தான் வளர்ந்து தானங்
கொடுத்த மகள்
கூன்பட்டுக் குவலயத்தில் வாழாள்
ஏனிந்த இழிநிலைகள்
எமக்கென்றே
நினைப்போம்
தானமதாய் கொள்ளல் தலை.

வேலி பயிர் மேய்தல்
இன்னமும் ஏன் நிற்கவில்லை?
தாலி பறிப்பவர் 'தம் தக்கசீாவரிசை
இதோ?
கூலிக்குழுதுமுது
கொள்ளியிடுமிங்கிவரை
ஆலிலைப் பனியெனவே வை

ஏனையினென்று திறந்தாலும்
போ யெமது சேனைப் புலவிற்கு
சென்றொரு கால் வரவேணும்
வான் பார்த்த வாழ்விற்கு வழி
கண்டா
முடிந்த தென்று
தானையது விடலாமோ சொல்

•நீதிவளவ[illegible]

# 21ஆம் நூற்றாண்டின் கடிவாளம்

**நாம் எமது வாழ்வில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினை ஏதாவது ஒரு வகையில் ஊடகங்களுடன் செலவிடுகின்றோம். மீதமுள்ள மூன்றில் இரண்டு பகுதியில் பெரும் பங்கினை மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதிலும், கதைப்பதிலும் செலவிடுகின்றோம். இப்பூவுலகில் தனக்கும் தகவல்களைத் தேடிக் கொண்டு மற்றவருக்கும் அதனை வழங்குகின்ற ஒரே ஒரு உயிரின மென்றால் அது மனிதன் மட்டுமே.**

— பி.ரி.ராம் —

தகவல் என்பது பலம். தகவல் பொருளாதாரம் என்பது பொருளாதாரப் பலம். தகவல்களுக்குப் பொருளாதாரப் பெறுமதி இருக்கின்றது. எனவே குறிப்பிட்ட தகவல்களைச் சேகரித்து முறைப்படுத்தி, அதனைச் சேமிக்கும் ஆற்றலுள்ள நாடு ஏனைய நாடுகளை விட அரசியற் பொருளாதார ரீதியில் மேலோங்கிய நிலையை அடையும்.

மிகப் பெரிய தொழிற்சாலைகளையோ அல்லது இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களையோ வைத்திருப்பவர்கள், எண்ணெய்க் கிணற்றுச் சொந்தக்காரர்கள் போன்றோரே கடந்த நூற்றாண்டின் செல்வந்தர்களாக இருந்தனர். ஆனால் இன்று நிலைமை அவ்வாறு இல்லை. தகவல்களை வைத்திருப்போர் அல்லது தகவல் தொழில்நுட்ப உற்பத்தியாளர்களே மிகப் பெரிய செல்வந்தர்களாக இருப்பது கண்கூடு. இதற்குச் சிறந்த உதாரணமாக அமெரிக்க மென்பொருள் (Software) தயாரிப்பாளரான பில்கேட்சை (Billgatas) குறிப்பிடலாம்.

கடந்து போன நூற்றாண்டு இலத்திரனியல் யுகம் (Electronic) இனிவரும் இந்த நூற்றாண்ட தகவற் தொழில்நுட்ப யுகம் (Information Technolagy Era) தகவலென்பது கண்ணுக்குப் புலனாகாததும் எடை அற்றதுமாக இருப்பதனாலும் இதனை எடை இல்லாத பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகின்றது. பொருளாதாரம், அருவப் பொருளாதாரம், புதிய பொருளாதாரம் என்றெல்லாம் இதனை அழைப்பதுண்டு.

ஓசாமா பின்லாடன் இப்பொழுது எங்கே எத்தனை ஆட்களுடன், என்ன செய்து கொண்டிருக்கின்றார்? என்ற தகவல்களை அறிந்த நபர் அமெரிக்க டொலரில் அதிக பெறுமதியுடையவராக இருப்பார் என்பதில் எவருக்கும் ஐயமில்லை.

வன்னி நெடுங்கேணியில் கீரிசுட்டான் பகுதியில் மண்வெட்டி யுடன் வாழும் விவசாயி ஒருவருக்கும கொழும்பில் நவீன காரில் கையில் மடிக் கணனி (Lap Top) உடன் வருகின்ற வணிகர் ஒருவருக்கு மிடையே உடலால் எதுவித மாற்றமும் இல்லை. எனினும் கீரிசுட்டான் விவசாயிக்கும் கொழும்பு வணிகருக்கும் இடையேயுள்ள வேறுபாடுதான் என்ன? அதுதான் தகவல் தொடர்பின் உச்சியிலும், தொடர்பு இவ்விருவரில் ஒருவர் தகவல் மற்றையவர் அதன் அடிவாரத் திலும் நிற்பதுதான் இந்த வேறுபாட் டுக்குக் காரணம். ,மேற்கூறிய இரு விடயங்களினூடாக தகவலின் முக்கியத்துவம் எமக்கு விளங்கும்.

தகவற் தொடர்பு மூலம் மனிதர்கள் தமது வெற்றிதோல்வி களையும், சரி பிழைகளையும் உயர் நோக்குகளையும், அனுபவங்களையும் தமது மூளையில் பொறி தட்டிய அபாரமான சிந்தனைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்கின்றனர். அத்தோடு இப்பரிமாற்றத்தின் மூலம் பெறப்பட்ட அறிவைத் தமது எதிர்கால சந்ததியும் பயன்படுத்தும் வகையில் பேணிப் பாதுகாக்கின்றனர்.

நாம் எமது வாழ்வில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினை ஏதாவது ஒரு வகையில் ஊடகங்களுடன் செலவிடுகின்றோம். மீதமுள்ள மூன்றில் இரண்டு பகுதியில் பெரும் பங்கினை மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதிலும், கதைப்பதிலும் செலவிடுகின்றோம். இப்பூவுலகில் தனக்கும் தகவல்களைத் தேடிக் கொண்டு மற்றவருக்கும் அதனை வழங்குகின்ற ஒரே ஒரு உயிரின மென்றால் அது மனிதன் மட்டுமே. இம் மனிதச் செயற்பாட்டின் மையமாக விளங்குவதுதான் தகவற் தொடர்பு ஆகும்.

உலகளாவிய கணிப்பீட்டின்படி ஒரு நாளில் சராசரியாக ஆறாயிரம் மில்லியன் பத்திரிகைப் பிரதிகள் வெளிவருகின்றன. எண்பதாயிரம் ஒலி அல்லது ஒளிபரப்பு நிலையங்கள் உலகெங்கிலுமுள்ள மூன்று பில்லியன் நேயர்களுக்கு ஒலி அல்லது ஒளி பரப்புக்களை மேற்கொள்கின்றன. நூற்றுக்கு மேற்பட்ட செய்தி நிறுவனங்கள் நாற்பது மில்லியன் சொற்களைக் கொண்ட செய்திகளைச் சேகரித்து வெளியிடுகின்றன. எழுநூறு மில்லியனுக்கு மேற்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் தம்மூடாக குரல்கள், தகவல்கள், படங்கள் போன்றவற்றை நூற்றுக்கு மேற்பட்ட தொலைத் தொடர்புச் செய்மதிகள் மூலமும் பல நூறாயிரம் மைல்கள் நீளமான கேபிள்கள் மூலமும் கடத்துகின்றன.

1981இல் கணினி இணைய இணைப்புக்கள் 213 ஆக இருந்தன. இது பின்னர் 1989 இல் 1,59,000 அதிகரிப்பைக் காட்டியது. இதுவே அதிகரித்து 1999 இல் 56,218,000 ஆகத் திடீர் இன்றைய தகவற் தொடர்பின் பரிணாமம் ஆகும்

உலகின் எண்பது வீதச் செய்திகள் மேற்கு நாடுகளிலுள்ள பல் தேசிய செய்தி நிறுவனயங்களிடமிருந்து வருகின்றன. அவற்றில் முதன்மையானவையாக..

1 அசோசியேற்றட் பிறஸ் (Assosiatid Press) - அமெரிக்கா

2.. யுனைற்ரெட் பிறஸ் இன்ரநசனல் (United Press International) - அமெரிக்கா

3. ஏஜென்சி பிரான்ஸ் பிறஸ் (Agence France Press) - பிரான்ஸ்

4. றொய்ட்டர்ஸ் (Reuters) - பிரித்தானியா

5. ராஸ் (Tass) - ரசியா

ஆகிய ஐந்து நிறுவனங்களும் விளங்குகின்றன. இந்த நிறுவனங்கள் தான் உலகம் முழுவதிலுமுள்ள மக்கள், உலக நடப்புக்கள் பற்றிய செய்திகளில் எதை எந்தக் கோணத்தில், எப்போது, எப்படி அறிய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்றன. இந்த இராட்சத செய்தி நிறுவனங்களின் நிதிக் கையாள்கையானது நிக்கரகுவா, ஜோர்டான், பொலீவியா,அல்பெனியா, லாவோஸ், லைபீரியா, மாலிக் போன்ற நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி வருமானத்தைவிட அதிகமானது என்பதன் மூலம் இவற்றின் பலத்தை நாம் புரிந்து கொள்ளலாம்.

தற்போதைய தகவல் தொடர்பு முறைமை பற்றி அறிவியலாளர் பக்டீக்கியன் கூறுகையில் "இந்தச் செய்தி நிறுவனங்கள் உலகின் கருத்துக்கள், பண்பாடுகள், மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் போன்றவற்றின் மீது ஒரே சிந்தனைப் போக்கைத் தூண்டும் வகையிலான சக்தியைப் பயன்படுத்துகின்றன. இதன் மூலம் மனித வரலாறு கண்டிராத அளவு பெருந்தொகையான மக்கள் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளர்கள். உலக வரலாற்றில் யூலியஸ் சீசரோ அல்லது அடோல்வ் கிட்லரோ ஏன் போப்பாண்டவரோகூட ஒருபோதும் ஒரு மனிதன் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பது தொட்டு எதை உண்ண வேண்டும் என்பதுவரையில் தீர்மானிக்கின்ற வகையில் தகவல் தொடர்பு மீது ஆதிக்கம் செலுத்தியது கிடையாது" என்கிறார்.

புதிதாக உருவாகியுள்ள உலகமயமாக்கல் ஆனது தகவல் தொழிநுட்பத்திலேயே தங்கியுள்ளது. தகவல் தொடர்பின் மூலம் முழு உலகமுமே ஒரு சிறு கிராமமாக மாறிவிட்டது என்ற கருத்து தற்போது பலமாக உள்ளது.

எனவே மேற்சொன்னவைகளின் மூலம் தகவற் தொழில்நுட்பத்தில் பல நல்ல செயற்பாடுகள் ஏற்பட்ட போதிலும் பல தீமைகளும் உள்ளன. தொடர்ந்தும் தேசங்களிடையே மோதல்கள் நடைபெறுகின்றன. உலகின் ஏனைய நாடுகள் மீதான மேற்குலகினதும் அமெரிக்காவினதும் ஆதிக்கம் (கருத்தியல் ரீதியிலானது) திணிக்கப்படுகின்றது. அத்துடன் தேசிய அரசுகளின் இறையாண்மையும் மீறப்படுகின்றது.

(இறையாண்மை என்பது ஒரு நாடு தனது எல்லைகளை இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாப்பது, தனது இயற்கை வளங்களையும் பேணிப் பாதுகாப்பது, தனக்கு விரும்பிய அரசியல், பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறைகளை இன்னொரு நாட்டின் தலையீடு இன்றித் தெரிவு செய்தல போன்றவற்றின் மீது கொண்டுள்ள உரிமையே ஆகும்.)

முன்பு புத்தகங்கள் சஞ்சிகைகள் போன்ற இதழ்கள் மூலமும் வானொலி, தொலைக்காட்சி மூலமுமே தொடர்பாடல்கள் நிகழ்ந் தன. இவற்றை உள்ளும் புறமும் கட்டுப்படுத்துவது அரசுகளுக்குச் சுலபமாக இருந்தது. தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியில் அதன் விளைவாக பூமிக்கும் விண் வெளியில் வலம் வந்துகொண் டிருக் கும் செய்மதிகளுக்கும் இடையில் பாய்கின்ற தகவல்களையோ, கடலடியில் இடப்பட்டுள்ள கண்ணாடி நார் இழை கேபிள்கள் மூலம் (Fiber OpticCa bles) பாய்கின்ற தகவல்களையோ கட்டுப்படுத்தவோ அல்லது கண்காணிக்கவோ முடியாத கையறு நிலை யில் தேசிய அரசுகள் பல உள்ளன.

அபிவிருத்தியடைந்த நாடுகளே மிகவும் திண்டாடுகின்ற நிலையில் அபிவிருத்தி அடையாத நாடுகளின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

(மனித உடலுக்கு இரத்தம் எப்படியோ அது போலவே இராசதந்திரத்திற்கு தொலைத் தொடர்பு. எப்பொழுதெல்லாம் தகவல் தொடர்பு செயலற்றுப் போகின்றதோ அப்போதெல்லாம் சர்வதேச அரசியல் என்ற உடலும் இராசதந்திரச் செயற்பாடுகளும் இருந்து விடுகின்றன. அதன் விளைவு வன்முறைகளும், போர்களும்தான். திரான் வொன்டீன். தொலைத் தொடர்புப் பேராசிரியர், வியட்நாம்.)

இன்று அடிப்படைக் கல்வி என்னும் எண்ணக்கரு எழுதல், வாசித்தல், அடிப்படைக் கணித அறிவு என்பவற்றோடு தகவற் தொழில்நுட்ப' அறிவையும் இணைத்துக் கொண்டு விட்ட நிலையில், எது எப்படியோ தகவற் தொடர்பும் தகவற் தொழில்நுட்பமும் மனித வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டன.

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ தகவல் தொடர்பு பற்றி அறிந்து கொள்ளுதல் மிக முக்கியமாகும்.

(உலகளாவிய கணிப்பீட்டின்படி ஒரு நாளில் சராசரியாக ஆறாயிரம் மில்லியன் பத்திரிகைப் பிரதிகள் வெளிவருகின்ற)

(தகவலை கட்டுப்படுத்துபவன் உலகைக் கட்டுப்படுத்துவான்

He how controls information controls the world.) ☼

---

## ரூஸ்வெல்டும் சர்ச்சிலும்

இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருந்த போது அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டைச் சந்திக்க பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில் வாஷிங்டன் சென்றிருந்தார். அவர் தங்குவதற்குவெள்ளைமாளிகையிலேயே வசதிசெய்யப்பட்டிருந்தது. முதல் நாள் இருவரும் பல மணி நேரம் போரைப்பற்றிப் பேசினார்கள், அடுத்த நாள் காலை, அப்பொழுதுதான் பொழுதுபுலர்ந்திருந்தது. ஜனாதிபதி தம் சக்கரநாற்காளியில் வந்து "எங்கே வின்ஸ்டன்?" என்று கேட்டார். ரூஸ்வெல்ட் எப்பொழுதும் சர்ச்சிலை வின்ஸ்டன் என்று தான் அழைப்பார். ஆனால் சர்ச்சிலோ ரூஸ்வெல்டை பிராங்களின் என்று ஒரு முறைகூட அழைத்ததில்லை, ஜனாதிபதி எனறே அழைப்பது வழக்கம். அகல் வானில் சூரியன் மறைந்தாலும் ஆங்கிலப் பேரர சில் கதிர் மறையாது. என்றுகூறப்பட்ட இங்கிலாந்தின் பிரதம மந்திரி, ரூஸ்வெல்ட்டை அப்படித்தான் அழைக்கவேண்டும் என்னும் நிலை அப்பொழுது ஏற்பட்டிருந்தது. ஊழியர்கள் பிரதமமந்திரி குளியலறையிலிருப்பதாகக் கூறினார்கள். ஜனாதிபதி தம் நாற்காளியை குளியலறைப் பக்கம் தள்ளினார். "இப்பொழுது வந்து விடுவார்" என்றார்கள் ஊழியர்கள். ஜனாதிபதியை அவர்கள் அங்கு போகவிட விரும்பாததற்கு காரணம் பிரதமமந்திரி எப்பொழுதும் உடையின்றியே குளிப்பார் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்ததுதான்.

ஆனால் ஜனாதிபதி, அவர்கள் கூறியதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை தம்பாட்டிற்கு நாற்காளியைத் தள்ளிக்கொண்டு போனார் தமக்குத் தோன்றிய ஒருயோசனையைப் பிரதம மந்திரியிடம் உடனே தெரிவித்துவிடவேண்டுமென்று தோன்றியது அவருக்கு. குளியலறையை அடைந்ததும் கதவைத் தள்ளினார். கதவு திறந்து கொண்டுவிட்டது. ஊழியர்கள் பயந்தது நடந்தே விட்டது.

"சரி, சரி பிறகு பேசிக் கொள்ளலாம்" என்று கூறித்திரும்பினார் ஜனாதிபதி.

"பரவாயில்லை, சொல்லுங்கள், நான் அமெரிக்கர்களுக்கு எதையும் மறைக்க விரும்ப வில்லை" என்றார் சர்ச்சில் ஜனாதிபதியின் முதுகைப் பார்த்து.



### விருந்தில் வேடிக்கை

ஜார்ஜ் பெர்னார்ட்ஷா ஒரு விருந்திற்குச் சென்றிருந்தார். விருந்து முடிந்ததும் வயலின் வித்வான் ஒருவரின் கச்சேரி நடந்தது. அதனை ஷாவும் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

விருந்து வைத்த பெண்மணி அவர் பக்கம் வந்து, "வித்வானைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"இவர் கச்சேரியைக் கேட்கும்போது எனக்கு பாதரூஸ்கியின் நினைவு தான் வருகிறது." என்றார் ஷா.

அதைக்கேட்டு அந்தப் பெண்மணி விழித்தாள். "என்ன சொல்லுகிறீகள் நீங்கள், பாதரூஸ்கி ஒரு வயலின் வித்வான் இல்லையே?"

"இவர் மட்டும் என்னவாம்?" என்று கேட்டாரே ஷா ஒரு கணமும் தாமதியாமல்.

## குதூகலம்




### கிழவரின் குறும்பு

வில்லியம் எய்ச், ஜேக்ஸன் என்பவர் ஒரு சிறந்த புகைப்பட நிபுணர், அவர் தம்முடைய தொண்ணூறாவது ஆண்டு நிறைவின்போது ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ளவேண்டுமென விரும்பினார். மேனாட்டவர்களே ஆண்டிற்கொரு படமாக எடுத்து 'அல்பம்' தயாரிப்பதில் அதிக விருப்பம் உள்ளவர்கள், தொண்ணூறு வயது கிழவரையும்அந்த விருப்பம் விடவில்லை. அடுத்து இருந்த ஒரு புகைப்படக்காரரை அழைத்து வருமாறு ஆள் அனுப்பி வைத்தார் அவர்.

புகைப்படக்காரர் வந்தார். அவர் ஓர் இளைஞர். இனிய இயல்புகள் அமைந்தவராயும் தோன்றியது. ஜேக்சன் தாம் விரும்பிய கோணத்தில் அமர்ந்து கொண்டார். படம் எடுக்கப்பட்டு விட்டது. அந்த இளைஞர் ஜேக்ஸனை அணுகி அவருடன் கைகுலுக்கிக் கொண்டே "மிக்க நன்றி ஐயா! உங்கள் நூறாவது ஆண்டுப் படத்தையும் நான் எடுப்பேன் என்று நம்புகிறேன்" என்றார்.

ஜேக்ஸன் அந்த இளைஞரை ஒரு கணம் உற்றுப்பார்த்தார். " ஏன் நீர் எடுக்க முடியாது! உம்மைப்பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே. நீர் தான் நிரம்ப உடல் நலத்துடன் இருக்கிறீரே"

அந்த இளைஞர் அசந்து போய்விட்டார்.




# அறிவியல்




## அறிவியல் [சிந்தனை]


அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ச்சிக் கருவி மட்டுமன்று அது மனித மேம்பாட்டுக்கும் துணை நிற்கும் சக்தியாகும் அதன் தாக்கம் இடம்பெறாதவாழ்க்கைப்பகுதி எதுவுமே இல்லைபொருளாதார வாழ்வு மட்டுமன்றிநமது பழக்க வழக்கங்கள்மரபுகள்-இசை-நாடகம்-இலக்கியம் போன்ற கலைப்பகுதிகள் அனைத்தும் அறிவியலின், தொழில்நுட்பத்தின்தாக்கத்துக்குட்பட்டவைமுதாய முன்னேற்றம், அரசியல் முன்னேற்றம், பொருண்மிய முன்னேற்றம் அனைத்திலும் அறிவியலின் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு உண்டு



## விண்வெளி சுற்றுலாப்பயணி [செய்தி]


உலகின் முதல் விண்வெளி சுற்றுலாப்பயணி 'டெனிஸ்ரிற்றோ' என்ற அமெரிக்கர். கடந்த ஆண்டு ரஸ்யாவின் சோயுஸ் விண்கலம் மூலம் பன்னாட்டு விண்இல்லம் (ISSஅல்பா) சென்று அதில் ஒரு வாரம் தங்கினார். இரண்டாவது சுற்றுலாப்பயணி விண்வெளிக்கு அண்மையில் சென்றார். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மார்க் ஸட்டில் வேர்த் ரஸ்யாவின் சோயுஸ் விண்கலம் மூலம் பன்னாட்டு விண்இல்லமாக ISSஅல்பாவுக்கு சென்று ஒரு வாரம் தங்கியிருந்தார். விண்வெளி சுற்றுலாவுக்காக ரஸ்யா விண்ணாய்வு மையத்துக்கு 14 மில்லியன் பௌண்ட்களை ஸட்டில் வேர்த் வழங்கினார். 14 நாடுகளின் நிதியுடன் இயங்கிவரும் பன்னாட்டு விண் இல்லத்தின் தனது பகுதியை பராமரிக்க ரஸ்யா- விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளை குறித்த பணத்தை அறவிட்டு தனது விண்வெளி வீரர்களுடன் இணைத்து அனுப்பி வருகின்றது.

## முதலாவது . I



முதலாவது உந்துருளி 1867ல் அமெரிக்கரான 'ஸில்வெஸ்ரர் ஹோவாட்ரேபர்' ஆல் உருவாக்கப்பட்டது. இவரது உந்துருளி அதாவது மோட்டார் சைக்கிள் நிலக்கரியால் இயங்கியது. இரண்டு உருளைகளில் (Cylinter) உந்துதண்டு (Pision) நிலக்கரியை எரிப்பதால் கிடைத்த வெப்பத்தால் உருவாக்கப்பட்ட நீராவியால் இயங்கி உந்துருளியை இயங்கச்செய்தது. நீராவி உந்துருளி அது. இதன்பின் எரிவாயு மூலம் இயங்கும் உந்துருளி 1885ல் ஜேர்மனியின் 'கொட்லீப் டெய்ம்பர்' ஆல் உருவாக்கப்பட்டது. மரப்பலகைகளால் அது செய்யப்பட்டது. முன்கவர் (Spoke) கூட மரத்தாலேயே ஆனது. சில்லுகள் இரும்புகளால் செய்யப்பட்டன. எந்திரம் சூடாவதை தடுக்க இதில் நீர் பயன்படுத்தப்பட்டது.

## அணு எது?



இதோ என் கண்ணெதிரே தெரிகின்ற பூமி தான் அபார சக்தி கொண்ட, ஆற்றல் நிறைந்த கிரகம் இழந்த சொர்க் கம் என்ற காவியத்தில் ஜோன்மில்லன் இதைப் பற்றி எவ்வளவு அழகாக வர்ணிக்கிறார் என்று பாருங்கள்.

கதிரவனும், மற்றவிண்மீன்களும் உலகின் மையமாக இருந்தால் என்ன நிலையாகச் சுழல்வது போல் தோன்றும் பூமிக்கிரகம் அறிவார்ந்த முறையில் மூன்று வெவ்வேறு இயக்கத்தில் சுழல்கிறதா?

பூமியில் எங்கு சென்றாலும் ஓர் அசைவம், உயிர்ப்பும் உள்ளது. தோற்றத்தில் சடமாக இருக்கும் பாறைகள் உலோகம், மரம், களிமண் எல்வாவற்றுக்குள்ளும் உள்ளார்ந்த இடக்கம் உண்டு. அணுக்கருவை இலத்திரன்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. வெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் இலத்திரன்கள் தன்னை நெருங்கியவாறு கவர்ந்திழுக்கும் அணுக்கருவின் சக்திதான் இந்த இயக்கத்தை தூண்டுகின்றது. இலத்திரன்கள், எல்லா சாதாரண மனிதர்களையும் போல தன்னிடம் உள்ள சிறிதளவு சக்தியால் தன்னை ஈர்க்கும் சக்தியை எதிர்க்க முயல்கிறது. இந்தப் போட்டியில் அணுக்கரு எந்த அளவு அழுத்தத்துடன் இலத்திரனை உள் இழுக்கிறதோ அந்த அளவுக்கு இலத்திரனின் சுற்றுப்பாதை வேகம் கூடும்.

உண்மையில் சொல்லப் போனால் ஒரு அணுவுக்குள் இலத்திரன்களை அழுத்தி வைப்பதன் மூலம் வினாடிக்கு ஆயிரம் கிலோமீற்றர் அதிகரிக்கும் வேகத்தில் இலத்திரன்கள் பயணம் செய்கின்றன. இந்த அளவுக்கு வேகமாக மாறக்கூடிய இலத்திரனின் அசைவுதான் ஒரு அணுவை ஒரு திட்மான கோளம் போல காட்டுகிறது. அதாவது வேகமாகச் சுழலும் மின்விசிறி வட்டமான ஒரு தட்டுப்போல தெரிகிறதே- அதைப்போல இப்படிப்பட்ட அணுக்களை நெருக்கி சுருக்கி விடலாம் என்பது சிரமமான காரியம். இந்த தன்மையால் தான் பொருட்களை அடையாளம் காண உதவும் வகையில் ஒரு திட வடிவம் கிடைக்கிறது.

திடப்பொருளாக காணப்படும் எல்லாவற்றுக்குள்ளும் வெற்றிடம் உள்ளது. நிலையாக இருக்கும் எல்லாவற்றிக் குள்ளும் அதிவேக இயக்கம் உள்ளது.

*(அக்னிசிறகுகள் நூலில்)*
விஞ்ஞானி. ஏ.பி.ஜே அப்துல்கலாம்

தொகுப்பு :- தவபாலன்

# இரு தமிழ் விஞ்ஞானிகள்

### மற்றுமொரு ஒரு சார்புத்தத்துவ மேதை
### இயூஜின் சிற்றம்பலம்



எயிற்ஸ்ரைனின் பொது சார்புத் தத்துவத்தைப் போன்று (theory of General Telarivity) மீண்டுமொரு சார்த் தத்துவம், எல்லாப் பொருட்களுக்குமிடையேயான சார்பத் தத்துவம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

Theory of every thing எனப்படும் இத்தத்துவம் அறிமுறைப் பௌதிகவியலின் மிகப் பெரும் சாதனையாகக் கணிக்கப்படுகிறது. இதனைக் கண்டுபிடித்தவர் ஒரு தமிழர் அதுவும் ஈழத்தமிழர் என்பது எங்கள் எல்லோருக்குமே பெருமைக்குரியவிடயமாகும். இயூஜின் சிற்றம்பலம் எனப்படும் இவர் பௌதிகவியலின் உயர் கற்கை மானிகள் எதுவுமே இல்லாதவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் மானிப்பட்டத்தை மின்னியல் துறையிலும் பெற்றுக்கொண்ட இவர், யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரியின் பழையமாணவருமாவார்.

சிற்றம்பலத்தினுடைய சார்புத் தத்துவமும் வெளியையும் நேரத்தையுமே தொடர்புபடுத்தும் தத்துவமாகும்.

தன்னுடைய கண்டுபிடிப்புக்காக மிக நீண்ட காலம் தமது சமூக வாழ்வையே இழந்து விட்டதாகக் குறிப்பிட்ட இவர் பல பல்கலைக்கழ கங்களின் நூலகங்களில் தனது ஓய்வு நேரத்தின் பெரும் பகுதியை செல விட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

### "கின்ஸ்மன் பெலோஷிப்"
### விருது பெற்ற விஞ்ஞானி ஸ்ரீகுமார்




புத்தம் புதிய கலைகள் - பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் மெத்த வளருது மேற்கே - அந்த மென்மைக் கலைகள் தமிழினில் இல்லை... என்று யாரோ ஒரு பேதை உரைத்தது உண்மையாகி விடுமா என்ன...! கவலை வேண்டாம். இதோ நமது தாயக மண் பெற்றெடுத்த தமிழ் புதல்வன் மேற்குத் திசை சென்று... தமிழ் விஞ்ஞானியாகப் புகழ் பெற்று வருகிறார்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறந்த பதியாகக் கொண்ட ஸ்ரீமான் இராமகிருஷ்ணன் - ஸ்ரீமதி ஜானகி இராமகிருஷ்ணன் தம்பதிகளின் விஞ்ஞானப் புதல்வன் தான் இன்றைய கனடிய விஞ்ஞானியான கலாநிதி. ராமகிருஷ்ணன் ஸ்ரீகுமார் அவர்கள்.

இளம் வயதில் ஆரம்பகல்வியை கொழும்பு - பொரளை டி.எஸ்.சேனநாயக்க மாகாவித்தியாலயத்தில் முடித்துக் கொண்டு 1986 ல் கனடா - மொன்றியால் (கியூபெக் மாநிலம்) நகருக்குக் குடிபெயர்ந்தவராவார்.

உயர் கல்வியை மொன்றியால் கொன் கோர்டியா பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து (B.sc)பட்டதாரியானார். உலகப் புகழ் பெற்ற மொன்றியல் மக்ஹில் பல்கலைக் கழகத்தில் (Ph.D) கலாநிதிப் பட்டம் பெற்றார்.

ஒன்ராறியோ - குயீன் பல்கலைக்கழகத்தில் 1998 - 1999 ஆம் ஆண்டுக்கான கின்ஸ்மன் பெலாஷிப் (1998 - 1999 Kinsmen Fellowship) விருதும் - 2000 - விருதும் (சிறப்பு விருது - 2000) அவருடைய தொடர்ச்சியான ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களுக்காக வழங்கப் பெற்றுக் கௌர விக்கப்பட்டார். எங்கள் மத்தியில் வாழும் 'தமிழீழத் தாயக விஞ்ஞானி' எனும் தமிழ் மகனை கனடிய நாட்டு மக்களுடன் இணைந்து நாமும் வாழ்த்திப் பெருமை கொள்வோம். அவருடைய பெருமைகளை இளைய தலை முறையினர் அறிந்து உற்சாகம் மிகக் கொண்டு அவர்களும் கரை காணாக் கல்வியைத் தொடர வேண்டும்.



## பிரபஞ்சம் என்றால் என்ன?

சூரியன்,பூமி,சந்திரன்,வீனஸ்,செவ்வாய், வியாழன், புளுட்டோ,சனி,நெப்ரியூன் போன்ற கிரகங்களின் தரிப்பிடமும் பால்வீதி,கோடிக்கணக்கான நட்சத்திரக்கூட்டங்களின் அமைவிடமும்,இன்னும் என்னென்ன வெல்லாம் உள்ளனவோ அத்தனையும் அடங்கியது தான் பிரபஞ்சம் என்றழைக்கப்படுகிறது. மிகச்சக்தி வாய்ந்த தொலை நோக்கி(telescope) யைக் கொண்டும் இதன் எல்லையைக் காணமுடியவில்லை. இதனை விஞ்ஞானிகள் சூன்ய வெளி என்று நம்புகிறார்கள்.சில வாயுக்கள் அங்கே இருக்கலாமென் றும் அவர்கள் கருத்து. பூமியும் கண்ணுக்குத்தெரி யும் கிரகங்கள்,நட்சத்திரங்களும் தான் பிரபஞ்சம் என ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் கருதி வந்தார்கள். கோடிக்கணக்காக உள்ள நட்சத்திரக் கூட்டங்களில் சூரியனும் ஒன்று என்பது தற்போது தெளிவாகியுள்ளது. பால்வீதிகள் (milkyways)பலவும் வெகுதொலைவில் இருப்பது அறியப்பட்டுள்ளது. இவை நகர்ந்தவாறு இருக்கின்றன. இதிலிருந்து பிரபஞ்சம் தொடர்ந்தும் விரிவடைந்த வண்ணம் இருப்பதும்,விரிவடைந்தபின் சுருங்கவும் தொடங்கலாம் என்பதும் வான்வியல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.இப் பிரபஞ்சத்தின் தோற்றம், இயல்புகள் பற்றி ஆராய்ச்சி செய்யும் துறைக்கு' கஸ்யாலஜி' எனக் கூறுவர். பிரபஞ்சம் ஒரு காலத்தில் மிக அடர்த்தியாக சிறிய ஏதோ ஒன்றாக இருந்தது எனவும் மாபெரும் வெடிப்பு ஒன்று ஏற்பட்டதால் பொருள்கள் யாவும் அண்டவெளியில் தூக்கியெறியப்பட்டன என்றும் நம்புகிறார்கள். வெடித்த இடத்திலிருந்தும் இப்பொருள்களானது விலகிச் சென்ற வண்ணம் இருக்கின்றன. ஏதோ ஒன்று வெடித்தது என்றால் அது எப்படியான பொருள் வெடித்தது என்பதற்கான பதில் கிடைக்கவில்லை எந்த ஒரு ஆரம்பத்திற்கும் முடிவு உண்டு. இந்தப்பிரபஞ்சத்தின் முடிவுதான் என்ன? எங்கே முடிகிறது? போகப்போக அப்பாலுக்கும் அப்பால் என்னதான் அற்புதமே விஞ்ஞானயுகத்தால் விடைகாண முடியுமா?

# புதுக்குடியிருப்பு மண்ணின் முதற் குருமணி

# அருட்திரு மடுத்தீன் பத்திநாதர்

## அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்







ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது
ஏனெனில் அவர் எனக்கு
அருள் பொழிவு செய்துள்ளார்
ஏழைகளுக்கு நற் செய்தியை அறிவிக்கவும்
''சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்
பார்வையற்றோர் பார்வை பெறுவர்''
என முழக்கமிடவும்
ஒடுக்கப்பட்டோரை விடுதலை
செய்து அனுப்பவும்
ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை
முழக்கமிட்டு அறிவிக்கவும்
அவர் என்னை அனுப்பியுள்ளார்.
லூக் 4:18-19

புதுவை மண்ணின் புதல்வனே வருக!
புதுமைப் பணிகள் புரிந்திட வருக!
தலைவன் இயேசுவின் சுவடுகள் மிதித்து
நிலையான வாழ்வை ஈந்திட வருக!

வாழ்வுக்கு வழிகாட்ட ஒளியாக எழுக!
வார்த்தையால் வளமூட்டும் கருவியாய் வருக!
பலிவாழ்வு தனிலே சிறந்திட எழுக!
நலிந்த எம் உள்ளங்கள் உயர்ந்திட வருக!

இறைவனின் அரசில் இன் முகத்துடனே
மறைப்பணி ஆற்றும் சீடனாய் வருக!
ஆவியின் அருளால் நிரப்பப் பெற்று
ஆன்மீகப் பணியினை ஆற்றிட வருக!

வன்னி மண்ணிலே யுத்தங்கள் தந்த
வடுக்களை ஆற்றி வளமாக்க வருக!
தியாக பூமியின் வேள்வி மத்தியில்
திருத் தொண்டாற்றிட திடமுடன் வருக!

அவர்கள் வாழ்வு பெறும் பொருட்டு
அதை நிறைவாகப் பெறும் பொருட்டு
*யோவா 10:10*


**15-06-2002 அன்று குருவாக திருநிலைப் படுத்தப்பட்ட எம் முதற் குரு தனது முதல் நன்றித் திருப்பலியை புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் 25-06-2002 காலை 7.00 மணிக்கு ஒப்புக் கொடுப்பார். இப் புனித நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.**

பங்குத்திருச்சபை புதுக்குடியிருப்பு

# ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்

## நித்திய அன்னதானம் பற்றிய

# விசேட அறிவித்தல்



**அம்பிகை அடியார்களே!**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிப்பதற்கு வரும் அடியார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் உள்ளது. திருவருளைப் பருகிச் செல்லும் அடியார்களின் பசிப்பிணியைப்போக்கவென ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள யாத்திரிகர் தங்கும் விடுதியில் நித்திய அன்னதானம் அம்பிகையின் அருளாசியுடன் சிறப்புற நடைபெற்று வருகின்றது. 1998 இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து நித்திய அன்னதானம் அடியார்களின் பேராதரவுடன் குறைவின்றி சுமார் 3வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மகோற்சவகாலம் (16 நாள்) தவிர ஏனைய நாட்களில் இத்திருப்பணி நித்திய அடியார் பணியாக நிறைவேற்றப்படுகிறது. தினம் தோறும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுது படைக்கும் அன்னையின் திருவருள்தான் என்னே! நீங்களும் இத்திருப்பணியில் இணைந்து அடியார்களுக்கு அமுது படைக்கும் அருட்பணியில் பங்குபற்றுங்கள். ஒரு முறை மட்டும் ஐயாயிரம் (5000 ரூபா) செலுத்தினால் போதும் உங்களின் பெயரால் ஆண்டு தோறும் குறிப்பிட்ட திகதியில் நித்திய அன்னதானம் வழங்கப்படும் . பணத்தை ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திலோ அல்லது யாழ்.வர்த்தக வங்கியின் 12330 கணக்கு இலக்கத்திலோ அல்லது புறக்கோட்டை வர்த்தக வங்கியின் 01-2426285 -01 கணக்கு இலக்கத்திலோ வைப்பிலிடலாம். பொருளாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாக பூஷணி அம்மன் கோவில் நயினாதீவு என்ற முகவரிக்கு தபாற் கட்டளையாகவோ அல்லது காசோலையாகவோ வரைய முடியும். இத்திட்டத்தின் கீழ் இணைந்து அன்னையின் அருளாசியினைப் பெற்றுக் கொள்ளவேண்டுகின்றோம்.

வேறு தனிநபர்க்கோ நிறுவனங்களுக்கோ நித்திய அன்னதானம் தொடர்பாக நிதி வசூலிக்க அனுமதி அளிக்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

*அறங்காவலர் சபை*
*ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்*
*நயினாதீவு*

# மலர்ந்த இதழ்கள்

ஆதி

## வெளிச்சம்



*கலை, இலக்கிய சமூக இதழ்*
*வெளியீடு: – விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் நடுவப் பணியகம், தமிழீழம்.*

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின் எழுபத்தி யேழாவது இதழ் வெளி வந்திருக்கிறது. பதினாறு கவிதைகள், நான்கு சிறுகதைகள், மூன்று கட்டுரைகள் மற்றும் தூது எனும் கடிதப் பகுதியும் புதிய வரவுகள் (புத்தகம் மற்றும் வீடியோ கசெற், ஓடியோ கசெற்) எனும் தகவற் பதிவுப் பகுதியுமாக ஐம்பத்தாறு பக்கங்களில் இந்த இதழ் வெளியாகியிருக்கின்றார்.

எமது தெருவெளி அரங்கப் பண்புகள் பற்றியும் அன்ரன் அன்பழகனின் கட்டுரை பல விவாதப் பொருட் களை உள்ளடக்கியதாக சர்வதேச அரசியற்பார்வை மற்றும் நிலைமை தொடர்பாக எழுதப்பட்டிருக்கிறது. படைத்தல்= ரசித்தல் என்பதை ஒரு சமன்பாடாக நிலாந் தன் முன் வைத்திருக்கிறது.

போராளிகளுடன் வேறு பலர் உட்பட 16 பேர் கவிதைகளை எழுதியிருக்கின்றனர். புதுவை இரத்தினதுரை, அம்புலி, அமலதாஸ், கானகன், யோ.புரட்சி, திருநகரூர் ஜெகா ஆகியோரின் கவிதைகள் சிறப்பாகவுள்ளன. பொதுவாக எல்லோரின் கவிதைகளிலும் சமகால நம் வாழ்க்கைத்தொனியே புலப்படுகின்றன.

சிறுகதைகளில் அ.மகேந்திரனின் கதை 1970களின் காலப்பகுதியில் 'தரப்படுத்தல்' அமுலுக்கு வந்த சூழ்நிலையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. கண்டி - பேராதனைப் பல்கலைக் கழகச் சூழலில் கதையின் நிகழ்புலம் கொண்டியங்குகின்றது. தமிழ் சிங்கள முரண்பாடுகள் எப்படி அரசியல் ரீதியாக பேரினவாதச் சிந்தனை மூலம் வளர்த்தெடுக்கப்பட்டன என்பதற்கு நல்ல சான்றாக கதை அமைந்திருக்கிறது. முல்லை யேசுதாசனின் கதை கடலலைச்சலை நன்றாகச் சித்தரிக்கிறது. ஒரு விறுவிறுப்பான திரைப்படத்தைப் பார்ப்பது போன்ற கதை. தீபா குமரேசும் செந்தூராவும் போராட்ட வாழ்வின் ஒவ்வொரு பக்கங்களை தமது கதைகளினூடாகக் காண்பிக்கிறார்கள்.

தூது எனும் கடிதப்பகுதி அரசியல் கருத்துக்களைப் பேசும் பகுதியாகவே அமைந்துள்ளது. இதில் முன் வைக்கப்படும் விடயங்கள் கவனத்துக்குரியவை.

## ஆதாரம்



*சமூக பொருண்மிய ஆய்வு இதழ்*
*வெளியீடு: – தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழம்.*

அழகிய அச்சமைப்பில் புதிய எழிலுடன் ஆதாரம் வெளிவந்திருக்கிறது. இடையில் மூன்று வருடங்கள் தடைப்பட்டிருந்த நிலையை விட்டு புதிய எழுச்சியுடன் பொருண்மியச் சிந்தனைகளையும் தரவுகளையும் விவரங்களையும் உள்ளடக்கி இந்த இதழ் வெளிவந்திருக்கிறது.

நாற்பது பக்கங்களில் பல விடயங்களையும் தாங்கி வந்திருக்கும் இந்த இதழ் தமிழீழத்தின் ஆறுகளின் விவரத்தை வரைபுகளுடன் காண்பிக்கிறது. அத்துடன் இரணமடு நீர்த்தேக்கத்தின் முழுமையான பார்வையை முன்வைத்து அதன் தற்போதைய நிலையினையும் குறிப்பிடுகின்றது.

இவற்றுடன் தமிழீழக் கனிமவளங்கள், நன்னீர்- உவர்நீர் பரப்புகள் என்பவற்றையும் சவுக்கு மரக்காடுகள் பற்றிய சேதிகளையும் கிராமிய அபிவிருத்தி வங்கி பற்றிய அறிமுகத்தையும் கோவாப் பயிர் செய்கை பற்றிய விளக்கத்தையும் தருகின்றது.

தமிழீழ பொருண்மிய வளர்ச்சிக்கும் தொழில்நுட்ப ஆய்வுக்கும் தொழிற்றுறை மேம்பாட்டுக்குமான விழிப்புணர்வைத் தூண்ட வேண்டிய கட்டுரைகளையும் கருத்துக்களையும் முன்வைக்கும் ஆதாரம் கோழி வளர்ப்பு, அன்னாசிப்பயிர், எருமை வளர்ப்பு என்பவற்றையும் அறிமுகம் செய்கிறது. சிறுதொழில் முயற்சிகள் தொடக்கம் தேசத்துக்கான பெரும் உற்பத்திகள் வரை எமது பொருண்மியம் வளர்ச்சி பெற வேண்டும். எமது வளங்கள் பெருகவேண்டும் என்பதை ஆதாரம் வலியுறுத்துகிறது.

## நாற்று

*வெளியீடு: – தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம், புதுக்குடியிருப்பு.*



அதிகமும் பெண்கள் பற்றியும் கூடுதலாகப் பெண்களும் எழுதும் இதழ் நாற்று. இப்பொழுது வெளிவந்திருப்பது நாற்றுவின் பத்தொன்பதாவது இதழ். சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், உரையாடல், வாழ்க்கைத் தொடர், சுவைக்க சிந்திக்க எனும் பகுதியென்று ஐம்பத்தாறு பக்கங்களில் இந்த இதழ் வெளிவந்திருக்கிறது.

கட்டுரைகளை தாமரைச்செல்வி, கருணாகரன், தமயந்தி, தீபனா, கொற்றவை, சுபா ஆகியோரின் கட்டுரைகள் இடம்பெற் றிருக்கின்றன. தமயந்தியின் கட்டுரை தமிழீழச் சட்டமும் பெண்களும் பற்றியது. சாதாரணமாக எல்லோரும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய விதமாக எழுதப்பட்டிருக் கிறது. நடைமுறைப் பிரச்சினைகளை மனங் கொண்டு கட்டுரையாளர் வழிமுறைகளை- சட்டமுறைகளை விளக்குகிறார். ஏனைய கட்டுரைகளும் ஒவ்வொரு விடயம் தொடர் பாகவும் விபரத்தை எழுப்பக் கூடியனவாகவே யுள்ளன.

நேர்காணல் ஒன்று இதில் வித்தியாசமாக இடம்பெற்றிருக்கிறது. மூன்று தலைமுறை யினரை ஒரு நேர்காணலில் சந்தித்திருக் கிறார்கள். கேள்வி-பதில் என்றில்லாமல் அவர்களின் வாழ்க்கைச்சூழல், வாழ்க்கை முறையுடன் ஒரு விவரணத்தன்மை தொடர் பாக இந்த நேர்காணல் செய்யப்பட்டிருக் கிறது. பெண்களிடையே விழிப்புணர்வை அதிகமும் தூண்ட விளைகிறது நாற்று.

## புனர்வாழ்வுச் செய்தி
## REHABILITATION NEWS

*வெளியீடு: – புனர்வாழ்வுக் கழகம்*




புனா□வாழ்வுச் செய்தியின் இரண்டு ஒரே சந்தர்ப்பத்தில் வெளியாகியிருக்கின்றது. ஒரு இதழ் மிதிவெடி அகற்றுதல் தொடர்பான இதழ். இந்த இதழின் பெரும்பகுதி மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிகள் பற்றிய பல தகவல்களை வெளிப்படுத்துகிறது. புகைப்படங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றது. மிதிவெடிகள் வன்னி நிலப்பகுதியிலிருந்து அகற்றப்படுவதைக் கண்காணிக்கும் சர்வதேச நிபுணர்கள் குழுவின் வருகையையும் இதழ் பதிவு செய்திருக்கிறது. இவற்றுடன் புனர்வாழ்வுக் கழகத்தின் பல்வேறு பணிகள் பற்றிய செய்திகளும் இடம் பெற்றிருக்கின்றது.

அடுத்த இதழ் கலங்கரை விளக்கத்தை அட்டைப் படமாகக் கொண்டு வந்திருக்கிறது. இந்த இதழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகளை பதிவு செய்வதுடன் புனர்வாழ்வுக் கழகத்துடன் வேறு தொண்டர் ஸ்தானங்கள் இணைந்து செயற்படும் விவரத்தினையும் குறிப்பிடுகின்றது.

இரண்டு இதழ்களும் அழகிய அமைப்பில் வெளியாகியிருக்கின்றன. ஒவ்வொரு இதழும் சுமார் எட்டுப் பக்கங்களையுடையன.

# அலையடித்த விளை நிலத்தின் அகமும், புறமும்



– எஸ்.வீ.ஆர்.கஜன் –

ஏ9 திறப்பு வரலாற்றில் ஒரு கனதியான பதிவு. இதன் பின்பு வன்னியில் நாளாந்தம் காண்பதும்,கேட்பதும் மெய் மறக்க மட்டுமல்ல மெய் சிலிர்க்கவும் செய்து விடுகின்றது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இனம்,மொழி வேறுபாடின்றி ஏ9இற்கூடாக வன்னி நிலத்தின் மகிமையை காண்பதிலும், கேட்பதிலும் ஆர்வத்துடன் அலாதியாக புழுதியை கிளறி வீசியவாறு கூவிவரும் "டொல்பின்"களின் தொகை நாளுக்குநாள் அதிகம் அதிகம்.

வன்னி நிலத்தில் அப்படி என்னதான் அருமையும், பெருமையும் நிறைந்திருக் கின்றது என்றுகூட சில நேரங்களில் எண்ணத் தோன்றாமலில்லை.

வீரநிலத்தில் நிமிர்ந்து நின்றவர்களுக்கு அப்படித் தோன்றாமலிருத்தல் ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதுமல்ல. ஆனால் வருபவர்களைக் கேட்டால் இப்படி சொல் கிறார்கள்.

'வெற்றி நிச்சயம்' என்று வந்தவர்களை தடுத்து நிறுத்தி தோல்வியை நிச்சயப்படுத்திய நிலம் வன்னி நிலமாம். ஒன்று,இரண்டு,மூன்று என ஓயாது எண்ணி எண்ணி அலையடித்த நிலம் வன்னி நிலமாம். அதுமட்டுமா "செக்மேற்" என்று வந்தவர் களையும் சக்கைபோடு போட்ட நிலமும் வன்னி நிலமாம், இன்னும் "பூமாலை" கொண்டு வந்தவர்களையும் கூட காமாலை கண்டு சிதறி ஓட விரட்டிய நிலமும் வன்னி நிலமாம்.

இவ்வாறான வன்னி நிலத்தின் மாண்மிய மகிமையை காதால் கேட் பதில் மட்டும் திருப்தி கொள்ளாது ஏற்படுத்துகின்ற உணர்வலைகளின் வெளிப் பாடுகள் தான் வரி,வரியாய் வரும் பல "டொல்பின்"களின் வருகை.

வந்தவர்களின் பார்வையின் நம்பமுடியாத பிரமிப்பு அந்த சரித்திரத்தின் விளைநிலம் இதுதானோ என்று வாயால் சொல்லி என்ன வார்த்தைகளாலும் எழுதிவிட முடியாது அந்த தியாக வரலாற்றை.

வந்தவர்களின் பார்வைக்கு வசதியாய் நாங்கள் தரும் அடிக்குறிப்புகளும் உண்டு. வன்னி நிலத்தை நன்கறிய இப்படியும் செய்யலாம்.

மாங்குளம் தொடக்கம் "அலிமங்கட" வரை ஒவ் வொரு நில அடியும் கதை சொல்லத் தொடங்கின் வீர வரலாறு பாடும்.

அலையடித்து கரை யொதுக்கிய கொக்காவில் சாம்பல்மேடு புதுக்கதை யொன்றினை "மகே அம்மே" எனத் தொடங்கி அலையடித்த கடலின் ஆழத்தையும் அளந்து சொல்லும்.

பல.. ஆண்டுகளுக்கு மேலாக நிலைகொண்டு நிலையாய் வைத்திருப்போம் என நினைத்தி ருந்த அந்த கேந்திரத்தை ஓரிரு நாட்களுக்குள் ஓடவிட்டு விரட்டிய பல் குழலின் வேகவீச்சை சோபையிழந்திருந்த முறிகண்டிப் பிள்ளையாரிட மும் கேட்டறிய லாம்.

சுற்றிவளைப்பொன்றில் வகையாய் சிக்கித்தவித்த கிளிநொச்சி சீமான்கள் தப்பியோட பட்டபாடு பற்றி கனல் தெறிக்கும் ஒளியுடன் கிளிநொச்சிக் கந்தனிடமும் கேட்கலாம்.

பட்டப்பகலில் வம்புக் கிழுத்து தங்களின் பாணியில் "வாடா பாப்பம்" என மார்தட்டி அழைத்தவனை தீபம் ஏற்றி தீக்கரையாக்கிய தியாகத் தின் உறுதியை பரந்தனில், பட்ட மரங்களும் சொல்லத் துடிக்கும்.

இதனோடு மட்டுமல்ல எதுபோனாலும் இதனை விடோம் என்று வீராப்புப் பேசிய வீரவான் கள் வீம்புக்காய் தன்மானம் காக்க நிலையெடுத தும் நிலை குலைந்து வரலாற்றுப் பொக்கிச மையத்தை கைவிட்டு கிளர்ந் தெழுந்து கிளாலி ஓடி தஞ்சம் புகுந்த உண்மையை ஆகாய கடல்வெளி உப்புக் காற்றும் உய்த்துரைக்கும்.

ஈற்றில் நடந்ததை உலகம் விழித்துப் பார்த்தது. சோழனின் கொடி தலைநிமிர்ந்து நின்றது. வெற்றிப் பூரிப்பில் சுதந்திரக் காற்றை சுவாசித்து சிரித்தது.

வந்தவர்கள் நீங்கள் வன்னியை அறிய இவ்வள வும் போதும் ஆனாலும் ஒன்று இதுவும் இல்லையென்றால் இன்றும் நீங்கள் இங்குவர வாய்ப்பே இல்லை.

வந்த உங்களுக்கு கடந்த சில வன்மையின் உண் மையை உரைத்த எமக்கு கிடைத்த சந்தர்ப்பமும் இது சொல்கிறோம். இதையும் செவிமடுப்பீர்களென்றெண்ணி.

சுற்றிவளைப்பில் சந்தேக கைது செய்த உறவுகள் பலர் இன்னும்தான் இல்லை, வானில் கடத்தி சென்று மர்மக் கொலை என்று வக்கிர கொலையான எமது உறவு களின் பரிதாபம்தான் என்ன.

செம்மணி புதைகுழியில் கேட்பாரின்றி செய்த அட்ட காசத்தை செவிசாய்க்க இன்னும்தான் நாதியில்லை. இதுமட்டுமா மன்னார் விடுதி யில் தங்கிநின்று கைதான பெண்களை சிகரெட்டால் சுட்டு சுட்டு சித்திரவதை செய்தபின்னும் மறுக்கவா முடியும் அந்த அராஜகக் கொடுமையை.

வந்த உங்களுக்கு வாய் விட்டுச் சொல்ல நினைத்தது இதுமட்டுமல்ல இன்னும் இன்னும் ஊர் போ. இதையும் உறவுகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இதற்குப் பின்னும் திறந்திருக்கும் ஏ9 வன்னி நிலம் உங்களை என்றுமே வரவேற்கக் காத்திருக்கும். மீண்டும் வாருங்கள் மிகுதியை அறிய.

சா. துஷியந்தனின்

"மலேரியா"

**மருத்துவ நூல் வெளியீட்டு விழா**

இடம் :- கிளி/கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானம்.
காலம் :- 23.06.2002 ஞாயிற்றுக்கிழமை, பி.ப 3மணி

நலன்புரிச்சங்கம்
மலேரியா தடை இயக்கம்
கிளிநொச்சி.

(சி.6925)

## கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

இடம் :- கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்
காலம் :- 24.06.2002 திங்கட்கிழமை, காலை.10மணி

*அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் கீழ் உழைப்பில் உள்ள பட்டதாரிகளும் தவறாது கலந்து கொள்ளவும்.*

-ஒருங்கிணைப்பாளர்

(1978)

# காணவில்லை



**நடேசு வைத்தியநாதன்**

**நடேசு வைத்தியநாதன் (மனநோயளி) என்பவர் 11.06.2002 இல் இருந்து மந்துவில் சந்திக்கு அண்மையில் காணாமல் போயுள்ளார். இவர் அன்று வெள்ளை நிறசாரமும் நீல நிற சேட்டும் அணிந்திருந்தார். புதிய சைக்கிள் வைத்திருந்தார். இவரைக் கண்டவர்கள் நாதன் கராச், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு. என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்**

தகவல்
ந. இரத்தினமாலா
(தாய்)

(2001)

# விண்ணப்பம் கோரல்

நிதித்துறையின் வழங்கல்பகுதியால் தொடங்கப்படவுள்ள தையல் பயிற்சி நெறிக்குப் பொருத்தமான பெண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. பயிற்சி நெறியில் தேர்ச்சியடைவோர் தகுந்த சம்பளத்துடன் பணிக்கு அமர்த்தப்படுவர். பயிற்சி செலவுகள் யாவும் (உணவு உட்பட) வழங்கல் பகுதியால் பொறுப்பேற்கப்படும்.

குறிப்பு:– *தையல் அனுபவம் உடைய இருபாலரும் சம்பளத்துடன் பணிக்கமர்த்தப்படுவர்.*

*வேண்டுகை முடிவுநாள்: – 25. 06. 2002*

**வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி:-**

**அந்திவானம் பதிப்பகம் கிளிநொச்சி.**
**அந்திவானம் பதிப்பகம் புதுக்குடியிருப்பு.**

(2005)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - மன்னார்

வழ/இல - 98/02
தன்மை - மணநீக்கம்

| | | |
|---|---|---|
| சி. அந்தோனிப்பிள்ளை<br>கரடிக்குன்று அம்மன்கோயிலடி<br>நாச்சிக்குடா<br>(வழக்காளி) | -எதிர்- | அந்தோனிப்பிள்ளை<br>மேரி ஜெனிற்றா<br>கரடிக்குன்று<br>நாச்சிக்குடா<br>(எதிராளி) |

## பகிரங்க அறிவித்தல்

மேற்படி எதிராளிக்கு!


இவ்வழக்கின் வழக்காளியானவர் தனக்கும், உமக்கும் இடையிலான திருமணவாழ்வை சட்டப்படி இரத்துச்செய்து கொள்வதற்காக வன்மவுறவுறுப்பை காரணம் காட்டி உமக்கு எதிராக இம்மன்றில் மணநீக்க வழக்கை 11.05.2002 அன்று தாக்கல் செய்த போது மன்று உமக்கான அழைப்பாணையை சேர்பிக்க முயன்றபோது நீர் மேற்படி முகவரியில் தற்போது இல்லையென முறைநிறைவேற்றுனரின் அறிக்கை மூலம் தெரிய வந்ததால் உமக்கு இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது. எனவே நீர் நேரடியாக அல்லது உமது நிலையில் சட்டப்படி அக்கறையுடையோர் ஊடாக இவ்வறிவித்தல் வெளியாகி 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி இவ்வழக்குத் தொடர்பில் உமது கோரிக்கைகள், ஆட்சேபனைகள் இருப்பின் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர். தவறின் மன்று வழக்காளியின் கோரிக்கைகளை ஒரு முகமாக விளங்கித் தொடர் சட்ட நடவடிக்கைகள் ஊடாக தீர்ப்பு வழங்கும் என்பதையும் இவ்வறிவித்தல் ஊடாக வெளிப்படுத்துகின்றோம்.

மன்றின் கட்டளைப்படி

வரைவு- இரா.சரவணபவானந்தன்
வழக்காளி சட்டவாளர்
பூநகரி, கிளிநொச்சி

பொ.சுப்பிரமணியம்
*பதிவாளர்*
*தமிழீழ மாவட்ட நீதிமன்று*
*மன்னார்*

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



**வீரவேங்கை சுதாகர்**
*(எல்லைப்படைவீரர்)*

விஜயசுந்தரம்- சுதாகர்
அளவெட்டி வடக்கு
அளவெட்டி

**தாயின் மடியில்**
24/05/1981

**தாயக மண்ணில்**
05/07/2001

*ஊரிழந்து உறவிழந்து வன்னி நிலம் வந்த போது*
*நீயிருந்து குறைதீர்ப்பாய் என்று தானே எண்ணிவந்தோம்*
*பிரிந்து ஓராண்டும் மறைந்தோடிப் போயாச்சு*
*வேரிழந்து மரமாக நம் வாழ்வும் ஆயாச்சு*

24.06.2002 அன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ள நினைவு அஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்நாளில் இவருடன் வீரச்சாவடைந்த வீரவேங்கை கனகசுந்தரம், வீரவேங்கை உதயகுமார் இருவரையும் நினைவு கூறுகின்றோம்.

கிளிநொச்சி
(வருவாய்ப்பகுதி அருகாமையில்)
அளவெட்டி வடக்கு அளவெட்டி

என்றும் நினைவில்
குடும்பத்தினர்

(1979)

# 3ஆம் ஆண்டு நினைவில்

**மேஜர் ராஜன்**

*விக்ரர் கவச எதிர்ப்பு அணி*

(மரியநேசன் அன்றூ மாட்டின்)
ஒட்டகப்புலம் - வயாவிளான்



| மழலையாக | மாவீரனாக |
|---|---|
| 25 - 02 - 1975 | 26 - 06 - 1999 |

*எமக்கு பெருமை சேர்த்த அருமை உறவே*
*எம்மை விட்டு உன் இழப்பு ஆண்டுகள் மூன்றானாலும்*
*எம் நினைவில் இழக்கவில்லை மூன்று வினாடிகளேனும்*
*என்னி வியக்கிறோம் உம் வீர வரலாற்றை*
*எம் தேசம் விடியம் வரை உன் வழியில் பலநூறு வீரர்கள்*
*என்றும் வாழ்கிறோம் சதந்திரமாய் உன் நினைவில்*

குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(7001)

# நீங்காத நினைவுகளில் 2ம் ஆண்டு...

மண்ணில்
1980 . 12 . 17



விண்ணில்
2000 . 06 . 21

**ஓவியா**

*(அகஸ்ரின் ஜஸ்மின் சுதர்ஜினி – சுதா)*

குழந்தையாய்த் தவழ்ந்த
கனவே!
கலைந்து நீ ஓடியதேனோ?
குமரியாய்க் கொஞ்சிய நிலவே!
கொடுமையாய் தேய்ந்ததேனோ?

புரியாமல் ஒடிந்து போனோம்
புயலான பூவே உன்னுள்
புதிரான முடிவு உண்டென்று
புரியாமல் ஒடிந்து போனோம்

ஆண்டுகள் இரண்டென்ன
அழியாதது உன் நினைவு
எம் உறவுகள் உள்ளவரை
உன் உணர்வுகள் ஓயாது

வந்து நீ பிறப்பாயா?
எம் உறவில் ஓவியமாய்
உன் ஆன்மா அமைதி பெற
எம் வேண்டுதல் தினம்
இறைவனிடம்

குடும்பத்தினர்
213, சிவசுந்தரம்வீதி,
வட்டக்கச்சி.

(சி.1977)


## வரிவிளம்பரம்

விற்பனைக்கு வந்து விட்டது.

லாலா சோப், சண்சயின் சோப் எமது வன்னி மண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு வந்து விட்டது.

லாலா-அச்சுவேலி (சி.1926)


### அறிவித்தல்

றேடியன் தொழில்சார் பயிற்சி நிலையத்தில் 23.06.2002 நடைபெற இருந்த சான்றிதழ் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. என்பதனை சகல மாணவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.
நிகழ்விற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும். (2009)


**வன்னி பெருநிலப்பரப்பில்**
ஓவ் செற் முறை மூலம்
நிறைவாக,
விரைவாக,
மிகக் குறைந்த விலையில்,
உங்கள் மனதிற்குப்
பிடித்த வகையில்
உங்கள் வேலைகளை
அச்சிட்டுக் கொள்வதற்கு
நீங்கள் நாட வேண்டிய
ஒரே இடம்
**அழகன் பதிப்பகம்**
*யாழ். சாலை*
*கிளிநொச்சி*

# யாழ் திரும்பிய மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை எப்போது?



யாழ் குடாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பான கணிப்பீட்டின் விபரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண்டிருக்கின்றன அண்மைய வாரங்களில் குடாநாட்டுக்குள் உள்நுழையும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதால் இந்த நிலைமை தோன்றியுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா நிறுவனமும் புனர்வாழ்வு அமைச்சும் இணைந்து மேற்படி கணிப்பீட்டினை மேற்கொண்டிருந்தன எனினும் வன்னியிலிருந்து அண்மையில் யாழ் குடாநாட்டுக்குள் சென்று மீள் குடியமர்ந்து வரும் குடும்பங்கள் தொடர்பான விபரங்கள் எவையும் இக் கணிப்பீட்டில் இணைத்துக் கொள்ளப்படாமலேயே இக் கணிப்பீட்டு வேலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

குடாநாட்டு சனத்தொகையில் தற்போது ஏற்பட்டுவரும் அதிகரிப்பு யாழ் செயலக அதிகாரிகளுக்கு சற்று தலைவலியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆறு ஆண்டுகளுக்கு மேலான அவல வாழ்வுக்கு பின்னர் தமது சொந்த இடங்களுக்கு சென்றுள்ள மக்களுக்கு உடனடியான உதவித்திட்டம் எதனையும் யாழ் செயலகத்தினால் செயற்படுத்த முடியாமல் உள்ளது. மீளக் குடியமர்கின்ற ஒவ்வொரு குடும்பத்திற்கு வழங்கப்பட வேண்டிய 5000 ரூபாவை வழங்குவதற்கு கூட இது வரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை இதைவிட ஒவ்வொரு குடும்பத்தினதும் அசையும் அசையாச் சொத்துகளுக்குரிய இழப்பீட்டுத் தொகையான 25000 ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கும் எதுவித முன் முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி கொடுப்பனவுகள் யாவும் கடந்த காலத்தில் RRAN என்று சொல்லப்படுகின்ற வடக்கிற்கான புனர்வாழ்வு மற்றும் மீள் குடியமர்வு அதிகார சபையினாலேயே மேற்கொள்ளப்பட்டுவந்தன.

கடந்த வாரம் யாழ் செயலக கேட்போர் கூடத்தில் அரச உயர் அதிகாரிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது இதில் கலந்து கொண்ட RRAN அதிகாரிகள் தற்போதைய நிலையில் எத்தகைய செயற்திட்டத்தையும் மேற் கொள்வதற்கு தம்மிடம் நிதி இல்லை என்று கைவிரித்து விட்டனர். இந்த நிலையில் வன்னியில் இருந்து யாழ் திரும்பிய மக்களின் துயரம் துடைக்கக் கூடியதான உடனடி செயற்திட்டம் எதுவும் நடைமுறைக்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லை. இதனால் செயலக அதிகாரிகள் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான மாற்று வழிகள் பற்றி சிந்தித்து வருகின்றனர் எனினும் உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மட்டுமே ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் விடயத்திலும் உரிய ஆவணங்களுடன் வருபவர்களுக்கு மட்டுமே உலர் உணவு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டுகிறது. ஏனையோர் வன்னி சென்று தேவையான ஆவணங்களை எடுத்து வரும்படி பணிக்கப்படுகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் இப்போதெல்லாம் டசின் கணக்கான அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறான நிதி மூலங்கள் உண்டு. இந்த நிறுவனங்களும் கூட மேற்படி மக்களின் விடயத்தில் விரைந்து செயற்படுவதாக தெரியவில்லை. தமது உடமைகள் பலவற்றை இழந்து பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் உடல், உள ரீதியாகவும் கூட மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள மக்களின் உடனடித் தேவைகள் பல நிறைவு செய்யப்படாமல் உள்ளன.

தற்போதைய நிலையில் அரசு நிர்வாகமோ அல்லது சார்பற்ற நிறுவனங்களோ அல்லது இரு தரப்பும் இணைந்தோ நிறைவேற்ற வேண்டிய செயற்திட்டம் பல உள்ளன. குடாநாட்டுக்குள் சென்று மீள் குடியமர்ந்து வரும் மக்களுக்கென விஷேட புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று உடனடியாக தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பல்வேறு எதிர்பார்ப்புக்களுடனும் நம்பிக்கையுடனும் சொந்த ஊருக்கு திரும்பியிருக்கும் மக்களின் துயரம் தணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் தற்போதைய அமைதி சூழலில் தமது வாழ்வின் அவல நிலை அகலுமா என்றெல்லாம் மக்களின் மனங்கள் அங்கலாய்க்கின்றன.

யாழ்ப்பாணத்திற்கு ஸ்ரீலங்கா அரசின் அமைச்சர்கள் வந்து செல்வது என்பது இப்போதெல்லாம் பரபரப்பான செய்தியல்ல அமைச்சர்கள் பலரும் அரசின் உயர் அதிகாரிகளும் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து செல்கின்றனர். ஆனால் செயற்படுத்த வேண்டிய செயற்திட்டங்கள் பல தொடர்ந்தும் நிறைவேற்றப்படாமலேயே உள்ளன. இவ்வாறான நிலைமைக்கு காரணம் நிதி பற்றாக்குறை என்று பதிலளிப்பது தற்போது அரச உயர் அதிகாரிகளுக்கு பழக்கமாகிப் போய்விட்டது.

# யாழில் அநீதியைப் பாதுகாக்கும் நீதி விசாரணை

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவை இரண்டாவது தடவையாகப் பதவியேற்ற தினத்தில் 2000 ஒக்டோபர் 19ம் திகதி யாழ்ப்பாண ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இவரது படுகொலையானது சர்வதேச மட்டத்தில் அதிர்ச்சியையும், அரசாங்கத்தினதும் அதன் ஒட்டுப்படைகளாகச் செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழு ஒன்றின் மீது சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்தப் படுகொலைக்கான சூத்திரதாரிகளைக் கைது செய்ய வேண்டும் என்று உள்ளூரில் இன மத பேதமின்றி அனைத்துத் தரப்பினராலும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. சர்வதேச மட்டத்திலும் ஊடகத்துறை சார்ந்த அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்களால் இது தொடர்பான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

இருந்த போதும் இந்தப் படுகொலை வழக்கில் குறிப்பிடத்தக்கதான முன்னேற்றம் எதுவும் சமீப காலமாக ஏற்பட்டிருக்க வில்லை. அவ்வப்போது சில சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜரா கும்படியாக உத்தரவுகள் இடப்பட்ட போதும் அவர்களில் முக்கியமானவர்கள் தலைமறைவாகி விட்டிருந்தனர். இதனால் விசாரணைகள் இழுபறிக்குள்ளாகி யிருந்த நிலையில் தற்போது திடீரென வழக்கு விசாரணைகள் சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கின்றன.

கடந்த வருடப் பிற்பகுதியில் நிமலராஜன் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஈ.பி.டி.பியின் தீவக இராணுவப் பொறுப்பாளராக இருந்த நெப்போலியன் என்பவரையும் முரளி எனப்படுபவரையும் நீதிமன்றத்தில் முன் நிற்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் இவர்கள் இருவரும் மன்றில் இன்றுவரை ஆஜராகவில்லை. தீவுப்பகுதிகளில் தலைமறைவாக இருந்த இவர்களைக் கைது செய்யப் பொலிசாருக்கு நீதிமன்றம் பலமுறை கட்டளைகளைப் பிறப்பித்திருந்தது.

கடைசிவரை இந்தச் சந்தேக நபர்கள் சரணடையவோ கைது செய்யப்படவோ இல்லை. பொலிசார் பல்வேறு காரணங்களைக் கூறி சந்தேக நபர்களைக் கைது செய்யத் தவறியிருந்தனர். தலைமறைவாக இருந்த காலகட்டத்தில் நெப்போலியன் என்ற சந்தேக நபர் நாரந்தனையின் தேர்தல்பிரச்சாரத்துக் காக சென்ற கூட்டமைப்பினரை தாக்குவதில் முன்நின்று செயற்பட்டிருந்தார். இச்சம்பவத்திலும் இருவர் படுகொலை செய்யப்பட்டிருந்த னர்.

இவ் இரண்டு படுகொலைகள் தொடர்பாகவும் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த நெப்போலியன் நெடுந்தீவில் இருந்து இந்தியாவுக்கு சென்று, இங்கிலாந்துக்கு சென்று விட்டதாக சமீபத்தில் செய்திகள் வெளிவந்திருந்தன. இரண்டு படுகொலைச் சம்பவங்களின் பிரதான சூத்திரதாரி எனக் கருதப்படும் நெப்போலியன் இங்கிலாந்துக்குச் சென்றதாகச் செய்திகள் வெளிவந்த பின்னரே பொலிஸ் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

திடீரென துரிதமடைந்துள்ள விசாரணை நடவடிக்கைகளும், சீ.ஐ.டி பொலிஸ் அதிகாரிகள் நடந்து கொள்கின்ற முறைகளையும் அவதானிக்கின்ற போது பலத்த சந்தேகங்கள் தோன்றுகின்றன. இம் மாதத் தொடக்கத்தில் நீதிமன்றம் விடுத்த உத்தரவில், ஈபிடிபியின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர் மணிபல்லவராஜனை (நிசாந்தன்) கட்சியின் யாழ் அலுவலகத்தில் உள்ள உறுப்பினர்களின் விபரங்கள் மற்றும் கைவசமுள்ள ஆயுதங்களின் விபரங்களுடன் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி விசாரணைக்கு ஒத்துழைக்குமாறும், மூன்று உறுப்பினர்களை விசாரணைக்காக ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டிருந்தது.

ஆனால் இவர் கட்சியின் உறுப்பினர் விபரங்களை மட்டும் சமர்ப்பித்திருந்ததுடன் விசாரணைக்காகத் தேவைப்பட்ட ஜெகன் என்ற நபரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கத் தவறியிருந்தார். இந்த விடயம் சி.ஐ.டி பொலிஸ் அதிகாரியால் நீதிமன்றத்துக்கு சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து ஈபிடிபி வசமுள்ள ஆயுதங்கள் பற்றிய முழுமையான பட்டியலைச் சமர்ப்பிக்குமாறும் நிசாந்தனுக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

அதேவேளை இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் அதிகாரி ஜெகன் என்ற நபர் நெடுந்தீவில் தங்கியிருப்பதாக, தான் அங்கு சென்று ஈபிடிபி அலுவலகம், ஜெகனின் மனைவி, மாமியார் ஆகியோரிடத்தில் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து உறுதிப்படுத்திக் கொண்டதாகத் தெரிவித்ததையடுத்து உதவி அரச அதிபர் மூலம் குறித்த நபரை நீதிமன்றில் ஆஜராக பணிக்கப்பட்டது.

மறுவிசாரணையின் போதும் நிசாந்தன் ஆயுதங்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கவில்லை என்றும் அவர் கட்சி மாநாட்டிற்கு கொழும்பு சென்றுள்ளதாக அறிவித்துள்ளதாகவும் தெரிவித்த பொலிஸ் அதிகாரி கட்சியின் அலுவலகத்தில் உள்ள 19 பேரையும் விசாரணைக்காக அழைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். இதையடுத்து நீதிமன்றம் மில்ரன், ஈசன், மகேந்திரம், சிவராம், சிறி, உதயன், சலீம், கோபி, வர்ணன், ராசிக், திருச்செல்வம், உதயசிறி, சதாசிவம், குமார், கீதா, பாமா, சோதி, விசு, விஸ்வன் ஆகிய 19 பேரையும் குற்றப் புலனாய்வுப் பொலிசார் முன்னிலையில் ஆஜராகப் பணிக்கப்பட்டது.

அத்துடன் ஜெகன் என்ற நபர் மன்றில் ஆஜர்படுத்தப்படாத நிலையில் அவரைக் கைது செய்து மன்றில் நிறுத்தும்படியும் பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டது. கடந்த வாரம் இந்த நபரைத் தாம் கைது செய்ததாகப் பொலிசார் மன்றில் ஆஜர் செய்தனர்.

அத்துடன் விசாரணைக்காக அழைக்கப்பட்ட 19 பேரில் ஆறு பேர் மட்டுமே விசாரணைக்கு சமூகமளித்ததாகவும் குறிப்பிட்டனர்.

இதையடுத்து மன்று ஏனையவர்களை பொலிசார் முன்னிலையில் ஆஜராகும் படியும் நிசாந்தனை உடனடியாக ஆயுதங்கள் பற்றிய விபரங்களோடு ஆஜராக வேண்டும் என்றும் உத்தர விடப்பட்டிருக்கின்றது. ஆனால் பொலிசார் தாம் கைது செய்ததாகக் கூறி மன்றில் நிறுத்திய ஜெகன் என்ற சந்தேக நபர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து தானே வந்து பொலிசாரிடம் சரணடைந்ததாக கூறுகின்றார். தனிப்பட்ட ரீதியிலும் இவ்வாறு தெரிவித்த இவர், நீதிவானிடமும் இதையே தெரிவித்ததாகத் தெரியவருகின்றது.

நீதிமன்றம் பொலிசாரின் அறிக்கையைத் தான் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த அறிக்கையில் பொலிசார் ஜெகனை எங்கே வைத்துக் கைது செய்ததாக குறிப்பிடவில்லை. ஏற்கனவே இவர் நெடுந்தீவில் தான் இருப்பதாக பொலிஸ் அதிகாரி சமர்ப்பித்திருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறாயின் நெடுந்தீவில் வைத்துத் தானே அவர் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். நெடுந்தீவில் சென்று பொலிசார் விசாரணைகளை மேற்கொள்ளவும், முக்கியமானதொரு நபரைக் கைது செய்யவும் பொலிசாரால் எப்படி முடிந்தது?

இது மர்மமானதொரு விடயமாக இருக்கிறது. நெப்போலியன் என்ற சந்தேக நபர் நெடுந்தீவில் தான் இருக்கிறார். அங்கு சென்று அவரை கைது செய்ய முடியாதிருக்கின்றது காரணம் அது கடற்படையோ அல்லது இராணுவத்தினதோ கட்டுப்பாட்டில் இல்லை. ஈபிடிபியின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்கு செல்வது தமக்குப் பாதுகாப்பில்லை என்று யாழ். பொலிஸ் அத்தியட்சகரே முன்னர் தெரிவித்திருந்தார். இப்படியிருக்க இப்போது எப்படி பொலிசார் அங்கு சென்று விசாரணை நடத்தினர்? கைது செய்தனர்? என்ற சந்தேகம் எழுவது நியாயமே.

இந்த வழக்கின் பிரதான சந்தேக நபரான நெப்போலியன் தீவகத்தில் குறிப்பாக நெடுந்தீவில் தான் தங்கியிருக்கின்றார் என நம்பகமாகத் தெரிந்த பின்னர் கூட அங்கு சென்று அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்காத பொலிசார், அவர் பாதுகாப்பாக இங்கிலாந்து சென்ற பின்னர் விசாரணைகளைத் துரிதப்படுத்துகின்றனர். அங்கு சென்று விசாரணைகளை மேற்கொள்கின்றனர் என்றால் இதுவரை காலமும் அவர்களை அங்கு செல்ல விடாமல் தடுத்திருந்த சக்தி எது என்ற கேள்வி எழுகின்றது.

தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள ஜெகன் தான் இந்த கொலை வழக்கில் தடுத்து வைக்கப்பட்ட முதலாவது நபராகும். இவரது சைக்கிள் தான் நிமலராஜன் கொலையின் சூத்திரதாரிகளால் கைவிடப்பட்ட பின்னர் மீட்கப்பட்ட ஒரே ஒரு தடயப் பொருள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சைக்கிளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளைத் திருப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அது தோல்வி கண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போதைய நிலையில் ஈபிடிபி வசம் உள்ள ஆயுதங்கள் பற்றிய முழு விபரத்தையும் சமர்ப்பிப்பதில் அக்கட்சி பலத்த நெருக்கடியை எதிர் நோக்குவதாகத் தெரிகிறது. புரிந்துணர்வு உடன்பாட்டில் வடகிழக்கில் தமிழ் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஈபிடிபி ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கவில்லை. நீதிமன்றத்தில் தற்போதுள்ள ஆயுதங்களின் விபரம் சமர்ப்பிக்கப்பட்டால் ஈபிடிபி பாரிய நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

அவ்வாறு சமர்ப்பிக்காவிட்டால் கூட அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் ஈபிடிபிக்கு எதிராக மாற்றமடையும் பட்சத்தில் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். இதனால் தான் உடனடியாக ஆயுதங்கள் பற்றிய விபரங்களை சமர்ப்பித்துக் கொள்வதைத் தவிர்க்க நிசாந்தன் கட்சி மாநாடு என்று கொழும்புக்கு சென்று விட்டதாக தெரிய வருகின்றது. இது இவ்விதம் இருக்க தற்போது திடீரென விசாரணைகள் துரிதமடைந்துள்ளதன் நோக்கம் என்ன என ஆராய முற்படும்போது பல அதிர்ச்சியான தகவல்களை நாம் எதிர்கொள்ள நேரலாம்.

தற்போது விசாரணைகளில் பிரதான சந்தேக நபர்கள் மற்றும் சூத்திரதாரிகள் என இனங் காணப்பட்டவர்களான நெப்போலியன் மற்றும் முரளி ஆகியோர் தொடர்பான எந்த தகவல்களும் வெளியாகவில்லை. நெப்போலியன் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்று விட்டாலும் இன்னொரு சூத்திரதாரி என கருதப்படும் முரளி என்ற ஈபிடிபி உறுப்பினருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பல மாதங்களாகி விட்ட போதும் பொலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முரளி இராணுவப் புலனாய்வுத் துறையுடன் இணைந்து இயங்குவதாகவும் இவர் அச்செழுவில் உள்ள 51வது படையணித் தலைமையகத்தில் இருப்பதாகவும் கூட தகவல்கள் வெளிவந்திருந்தன. இந்த நிலையில் பிரதான சந்தேக நபர்களை விட்டு விலகியதாக விசாரணைகள் தொடரப்படுவதும், இருக்கநிலை ஏற்படுத்தப்படுவதும் இந்த வழக்கை நிரூபிக்க முடியாததொரு கட்டத்தை நோக்கி நகர்த்துவதற்காக முயற்சிகளாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

பிரதான சந்தேக நபர்கள் இல்லாமல் அல்லது அவர்களை விட்டு விலகியதாக இந்த வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டால் கொலைக்கான திட்டத்தை தீட்டியவர்கள் அல்லது உத்தரவுகளைப் பிறப்பித்தவர்கள் பற்றிய விபரங்கள் வெளிவரச் சாத்தியமில்லை. நீதிமன்ற வழக்கு விசாரணைகள் எப்படி அமைந்தாலும் கூட இந்தக் கொலையை யார் செய்தார்கள் எதற்காகச் செய்தார்கள் என்பதை தமிழ் மக்கள் மட்டுமன்றி சர்வதேசமே அறியும்.

# சர்வதேச மன்னிப்பு சபை பிரதிநிதிகள் அரசியல் துறைப்பொறுப்பாளர் சந்திப்பு

சர்வதேச மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகள் நேற்று வன்னியில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியு ள்ளனர்.

கடந்த செவ்வாய்கிழமை வன் னிக்கு வருகை தந்திருந்த சர்வதேச மன்னிப்புச் சபையினர் நேற்றுக்காலை 10.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களை சந்தித்து உரையாடியுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் முன்னார் உப செயலாளர் நாயகம் உமாகியானூஸ் மன்னிப்புச்ச பையைச் சேர்ந்த கிளவுட் மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபையின் சிறிலங் காவிற்கான ஆய்வாளர் மக்யூட் ஆகியோரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் இரண்டு மணிநேரம் சந்தித்து உரையாடியுள்ளார்.

மாலையில் மனிதநேய கண்ணி வெடியகற்றும் பிரிவினை கிளிநொச் சியில் சந்தித்த இக் குழுவினர்பின்னர் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினரால் நடத்தப்படும் நலவாழ்வுத் திட்டங் களையும் பார்வையிட்டனர்.

# அடுத்த வாரத்தில் பேச்சுவார்த்தை தொடங்குமா? இப்போது உறுதி கூறமுடியாது என்கிறார் ரணில்

சகல இன மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் பிரச்சனைகளிற்கு தீர்வு காணப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தனிநாட்டு கோரிக்கை தீர்வாக அமையமாட்டாது என்பதே அரசாங்கத்தின் நிலைப் பாடாகுமென்றும் தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரங்களில் ஆரம்பிக்கப்படுமென்று உறுதியாக கூறமாட்டேன் புரிந்து ணர்வு உடன் படிக்கையை நடை முறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதனைக் கண் காணிக்க கூட்டுக்குழுவும் அமைக்கப்படு மென்றும் அரசாங்கத் திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிச்சயமாக பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை பேச்சுவார்த்தை தொடர்பாக தேசிய நல்லெண்ணத் தை உருவாக்கவே அரசாங்கம் விரும்பு கின்றதென்றும் இது குறித்து சகல கட்சிகளோடும் அரசாங்கம் பேச்சுவார்த்தை களை நடத்துமென்றும் ஆனால் இறுதி முடிவினை அரசாங்கமே எடுக்குமென்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்கான செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டிருக்கும் போதே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையானது ஒரு ஒழுங்கு முறையின் பிரகாரமே மேற்கொள ளப்படும். இதன்போது பிரச்சனைகள், முட்டுக்கட்டைகள் வரவே செய்யும். இவற்றை பேசித் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளார்.

பேச்சுவார்த்தைகள் அடுத்தடுத்த வாரங்களில் ஆரம்பிக்கப்படும் என்றோ இவ்வளவு காலப் பகுதிக்குள் முடிவடையும் என்றோ அறுதியிட்டுக் கூறமுடியாது. அவ்வாறு கூறுவது சிறுபிள்ளைத்தனமானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குடாநாட்டின் மீள்குடியேற்ற பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தயாராகவுள்ளோம்।

*– மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு பணிப்பாளர்*

எமது யாழ் குடாநாட்டு உறவுகளின் விரைவான மீள் குடியேற்றத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் மனிதாபிமான பணி செய்ய எப்போதும் ஆயத்தமாகவே உள்ளோம். என வன்னிப் பகுதி மனிதாபிமான கண்ணி வெடியகற்றும் பிரிவின் பணிப்பாளர் திரு யோகன் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

இப் பணியினை மேற்கொள் வதற்கான வேண்டுகையை எதிர் பார்க்கிறோம். நவீன உபகரணங்கள், வளங்கள் என்பன மிகக் குறைவாக உள்ளபோதும் எமது உறவுகளுக்கான இப்பணி இன்றைய கால கட்டத்தில் மிக அவசியமானது என உணர்கின் றோம்.

இம் மாத இறுதியில் வன்னிப் பிரதேசத்தில் மீட்கப்பட்ட ஐம்பதாயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட கண்ணி வெடிகள், மிதிவெடிகள் என்பவற்றை ஊடகவிய லாளர்கள், போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் ஆகியோர் முன்னிலையில் தகர்த்தழிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ் குடாநாட்டின் கண்ணி வெடியகற்றுதலுக்காக, மொசாம்பிக் நாட்டைச் சோந்த கண்ணிவெடியகற்றும் பணியாளர்களுடன் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசனை நிறுவனமான ரன்கோ கோப்பரேசன் நிறுவனத்தின் பாதுகாப்புதுறை நிபுணர் டொண் சிமித் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். உபகரணங்களின் வருகைக்காக காத்திருக்கும் இவர்கள் தற்போது சரசாலைப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் தங்கியுள்ளனர். 64 ஆயிரம் பேரைக் காவு கொண்ட இந்த தீவில் இனங்களுக் கிடையேயான யுத்தத்தில் விதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை அகற்ற ஐந்து வருடங்களுக்கு மேல் செல்லும் என அவர் தெரிவித்துள் ளதாக "ரொய்ரர்" செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

கண்ணி வெடிகள், மற்றும் யுத்த நடவடிக்கைகளில் அங்கவீனமானவா களின் தொகை யாழ்குடா நாட்டின் இன்னும் கணக்கிடப்படவில்லை எனவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கி றது. (அ-அ)

# குடாநாட்டு அபிவிருத்தி பணிகளில் தமிழ் ஊழியர்கள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்நிர்மானம் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு சிங்கள ஊழியர்களே பயன்படுத்தப்படு கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப் படுகின்ற ஒப்பந்த வேலைகளி லிருந்து ஏனைய அனைத்து வேலைகளுக்குமான சிற்றூழியர்க ளிலிருந்து அதிகாரிகள் வரை தென்பகுதியிலிருந்து வரவழைக்கப் பட்டு இருப்பதுடன் தென்பகுதி நிறுவனங்களிடமே இவ் வேலைத் திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டும் உள்ளன.

யாழ்குடா நாட்டில் தொலைத் தொடர்பு சேவையினை விருத்தி செய்யும் நோக்கில் தொலைத் தொடர்பு நிலக்கீழ் கேபிள்களை பொருத்தும் வேலை தென்பகுதி நிறுவனமொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன், இதற்காக பெருமளவு சிங்கள ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி தமிழ் மக்களை புறக்கணித்து இருப்பதாக யாழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

**கால் இறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பம்.**




2002 உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. விலகல் முறையில் நடத்தப் படவுள்ள இப் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு ஆசிய கண்டத்தைச் சேர்ந்த தென்கொரியா ஆபிரிக்க நாடான செனகல் என்ப வற்றுடன் பிரேசில், இங்கிலாந்து, ஜேர்மனி, அமெரிக்கா, ஸ்பெயின், துருக்கி ஆகிய எட்டு நாடுகளின் அணிகள் கலந்து கொள்கின்றன.

**Northern Institute Of Technology Management**
**Computer Training Center**
**Mallavi**

பிரிவு:- 02 வகுப்புகள் எதிர்வரும் 25.06.2002 ஆரம்பமாகின்றது

**DIPLOMA IN MS.OFFICE - 2000**

ஒரு வகுப்பில் 25 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்
முதல் 10 மாணவர்களுக்கு முழுக்கட்டணத்தில் 10% இலவசம்
காலம்:- 05மாதம்

Director
NITM
Mallavi

கிளி-மாவட்ட தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்குடிசார் பொறியியல் கற்கைநெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்

மேற்படி கல்வி நிறுவனத்தில் குடிசார் பொறியியல் கற்கைநெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு, கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் ஓர் அவசர கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்
தொ.நு.க. நிறுவனம்.

## யுத்தம் சரணம் கச்சாமி



தேசிய பிக்கு முன்னனியைச் சேர்ந்த –சமாதானத்திற்கும் அமைதிக்கும் எதிரான சுமார் 1000 பௌத்த துறவிகள் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு எதிராக நடாத்திய ஊர்வலத்தில் ஒரு பகுதி–

## இந்திய-அமெரிக்க இராணுவ கூட்டுப்பயிற்சி



ஆக்ராவில் நடைபெற்ற இந்திய அமெரிக்க கூட்டுப்படைப் பயிற்சி நடவடிக் கையில் ஈடுபட்டுள்ள இந்திய அமெரிக்க துருப்பினர் கடந்த 40 ஆண்டுகால பகுதிக்குள் இருநாடுகளும் இணைந்து மேற் கொண்ட மிகப்பெரிய இராணுவப் பயிற்சி நடவடிக்கை இதுவாகும். பனிப்போர் காலத்தில் எதிரெதிர் அணிகளில் இருந்து இரு நாடுகள் இப்போது இணைந்து செயற்படுவதில் தீவிரம் காட்டி வருகின்றன.

## உலகின் மிகப் பெரிய மலர்



மூக்கைத் துளைக்கும் வாசனை கொண்ட அமர்போலஸ் ரிற்றானம் (Amorpho phallus Titanum) என்ற உலகின் மிகப் பெரிய மலர் இதுவாகும். இதனை ரிற்றான அரும் (Titan Arum) என்றும் கூறுவர். லண்டன் கூகியூ தோட்டத்தில் உள்ள இந்த மலர்த் தாவரம் சுமத்திரா மழை வீழ்ச்சி மிக்க காடுகளில் காணப்படும் ஒரு அபூர்வ தாவர வகையைச் சார்ந்ததாகும். இந்த மலர் 9 அடி உயரமானது.

## நாஜிகளை வென்ற நாளின் நினைவாக...



மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் ருஷ்யபடையினர் நடத்திய அணிவகுப்பில் ஒரு கட்டம். கடந்த மாதத்தில், நாஜி ஜெர்மனிக்கு எதிரான போரில் சோவியத் ருஷ்யாவின் வெற்றியைக் குறிக்கும் 57வது ஆண்டு நிறைவு விழாவை ருஷ்யா கொண்டாடிய போது இப்படம் எடுக்கப்பட்டது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.